


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தட்டையான உலகை
உருண்டையே
என்ற போதும்
கட்டையில் போவது
நிதர்சனமே
என்ற போதும்
பட்டைபோட்டு கும்பிட்டாலும்
உழைத்தாலே வாழ்வு
என்ற போதும்
உனக்குள் தான்
நீ இருந்தாய்.
உண்மைகள் உறங்கா ஒருநாளும்.
உண்மை தேடு.
நேர்மை கையிலெடு.
நேர் பார்வை மனத்திருத்து
திரும்பிப் பார்
உயரப்பார்

உயரப்பார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயரப் பார்

## குறுங்கதைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயரப் பார்

## குறுங்கதைகள்

## கதிர். திருச்செல்வம்

ரெயின்போ அச்சகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் விபரம் -

| | |
|---|---|
| நூல் | உயரப் பார் |
| நூல் வகை | குறுங்கதைகள் |
| ஆசிரியர் | திரு. கதிர். திருச்செல்வம் |
| விலாசம் | 48/116, விநாயகபுரம்,கண்டி வீதி திருக்கோணமலை. |
| மொழி | தமிழ் |
| பதிப்பு ஆண்டு | 2019 |
| பதிப்பு விபரம் | முதல் பதிப்பு |
| பதிப்புரிமை | ஆசிரியருக்கு |
| தாள் | 90 gsm பாங் |
| அளவு | 12.5cm X 18.5 cm |
| பக்கங்கள் | 160 |
| அச்சிட்டோர் | ரெயின்போ அச்சகம் திருக்கோணமலை. |
| நூல் விலை | உருபா. 280.00 |
| ISBN | 978-624-95654-0-1 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புள்ளிகளிலிருந்து பிள்ளைகள் வரை 01
நாட்டுக்கோழி அனழேந்தி 04
பனிக்கதிர் 07
நேர்மையான நேர்மை 11
தெளிந்த அறியாமை 14
பிள்ளைகளின் அம்மா 17
காணாமல் போன கானாங்கோழிகள் 21
அவமானம் 24
உயரப்பார் 28
முதலுதவி 30
அவிச்ச மீன் துடிக்கிறது. 32
போலியான உலகு 34
மாற்றம் 37
குழப்படிகாரனின் உரிமட்டை அடி 41
தம்பலின் மகிமை 43
உடனேயே செய்துவிடு 45
திண்மக்கழிவும் மியோவாக்கியாவும் 48
மாட்டிக்கொண்ட முருங்கைமரம் 50
மறுக்கப்படும் மனிதாபிமானம் 53
வெளியரங்கு கூட்டம் 56
மலையுச்சியில் கோழை 57
பொக்குவாய்க் கேள்வி 60
யாதுமாகி நின்று 62
பசு பாலும் தரும் 65
நிதானம் தேவை 67



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| இலைக்கஞ்சி | 70 |
| உனக்குத்தான் போடுவம் | 72 |
| சூரியனில் பரிபூரணன் | 76 |
| குழுகாய மதிப்பு | 81 |
| யாவும் நன்மைக்கே | 84 |
| மாவீரர் குடும்பங்கள் | 87 |
| மதிச்செல்வனும் மாங்காய்ப் பாளமும் | 90 |
| தவறாத குறி | 93 |
| தங்கிலீசும் தமிழும் | 95 |
| மறுபக்கம் | 98 |
| வடிசாராயமும் தென்னையும் | 102 |
| நன்னடத்தை | 103 |
| பள்ளிக்கூடம் போவாணாம் | 107 |
| இதுவும் கடந்து போகும் | 112 |
| கும்பிட்ட வந்தால் காசு | 115 |
| குப்பைகளுடன் மனிதர் | 116 |
| பிள்ள பெத்தவள் | 118 |
| மனம்நிறை ஞானி | 119 |
| ஏற்றம் + துரோகம் = இறக்கம் | 122 |
| வீராவின் சிலாப்பியாக்கள் | 124 |
| மாற்றுங்கள் | 126 |
| திருத்தப்படும் நடைமுறைகள் | 128 |
| அர்ப்பணிப்பு+விடாமுயற்சி = முதல்நிலை | 132 |
| அம்மாவின் கண்ணா மட்டி | 134 |
| கண்ணாடி மண்டயின் உனக்குள் நீ | 138 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படையல்



## தோழர் இராசகிளி

(அமரர் கிருஸ்ணபிள்ளை நாகராசா)

வெலிக்கடைச் சிறையில் 1983 ஆம் ஆண்டு
ஆடியில் படுகொலை செய்யப்பட்ட..

ஈழப் புரட்சி அமைப்பின் ( **ஈரோஸ்** ) தோழமை..

என்னை மனிதம் நோக்கிச் சிந்திக்கத் தூண்டிய
பெருந்தகை...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆசிச்செய்தி

'உயரப்பார்' எனும் தலைப்பில் ஐம்பது குறுங்கதைகள் அடங்கிய, இந்நூலுக்கு ஆசிச்செய்தி எழுதுவதில் மகிழ்கின்றேன். வாசிக்கும் பழக்கம் குறைந்து, குறைந்து குறுஞ்செய்திகளுக்கு மக்கள் ஆர்வம் காட்டுகின்ற காலமிது.

இதையே தன் சவாலாக மேற்கொண்டு விரைவாக வாசிக்கக் கூடியதாகவும் கதையில் வரும் செய்தியை பெற்றுக் கொள்ளக் கூடியதாகவும், இதன் ஆசிரியர் திரு. கதிரவேலிப் பிள்ளை திருச்செல்வம். இக்குறுங்கதைகளை எழுதியுள்ளார். தம்பலகமம் பொற்கேணியைப் பிறப்பிடமாகக் கொண்டவர் திரு. திருச்செல்வம் பல்துறைகளில் அறிவும் அனுபவமும் பெற்றவர்.

'உயரப்பார்' எனும் தலைப்பில் அமைந்துள்ள, இந்நூல் வளரும் சமூகத்திற்கு உதவியாகவும் சவாலாகவும் இருக்கும் என்பது எனது நம்பிக்கை. இது போன்று பலநூல்கள் வெளிவரவேண்டும் சமூகம் பயன்பெற வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

திரு. திருச்செல்வம் எடுத்த, இம்முயற்சியைப் பெரிதும் பாராட்டுகின்றேன். இவர் மேற்கொள்ளும் ஒவ்வொரு முயற்சியும் சமூகத்திற்கு பயன்தர வேண்டுமென இறைவனைப் பிரார்த்திக் கின்றேன்.

**பேரருட் திரு.கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல்**
**திருக்கோணமலை மறைமாவட்ட ஆயர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அணிந்துரை



என் தந்தை வழி நெருங்கிய உறவாய் என் மருமகன் திருச்செல்வத்தை, சிறு குழந்தை முதல் அறிவேன். விளையும் பயிரை முளையில் தெரியும் என்பது போல் சேனையூர் மத்திய கல்லூரியில் படிக்கும் போதே, அடையாளம் காண முடிந்தது. என் மதிப்புமிகு ஆசான் திருவாளர் தா. ஜெயவீரசிங்கம் அவர்களின் விருப்பமிகு மாணவன். இன்று சமூக சிந்தனை மிக்க ஒரு எழுத்தாள னாய், இந்த நூலின் மூலம் அறிமுகமாகிறான்.

கவிதை கட்டுரை, கதை என ஈழத் தமிழ் இலக்கியத்தில் புதிய சிந்தனைகளை பாய்ச்சும் எழுத்தாய் ஆக்கங்கள் அணிசேர்க்கின்றன.

முகநூலில் திருச்செல்வத்தின் தீவிரமான அரசியல் பதிவுகள் ஒரு முற்போக்கு முகத்தை தெளிவு படுத்தி நிற்கின்றன. எழுத்தில் மாத்திரமல்ல செயலிலும் ஒரு சமூகப் போராளியாய் நான் இனம் காண்கிறேன்.

எழுத்து என்பது வாழ்வின் பிரதிபலிப்பே. புனைவுகள் வெறுமையில் இருந்து உருவாவதில்லை. 'மாஓ' சொல்வது போல "மக்கள் இலக்கியமே மகத்தானது" திருச்செல்வத்திடைய எழுத்துக்கள் மக்களுக்கானதாய் வெளித் தெரிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியம் வெறும் புனைவாய் இருக்குமானால், அதற்கு உயிர் இருக்காது. இலக்கியத்துக்கு உயிர் ஊட்டுவது மக்கள் பற்றிய சமூக சிந்தனையே. சமூக பிரச்சனைகளை பேசும்போதே, அந்த இலக்கியம் காலத்தை வென்று எல்லாக் காலத்துக்கு உரியதாய் மாறும். மாக்சிம் கோர்க்கியின் "தாய்" உலக மொழிகள் பலவற்றிலும் அறியப்பட்டதாய் அதை அடியொற்றி நாடகங்களும் திரைப்படங்களும் புதிய வடிவங்களாய் உருப்பெற்றுள்ளன. மக்கள் இலக்கியம் படைப்பவன் எதிர் காலத்துக்கு உரியவனாய் ஆகிறான்.

திருச்செல்வத்தின் குறுங்கதைகள் சம காலத்துக்கு உரியதாகவும் எதிர் காலத்துக்கு உரியதாகவும் நேர்கொண்ட பார்வையாய் உள்ளது. கடந்தகாலத்தின் வாழ்வை பேசி நிகழ் காலத்துடன், தொடர்புறுத்தி எதிர்காலத்துக்குரிய சிந்தனையாய் விரிவடைகிறது.

எழுத்து என்பது பயன்பாடு உடையது. வெறும் ரசனைக்குரியது, மட்டுமல்ல. அது சமூகத்துக்கு வழி காட்டவேண்டும். .திருச்செல்வத்தின் கதைகள் வழிகாட்டியாய் வழி நெடுக நம்மை கதைகள் வழியே அழைத்துச் செல்கிறது.

தம்பலகாமத்தின் புலவர் மரபின் ஒரு கிளையாய் என் இளவலாய் தோற்றம் பெறும் திருச்செல்வத்துக்கு என் வாழ்த்துகள்.

பேராசிரியர். பால. சுகுமார்
மேனாள் புல முதன்மையர்
கலை கலாசார புலம்
கிழக்குப் பல்கலைக் கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முன்னுரை

தம்பலகமத்தைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்டிருந்தவரும், தற்போது திருக்கோணமலையில் வாழ்ந்து வருபவருமாகிய திரு. கதிரவேலிப்பிள்ளை திருச்செல்வம் அவர்கள் தனது கன்னி வெளியீட்டு முயற்சியாக வெளிக் கொண்டு வரும் "உயரப்பார்" குறுங்கதைகள் பாராட்டுக்கு உரியது. இத்தொகுப்பிலே பல்வேறு களச்சூழல்களில் எழுதப்பட்ட ஐம்பது(50) குறுங்கதைகள் அமையப் பெற்றுள்ளன. அத்துடன், இக்குறுங்கதைகள் நூலில் அவர் பல்வேறு காலங்களில் எழுதியவையாகும்.

இத்தசாப்தத்திற்குமுன் சிறுகதைகள் என்பது வெளிவருவதற்குரிய ஊடகங்களாக இருந்தது வாராந்த, மாதாந்த காலாண்டு இதழ்களாகும். அவ்வேடுகளுக்கு எழுத்தாளர்களால் எழுதி அனுப்பப்படும் கதைகள் தேர்வு செய்யப்பட்டு, அவ்வேடுகளில் பிரசுரிக்கப்படும். அவ்வாறு பிரசுரம் பெற்ற மற்றும் பிரசுரம் பெறாத சிறுகதைகளைத் தொகுப்பாகத் தொகுத்து வெளியிடுவதே மரபாக இருந்து வந்துள்ளது.

அதிலிருந்து, வேறுபட்ட ஒன்றாகவே இக்குறுங்கதைத் தொகுப்பை நாம் நோக்க வேண்டியுள்ளது. இத்தசாப்தத்தில் அச்சு ஊடகத்தை விட இணைய ஊடகங்கள் செல்வாக்கு மிகுந்தவையாக மாறியுள்ளன. அதற்கு காரணம், உடனடியாக வெளியிடப்பட்ட நேரத்திலேயே சகலரும் அணுகக் கூடியதாக உள்ளமையேயாகும். இந்தக் காலச்சூழலில் சூழலுக்கேற்ற வகையில் திரு. திருச்செல்வம் அவர்கள் தனது முயற்சியை மேற்கொண்டுள்ளார்.

அவர் வாழ்ந்த கிராமச் சூழல், நகரச் சூழல் மற்றும் அவர் பணி நிமிர்த்தம் தொடர்பு கொண்ட மக்கள், அவதானித்த மக்கள் போன்ற பல அனுபவங்களை எழுத்தில் வடிக்க முற்பட்டதே இக் குறுங்கதைகள் ஆகும். தற்போதைய காலச்சூழலில் நீண்ட வாசிப்பு என்பது அருகி விட்டது எனலாம். அதனையும் நன்கு கருத்திற் கொண்டு எவரும் இலகுவாக வாசிக்கும் வகையில் சிறிய கதைகளாக இவை உள்ளன.

பாத்திர, சூழல் வர்ணனைகள் பெரும்பாலும் தவிர்க்கப் பட்டுள்ளன. சமூகத்தில் தற்போது நிலவிக் கொண்டிருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சினைகளை ஒரு மூன்றாம் நபரின் அவதானிப்பாக இக்கதைகள் பதிவு செய்துள்ளன.

இவர் தனது கதைகளில் வரும் பாத்திரங்களின் பெயர்களை தமிழ்ப் பெயர்களாகவே இருக்குமாறு செய்துள்ளார். இன்றைய சூழலில், எமது பெற்றோர் அர்த்தம் ஏதும் தெரியாத எந்த மொழி என்று தெரியாத பெயர்களைத் தமது பிள்ளைகளுக்கு சூட்டும் நிலையில், எமது மொழியின் நிலைத்திருப்பை உறுதிப் படுத்துவதற்கு முதலில் பிள்ளைகளின் பெயர்களையாவது தமிழில் சூட்ட வேண்டியதன் அவசியத்தை குறிப்பாக உணர்த்தி உள்ளார் எனலாம்.

முகநூலில் எழுதிய கதைகளின் வெளியீடு என்பது திருகோணமலையில் முதல் முயற்சி ஆகும். இம்முயற்சியைத் தொடக்கி வைத்த திரு. திருச்செல்வம் அவர்களை வாழ்த்துகின்றேன்.

அவருடைய கதைகளின் ஊடாக திருகோணமலையின் பாரம்பரிய கிராமங்கள். அந்த கிராம மக்களின் விழிப்புணர்வூடாகவே மீண்டெழ வேண்டும் என்பதை வலியுறுத்துவதுடன், அதற்காக அனைவரும் இணைந்து செயற்பட வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்துகிறார்.

அவருடைய இந்த எதிர்பார்ப்பு எதிர்காலத்தில் நிறைவேறுவதுடன் நிலமும் மொழியும் எமது அடையாளங்கள் என்பதை நாம் அனைவரும் புரிந்துச் செயற்படவேண்டும். திரு. திருச்செல்வம் அவர்களின் இந்த கன்னி முயற்சி வெற்றி பெற வேண்டும்; அதற்கு சகலருக்கும் பொதுவான இறைவனின் அருள் கிடைக்கட்டும்.

அவர் தனது ஆக்க முயற்சிகளை இனிவரும் காலங்களிலும் தொடர்ச்சியாக வெளிக்கொண்டு வரவும், அதனை எமது சமூகமும் இலக்கியவாதிகளும் ஏற்று அங்கீகரித்து ஊக்குவிக்கவும் வேண்டும்.

அவருடைய புதிய இலக்கியப்பணி தொடர எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மு. மோகனேந்திரன்** - NDT(Merit), B.A.(pdn), PGDE(OUSL), M.A.(Tamil), M.A.(Geography), M.Ed(UOJ)
பிரதிக் கல்விப் பணிப்பாளர் - கல்வி முகாமைத்துவம்,
வலயக்கல்வி அலுவலகம்,திருக்கோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்த்துச் செய்தி



திரு. கதிரவேலுப்பிள்ளை திருச்செல்வம் அவர்கள் 'உயரப்பறா' என்ற குறுங்கதைத் தொகுதியினை முதன்முதலில் யாத்து வெளியிடுவது மிக்க மகிழ்ச்சியினை தருகின்றது. இக் குறுங்கதைத் தொகுதியில் ஐம்பது குறுங்கதைகள் அமைந்துள்ளன.

புதுமையான தலைப்புக்களில் இக் கதைகள் படைக்கப்பட்டிருக்கின்றன. மிக எளிமையான வசன நடையில் அனைவரையும் ஈர்க்கக்கூடிய இயல்பான பாணியில் அமைந்திருப்பது தனி அழகு.

இக் கதைகள் மூலம் சிறந்த படிப்பினைகள் வெளிக்கொணரப்பட்டுள்ளன. கதைகள் நீண்டு செல்லாமல், மிகவும் சிறிதாக அமைந்து, அலுப்புத்தட்டாமல் ஆர்வத்துடன் வாசிக்கத் தூண்டுபவைகளாக அமைந்திருப்பது சிறப்புடையது.

வேண்டிய சீர்திருத்தங்களை இக் கதைமூலம் சமூகத்துக்கு கொண்டு வர எடுத்த பங்கினைப் பாராட்டுகின்றேன்.

எமது மாணவரான இவர், இளம் பராயத்தில் கல்வி கற்கின்ற காலத்தில் உடன் கற்ற மாணவர்களை விட புதிய நோக்கத்தில் சிந்திப்பதும், நடப்பதும், ஒரு நேரத்தில் பல விடயங்களை அவதானிப்பதும் கிரகிப்பதும் செயற்படுத்துவதுமாயிருந்தமை இவரிடம் காணப்பட்ட தனிச் சிறப்பு.

விருப்பான கணித பிரிவில் உயர்கல்வி கற்று, பேராதனை பல்கலைக்கழகத்தில் பொறியியல் துறையில் பட்டம் பெற்ற இவர், கலைத்துறையிலும் மிகவும் ஈடுபாடுடையவராவார். அரசியல், சமூக சேவை மற்றும் சமூக சீர்திருத்தங்களிலும் மிகவும் அக்கறை உடையவர்.

இக் குறுங் கதைகள் மூலம் மிக ஆழமான சமூக சீர்திருத்தங்களை ஏற்படுத்த எடுத்த முயற்சிகள் மிகவும் பாராட்டுக்குரியவை.

பேசுவதை விட சமூகப்பற்ற போக்குகளை மிக ஆழமாக அவதானிக்கும் திறமை இக் குறுங் கதைகளில் வெளியாகியுள்ளது.

எழுத்துத் துறையில் காலடி பதித்திருக்கும் திரு. திருச்செல்வம் அவர்கள் மேலும் எழுத்துத்துறையிலும் சமூகத்துக்கும் இவ் உலகத்துக்கும் சேவையாற்றி வரலாறு படைக்க வேண்டுமென இறைவனை வேண்டி வாழ்த்துகிறேன்.

நன்றி

அன்புடன்

க. துரைரெட்ணசிங்கம்
நாடாளுமன்ற உறுப்பினர்
திருகோணமலை மாவட்டம்

க. துரைரெட்ணசிங்கம்
பாராளுமன்ற உறுப்பினர்
(தேசியப் பட்டியல்)
254/6, மோகன் வீதி
திருக்கோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துரை



"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்

மங்காத தமிழென்று சங்கே முழங்கு"

உயரப்பார் என்னும் தலைப்பில் சிறுகதைகள் ஒருங்கு சேரமைந்த நூலினை வெளியிட முன் வந்த எனது நண்பன் திருச்செல்வம் அவர்களுக்கு தமிழுலகம் சார்பாக முதற்கண் நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில், மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். உண்மையில் திருச்செல்வம் அவர்களின் முயற்சி காலத்தினால் செய்த பணியாகும்.

பல தசாப்தங்களாகத் தொடரும் எங்கள் நட்பின் பின்புலத்தில் நண்பன் திருச்செல்வம் அவர்களின் நுண்புலத்தினையும் தமிழ்மொழி ஆற்றலினையும் பேச்சாற்றலையும் நான் நன்கு அறிவேன். ஒரு புத்தகத்தினை எழுதக்கூடிய அறிவும் ஆற்றலும் எனது நண்பனிடம் போதியளவு உள்ளது என்பதையும் நான் நன்கு உணர்கின்றேன்.

முகப்புத்தகத்தில் அவர் பல்வேறு சிறுகதைகளை பதிவேற்றம் செய்த போது, அவற்றில் உயிரோட்டம் இருப்பதனை நான் உணர்ந்து அவர் எழுதிய சிறுகதைகளை எல்லம் தொகுத்து ஏன் புத்தகமாக வெளியிடக்கூடாது என அவரிடம் கேட்பதற்கு முற்பட்ட வேளையில், கதைகளைத் தொகுத்து ஒரு புத்தகத்தினை வெளியிடப் போகின்றேன் மச்சான் எனக்கு வாழ்த்துச் செய்தி ஒன்று உன்னிடமிருந்து வேண்டும் என அவர் என்னிடம் உரிமையுடன் கேட்டமை, எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியாகும்.

எனது நண்பனின் புத்தகத்திற்கு வாழ்த்துரை எழுதும் பாக்கியம் எனக்குக் கிடைத்ததையிட்டு பெரும் மகிழ்ச்சியடைகின்றேன். அவர் இது போன்ற பல புத்தகங்களை எழுதும் வாய்ப்பினை இறைவன் அவருக்கு வழங்கவேண்டும் என பிரார்த்திக்கின்றேன். அவரது பின்வரும் கவிதை வரிகள் முன்னேறத்துடிக்கும் ஒவ்வொரு இளைஞனுக்கும் ஒரு சஞ்சீவி மருந்தாக அமையட்டும்.

உண்மைகள் உறங்கா ஒருநாளும்
உண்மை தேடு
நேர்மை கையிலெடு
நேர் பார்வை மனத்திருத்து
திரும்பிப்பார்
உயரப்பார்.....உயரப்பார்.......

**பேராசிரியர். கோ. அமிர்தலிங்கம்(Ph.D)**
பொருளியல்துறை, கொழும்புப்பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துரை



"உயரப்பாயாமல் உயரப்பார்"

அடக்குமுறைக்கு உட்பட்ட ஈழத் தமிழ்மக்களின் பிரதிநிதியாகவும், அதேநேரம் போராளியாகவும் திருச்செல்வம், தனது அநுபவங்களை, இப்பிரதியில் பதிவிடுகிறார். நேரடியான மற்றும் கண்டும் கேட்டும் உணர்ந்த கதைகளின் அநுபவங்கள் தெளிந்த நீரோடை போன்று பரவுவதை, இதில் காண முடிகிறது.

மூன்று தசாப்தகாலமாக உயிர்ப்புடன் இயங்கிய தோழர் உயரப்பாயக்கோராமல் "உயரப்பார்" எனகோருவது அவரது வெற்றிதோல்விக்கு அப்பாலான விழிப்புணர்வை வாசகர்களுக்கு விதந்துரைக்கிறது.

இவரது கதைகளில் தமிழ்ச்சூழலில் எழும் பழைய கேள்விகளுக்கு புதிய பதில்களை கண்டடையும் முயற்சியைப் பார்க்கிறேன். பேரினவாத அரசியலாலும் இராணுவ மேலாண்மையாலும் ஒடுக்கப்பட்ட மக்கள் புதிதாக பெரு மதவாத பூதத்தால் நசுக்கப்படுகிற புதிய சூழலில், இவரது இக்குறுநூல் இன்று அவசியப்படுகிற புதிய போராட்ட முறைமையினை கண்டடைவதற்கு துணை நிற்கும்.

அரை நூற்றாண்டுகளுக்கும் மேலாக மாறிமாறி செயல்பட்டு வருகிற தமிழ்த் தேசியமையங்களின் கண்களை மேலும் அகலத் திறப்பதற்கு உரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநுபவங்களின் தொகுப்பை திருச்செல்வம் நுணுக்கமாக வெளிக் கொணர்ந்து உள்ளார்.

சாமானியர்களின் வாழ்விடர்களை உண்மை நிகழ்வுகளின் கதைகளினூடாக சொல்லியிருப்பது ஒரு சமவெளிநடைப் பயணத்தில் இலக்கை அடைய இன்னும் எவ்வளவு தூரம் செல்லவேண்டுமோ என்று எண்ணும் பயணியின் மனோநிலைக்கு நம்மை இட்டுச்செல்கிறது.

"உடனேசெய்துவிடு" என்ற தலைப்பிலமைந்த பதிவு போன்றன. ஆலோசனை வடிவத்தைத் தருவதும் வித்தியாசமாக இருக்கிறது. தெளிந்த அறியாமை போன்ற தலைப்புகள் கவிதைத்தன்மையுடையன மட்டுமல்ல தெளியாத அறிவின் ஒரு மழுங்கிய முனையை தீட்டுவதற்கான அறிவைத் தெளிவாக்குகிறது.

திருச்செல்வத்தின் இலக்கிய முயற்சியானது, இணைய எழுத்துகளில் ஆர்வம் காட்டுகிற இளைய தலைமுறைக்கு ஊக்கமளிக்கின்றது.

இவரது எழுத்து முயற்சிகள் மேலும் பரிமாணம் பெறவும், பரிணமிக்கவும் வாழ்த்துகிறேன்.

**தோழர்பசீர்சேகுதாவூத்**
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்.
மட்டக்களப்புமாவட்டம்
(ஈரோஸ் தோழமை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துச்செய்தி



"உயரப் பார்"- உயர் சிந்தனைக்கான அழைப்பு

"வரப்புயர" என்ற தமிழ்ப்புலவர் ஔவையின் மன்னருக்கான வாழ்த்தினை நினைவுபடுத்துவதாக இன்றைய மனித சமுதாயத்தின் ஒட்டுமொத்த முன்னேற்றத்துக்கான அறைகூவலாக "உயரப்பார்" என்ற குறுங்கதை களை மதிப்புக்குரிய திரு. திருச்செல்வம் அவர்கள் வெளியிடுவதை இட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். தலைப்பே பெயராக அல்லாமல், செயலுக்கான விளிப்பாக அமைந்துள்ளமை கதைகளின் ஆழத்தை அறிய வாசகர் மனங்களை அவாக் கொள்ளச் செய்யும் ஒரு நுட்பமேயாகும்.

இக்குறுங்கதைகள் வெறும் பொழுது போக்கிற்காக, எழுதப்படாமல், இனிய தமிழில் இலகுவாக யாவரும் விளங்கிக்கொள்ளும் வகையில் எளிமையாக, சமூகத்தில் நல்ல மாற்றங்களை ஏற்படுத்தவேண்டுமென்ற நோக்கோடு காலத்தின் தேவை கருதி எழுதப்பட்டுள்ளமை மிகவும் பாராட்டத்தக்கது.

ஒரு பொறியியலாளராக, சமூக சேவையாளராக, வழிகாட்டியாக, கலைஞனாக தன்னை தடம் பதித்த ஒருவர் தன்னால் தன் சமுதாயத்திற்கு எழுத்தாக்கத்தின் மூலம் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற அவா இவரது மொழிதலில் இழையோடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவரது சிந்தையின் உயர்வு செயல் வடிவம் பெற, இவரது குறுங்கதைகள் தூண்டுதலாக அமைய மனம் நிறைவாய் மகிழ்ச்சி பொங்க வாழ்த்துகின்றேன்.

திருமதி. சுதாகரி மணிவண்ணன்.
முதல்வர் - மட் / குமாரவேலியர் சித்தி விந
வித்தியாலயம், 'செங்கலடி (முகநூல்நட்பு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துச் செய்தி



"உயரப்பார் - உயரட்டும்"

பேனாமுனையின் பெரும்பணி உணர்ந்து
திண்மக் கருத்துக்களை எழுத்துருவாக்கி
புரட்சிப் பார்வையும் புதுமை சிந்தையுமாய்
தொகுத்துவழங்கும் எழுத்துப்பணிக்கு வாழ்த்துகள்

சுந்தரத் தமிழில் புதுமைப்படைப்பாய்
எந்திரத்தில் பதிவாகிய உம் எழுத்துக்கள்
சரித்திரம் பல படைத்திடவே
வியந்து மகிழ்ந்த வாழ்த்துகள்.

மொழியழகின் சுவை அறிந்து
ஏந்தல்கள் வழிமாறா
பல்கிப் பெருகி வழிந்தோடும்
உம் பேனாமுனைக்கு வாழ்த்துகள்.

உய்ய வந்த மனித வாழ்வில்
கை விதைத்த உம் அகரத்திற்கு
உரமிட்டு மேன்மை பெற
கோடான கோடி வாழ்த்துகள்.

சமுகத்தின் போக்குதனை
பிம்பம் காட்டும் உம் படைப்புகள்
பிறழ்வுறாப் பாதைதனில்
படிக்கட்டாய் உயர்ந்திட வாழ்த்துகள்.

உம் சிந்தை முத்துக்களை மாலையாக்கி
அவைதனிலே அரங்கேற்றி
ஆனந்தம் காணும் திருநாளதனில்
உம் எழுத்துப் பணிக்கு வாழ்த்துகள்!

**திரு. கு. குணநாதன்,**
பிரதேச செயலாளர்,
ஈச்சிலம்பற்று பிரதேச செயலகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாழ்த்துச்செய்தி

சிறுகதை உணர்வுகளை கச்சிதமாகவும் காட்சிகளை கண்முன்னே ஒரு சில வார்த்தைகளில்மனதில் ஆழமாக பதித்து விடும்.அந்த யுக்தியை எழுத்தாளர் தெரிந்து இருந்தால், அவருடைய ஆக்கங்கள் காகிதங்கள் கிழிந்தாலும் வாசகன் மனதை விட்டு அழியாது.ஒருகாலகட்டத்தை சமூகத்தின் நிலையை காலாசாரத்தை அடுத்த தலை முறைக்கு கடத்திச்செல்வது இவைதான்.

ஒரு கதை ஒருவர் மனதில் பதிந்து விட்டால், அடுத்தவன் வாசிக்கும் வழக்கம் இல்லாமல் போனாலும், வாய் மொழியாக சென்று சேரும். அந்த வகையில் கதிரவேலிப்பிள்ளை திருச்செல்வம் அவர்களின் கதைகள் "உயரப்பார்" என்ற தலைப்பின் எளிமையில் மனங்களில் பதிவதோடு, அத்துமீறி போகாத கற்பனையால் வாசகர்களைகவரும் என்பதில் சந்தேகம் இல்லை. இவருடைய கதைகளின் போக்கு இவரின் வாசிப்பு வளத்தையும் சமூகத்தையும் ஒரு விடயத்தை பார்க்கும் விதத்தையும் தெளிவாகச் சொல்லி இருக்கின்றது என்பதை இதை வாசிக்கும் ஒவ்வொருவரும் புரிந்து கொள்வார்கள். இவரின் இந்த நூல் வாசகர்கள் மனதில் நிலைத்திருக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது.

திரு. கதிரவேலிப்பிள்ளை திருச்செல்வம் அவர்களின், இந்த நூல் வெற்றியடைய எனது மனமார்ந்த வாழ்த்துகள்.

கவிதாயினி திருமதி. பாத்திமா சிம்றா
வானொலி, தொலைக்காட்சி அறிவிப்பாளர் - கொழும்பு.
(முகநூல்நட்பு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனதுரை

**"உயரப்பார்"** குறுங்கதையினை எனது கன்னி இலக்கியப் படைப்பாக வெளிக் கொணருவதில் மகிழ்வடைகின்றேன்.

ஓர் இலக்கியம் என்பது காலக் கண்ணாடி என்பார்கள். இலக்கியம் படைக்கப்படுகின்ற காலத்தில் படைக்கப்படுகின்ற குமுகாயத்தின் பொருண்மிய வாழ்வியலை காட்டி நிற்க வேண்டும். அந்த வகையில் **உயரப்பார்** அமைந்திருக்கும் என நம்புகின்றேன்.

இந்நூலின் சொல்லாடல்களில் இயலுமானவரை **பிறமொழிக் கலப்பினைத்** தவர்த்திருக்கின்றேன்.

இந்த குமுகாயத்தில் நடைபெற்ற, நடைபெறுகின்ற, நடைபெற வேண்டிய விடயங்களை எனது பார்வையில் குறுங்கதைகளாக படைத்திருக்கிறேன். எனது மாமா பால.சுகுமார் அவர்கள் வழங்கிய ஆலோசனைகள் குமுகாயத்தின் பல பகுதிகளையும் உள்ளடக்கி "உயரப்பாரில்" கதைகளாகின.

முதலாவது கதையினை எப்படி எழுதுவது என எண்ணிக் கொண்டிருக்கும்போது மாமா பால.சுகுமார் அவர்கள் என்னுடன் தனது சிறு பராய நினைவுகளை மீட்டிருந்தார். அவரது நினைவுகளை வைத்து முதலாவது கதையினை எழுதினேன். இந்நூலில் **அர்ப்பணிப்பு + விடாமுயற்சி = முதல்நிலை"** என்ற தலைப்பில் அக்கதை உள்ளது.

இன்றைய காலகட்டத்தில் வாசிப்பின் நிலையினை எண்ணி கவலை கொள்ள வேண்டிய நிலையிலிருக்கும் எமக்கு இந்நூல் வாசிப்பில் சிறு தூண்டலையாவது ஏற்படுத்தும் என நம்புகின்றேன். முகநூலிலே இவற்றைப் பதிவிட்ட போது வாசகர்கள் வழங்கிய ஆதரவும் ஊக்குவிப்பும் இதனை மெய்ப்பியத்து நின்றன. தொடர்ந்தும் உங்கள் ஆதரவினையும் ஒத்துழைப்பினையும் எதிர்பார்த்தவனாக... நூலுருவாக்கத்தில் உதவியவர்களுக்கு நன்றி தெரிவித்தவனாக .......

**க.திருச்செல்வம்JP**
நூலாசிரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புள்ளிகளிலிருந்து பிள்ளைகள் வரை

அம்மா சந்தானலெட்சுமி நித்திரையிலிருந்து எழுந்து மணிக்கூட்டைப் பார்த்தாள். சரியாக ஐந்து முப்பத்தைந்தினை, அது காட்டி நின்றது. திடுக்கிட்டவளாக, பக்கத்து அறையில் படுத்திருந்த பிள்ளைகள் மூவரையும் "எழும்புங்க, எழும்புங்க" என்று ஏதோ ஆபத்து நேரத்தில் அழைப்பது போன்ற தொனியில் எழுப்பினாள். தாமதமாகினால் அம்மா சந்தானலெட்சுமி அப்படித்தான் எழுப்புவது வழக்கம்.

இந்தச் சத்தத்தில் திடுக்கிட்டு, எழுந்த அப்பா, "எத்தின தரம் உனக்குச் சொல்லியிருக்கிறன். இப்பிடி எழுப்ப வேணாம், காலயில சத்தம் போடாத எண்டு" என அம்மாவிற்கு திட்ட, அம்மாவின் சத்தம் வழமைபோல் நின்று போனது. சந்தானலெட்சுமியின் அருகில் வந்த அப்பா காத்தமுத்து "இஞ்சபார் பிள்ளைகள அவங்கட பாட்டில வளரவிடு. அவங்களுக்கு தாங்களாக எழும்ப வேணும் எண்ட எண்ணம் வரோணும். ரெண்டு மூணு நாளைக்கு விட்டுப்பார். பிந்தி எழும்புங்கள். பிறகு பள்ளிக்கூடத்துக்குப் பிந்திப் போகக்கொள்ள அங்க படுற பாட்டில வெக்கத்தில அவங்களே வலிய எழும்புவாங்க" அமைதியாக கேட்டுக் கொண்டிருந்தாள் சந்தானலெட்சுமி.

"நாளையில இருந்து சுடுதண்ணி நான் வைக்க மாட்டன் விரும்பினா ஆரெண்டாலும் சுடவச்சு குளிச்சுத் தொலைங்க" அப்பாவின் அமைதியான அறிவுரைகளின் வெளிப்பாடு அம்மாவின் வார்த்தைகளிலும் குரல் தொனி யிலும் தெரிந்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாளயில இருந்து நான் எழுப்பவும் மாட்டன், எத்தின மணிக்கெண்டாலும் எழும்புங்க, எத்தின மணிக் கெண்டாலும் பள்ளிக்கூடம் போங்க, எப்பிடிப்போனா எனக்கென்ன, மாடுமாரி நான் சாகிறதால தானே எல்லாரும் என்னில எரிஞ்சு விழுதுகள்." மனதின் வெளிக் கிடக்கை தொடர்ந்தது.

"சந்தானம், ஒண்டும் நீ செய்யாம இரு. சாப்பாட்ட எடுத்து வை மூண்டு பேருக்கும், பிள்ளைக்கு மட்டும் அதோட தலைய இழுத்து கட்டிவிடு. வேற எதுவும் செய்யாத, பிள்ளைகள் தாங்களாக எல்லாம் செய்வாங்க." அப்பாவின் பதில் அம்மாவை கடும் கோபத்திற்குள்ளாக்கினாலும், அடக்கிக் கொண்டு "இந்த மனுசன் ஒரே இதத்தானே சொல்லுது. நாளையில இருந்து அதயே செய்வம்." என்ற முடிவுடன் அமைதியாக, பிள்ளைகளை பள்ளிக்கு அனுப்பும் நடவடிக்கைகளில் பரபரப்பானாள்.

மறுநாள், கடைக்குட்டி தேன்மொழிதான் பிள்ளை களில் முதலாவதாக எழுந்தாள். நேரத்தைப் பார்த்தாள் மணிக்கூடு ஏழு நாற்பதைக் காட்டியது. விறைத்துப் போனாள்.

அண்ணா இருவரையும் அவளே எழுப்பினாள். இருவரும் துடித்தெழுந்து, அம்மாவை முறைத்துவிட்டு பள்ளியில் தாமதமாக சென்றமைக்காக, வலது கையில் இருவருக்கு பிரம்படியும் தேன்மொழிக்கு குப்பைகள் பொறுக்கும் தண்டனையும் கிடைத்ததை கோபத்துடனும் கவலையுடனும் அம்மாவிடம் மதியம் உணவு உண்ணும் போது, பிள்ளைகள் சொல்லிக்கொண்டிருக்க அம்மாவின் கண்களில் கண்ணீர் வரத்தொடங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ர பிள்ளையை, நான் ஒரு நாள்கூட வீடு கூட கூட்டவிடல்ல, இந்த மனுசன் இண்டைக்கு குப்ப பொறுக்க வச்சிருக்கார்." மனதில் பொருமினாள்.

மறுநாள், மறுநாள் தாமதங்கள். ஒரு கிழமையின் பின்னர் ஐந்து மணியாகி நாலரை மணிக்கு என காலை எழும்புதல் வழமைக்கு வந்தது. எல்லா வேலைகளும் பிள்ளைகளே செய்வதனால் காலையில் அம்மாவின் சத்தம் இப்போது பெரிதாக கேட்பதில்லை.

பதற்றமற்ற வாழ்வை நோக்கி குடும்பம் நகர்ந்து கொண்டிருந்தது. தேனீர் குடித்ததும் குவளைகளைத் தாமாக கழுவி வைப்பதும், சாப்பிட்ட பின் சாப்பிட்டத் தட்டை கழுவி வைப்பதும், ஏன் தமது உடுப்புகளை தாங்களாகவே துவைக்கத் தொடங்கி விட்டார்கள் என்றால் பாருங்களேன்.

"இந்த மனுசன் சொல்றத கேட்கயும் வேணும் போல தான் கிடக்கு." என இடைக்கிடை சந்தானலெட்சுமி யின் மனதில் சிந்தனை வந்து போகும்.

பிள்ளைகள் மூவரும், இப்ப தமக்குள் சண்டை பிடிப்பதெல்லாம் குறைந்து, தமது பணிகளை தாமாகவே செய்யத் தொடங்கியிருந்தார்கள்.

"வீடுகளில் வாய்ப்புகள வழங்காம தங்கட பிள்ளைகள்ற எதிர்காலத்தை தாமே பாழாக்கிறம் எண்றத எப்ப பெத்தவங்க உணர்றாங்களோ அப்பதான் நம்மட பிள்ளைகள் சமுதாயத்துக்கு ஏற்ற பிள்ளைகளாக வரும்" என கிராம அபிவிருத்திச் சங்கத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட சிரமதானத்தில் இரு மகன்களுடன் கலந்து கொண்டு, நிறைவில் சங்கத்தின் தலைவரிடம் கூறிக் கொண்டே வீட்டை நோக்கி நகரலானார் காத்தமுத்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டுக்கோழி அனழேந்தி

நீண்ட நாட்களின் பின்னர் எதிர்பார்த்துக் காத்திருந்த மழை கொட்டோ கொட்டென கொட்டுகின்றது. புழுதி வாசம் மங்கலவல்லிக்கு இதமாக இருந்தது சிறுவயதில் மழை நேரங்களில், தோழிகளுடன் மழையில் நனைந்து விளையாடிய நினைவுகள் வந்து, மனதை மகிழ்ச்சிப் படுத்தியது இந்த மழையைத் தான் அவள் துணைவர் அனழேந்தி எதிர்பார்த்திருந்தான்.

துடிப்புள்ள புதிதாக திருமணமான இருபத்திமூன்று வாலிபர்கள் இணைந்து முட்டைக்கோழி வளர்ப்பது என திட்டமிட்டார்கள். அவர்கள் அனைவரும் "அகமகிழ்" என்ற அரச சார்பற்ற நிறுவனத்தினால் ஒழுங்கமைக்கப்பட்ட வவுனியாவில் நடைபெற்ற முட்டைக்கோழி வளர்ப்பு சம்பந்தமான பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டவர்கள்.

பயிற்சி நிறைவில் அனழேந்தி இக்குழுவின் நியமிக்கப்படாத தலைவனான் அவனது கருத்துக்களுக்கு ஏனையோர் இயல்பாகவே தலைசாய்த்தனர். அவனது வழிகாட்டலில் முட்டைக்கோழி வளர்ப்பது என்ற திட்டம் உருவானது.

'அகமகிழ்' அமைப்பினர் அவர்களது திட்டத்திற்கு நிதி வழங்குவதன், மூலமாக பங்களிப்பச் செய்ய முன் வந்தார்கள்.

ஒவ்வொருவரும் தனித்தனியே கோழிப்பண்ணை நடத்துவது எனவும் அனழேந்தி அனைவருக்குமான கோழித்தீனியை வழங்குவதென்ற நடைமுறைத்திட்டம் அனைவராலும் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோழித்தீனி தயாரிப்பதற்குத் தேவையான மூலப் பொருட்களில் சோளம், பச்சையரிசித் தவிடு, கருவாடு, சிப்பித்தூள், சோயா என்பன முக்கியமானவை. சில இரசாயனங்கள் கொழும்பிலிருந்து பெற்றுக் கொள்வதற் கான தகவல்கள் பயிற்சியின் போது கிடைக்கப் பெற்றிருந் தன.

சோளம் செய்கை பண்ணுவதன் மூலமாக நமது பகுதி விவசாயிகளுக்கு நல்ல சந்தையை பெற்றுக் கொள்வதுடன், நமக்கும் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள முடியும் என்ற ஆக்கபூர்வமான நினைவழகனின் ஆலோசனை பெருமதிப்புக்கு உள்ளானது.

சோளச்செய்கை தொடங்குவதற்கான எதிர்பார்த் திருந்த மழைதான் இன்று பெய்து கொண்டிருக்கிறது. ஏற்கனவே பல விவசாயிகளைச் சந்தித்து, சோளத்தின் தேவையை அனழேந்தி தெளிவுபடுத்தியிருந்தான்.

ஒவ்வொருவரும் எழுநூறு கோழிகள் வளர்ப்பதற்கு உதவிகள் கிடைக்கப்பெற்றன. ஒரு மாதம் குஞ்சுகளுக்கான தீனி கொழும்பில் வாங்கினார்கள். பின்னர், அனழேந்தி அனைவருக்கும் தீனியினை கையினால் அளவுத்திட்டத்திற்கேற்ப தயாரித்து வழங்கி னான்.

சரியாக மூன்றரை மாதத்தில், ஒரு சில கோழிகள் முட்டையிடத் தொடங்கியிருந்தன. சிறப்பான உணவுத் தயாரிப்பே விரைவான முட்டையிடலுக்கான காரணமாக இருந்தது.

நான்காவது மாதத்தில் நாளொன்றிற்கு அண்ணள வாக பதினோராயிரம் முட்டைகள் சந்தைப்படுத்த வேண்டிய பொறுப்பு தலைவரின் தலையில் கட்டப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளிக்கூடங்களில் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு சத்துணவுத் திட்டம் நடைமுறையில் இருப்பதை அனழேந்தி அறிந்து கொண்டான். வலயக்கல்விப் பணிப்பாளரை சந்தித்துப் பேசினான். சத்துணவுக்குப் பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளரின் ஒத்துழைப்பினைப் பெற்றுக்கொள்ளுமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவுறுத்தினார்.

அவரது வழிகாட்டலில் பதினாறாயிரம் மாணவர்களுக்கு கிழமைக்கு இருநாள், மாதமுடிவில் கொடுப்பனவு, சந்தை விலையில் ஐம்பது சதம் குறைவு என தனது திட்டத்தைச் சொன்னதும் பள்ளி முதல்வர்கள் கூட்டத்திற்கு வந்திருந்த அனைவரும் உவகையுடன் ஏற்றுக் கொண்டனர்.

உற்பத்தியில் அரைவாசி முட்டைகள் பள்ளிக் குழந்தைகளுக்குச் சென்றன. மிகுதி மொத்த வியாபாரிகளுக்கு குறைந்த இலாபத்துடன் விற்பனையாகின.

இந்த வாலிபர்களின் முயற்சியினை கேள்வியுற்ற விவசாய, கால்நடை அபிவிருத்தி அமைச்சர் அவர்களுக்கு உதவவேண்டும் என்ற நோக்கில், தனது அமைச்சின் மூலமாக ஒதுக்கப்படும் நிதியிலிருந்து கோழித்தீன் தயாரிக்கும், சிறிய இயந்திரம் ஒன்றினை வழங்கினார். அவ்வுதவி பேருதவியாக இருந்தது அனழேந்திக்கு.

இரண்டு வருடத்தில், ஒவ்வொருவரும் இரண்டாயிரம் கோழிகளைக் கொண்ட பண்ணைக்கு சொந்தக்காரர்களாக இருந்தனர். மகிழ்ச்சியான வாழ்க்கை நிறையக் கிடைக்கும் வருமானத்தினாலும் அனழேந்தியினாலும் கிடைக்கப்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பனிக்கதிர்

நான்கு மணிக்கே சந்தியாப்பிள்ளை எழுந்து விட்டான். "செல்லத்தம்பி ஐயாட வயல் நாலு ஏக்கரும் முந்தநாள் மட்டக்களப்பில இருந்து வந்தவர்கள் வெட்டின வங்க. வெட்டிய உப்பட்டியள் நல்லா வெயில்ல காய்ஞ்சு இருந்தது.

நேற்று உப்பட்டிக்கயிறு இல்லாம தேடித் திரிஞ்சு செல்வநாயகம் மாமாட்ட இருக்கு எண்டு நான் சொல்லி தான் சின்னத்தம்பி ஐயா போய் வாங்கி வந்து கட்டுத் தூக்கி முடிக்கக்கொள்ள இரவு ஏழு மணியாயிற்று.

தட்டத் தனியத்தான் சின்னத்தம்பி ஐயா களம் செருக்கினவர். என்ன மாறி கெதியா செருக்கினார் தெரியுமா? கட்டுகளை சூடு வைக்கத் தேவையில்ல உதறிப்போடுங்க, சக்கரயற்ற உழவு இயந்திரம் வரும் எண்டு சொல்ல, வெள்ளாம வெட்டின ஆக்களுக்கு மகிழ்ச்சி.

சூடு வைக்கிற வேல இல்ல எண்டு இரத்தினசிங்கம் பெரியப்பாட்ட "வேலகாரன் கம்பெல்லாம்" வாங்கிற்றுப் போனவர்.

சூடு அடிச்சிருப்பாங்க, இரவு கட்டுத் தூக்கினதால கதிர் கனக்க விழுந்து கிடக்கும். பனிக் கதிர் பறக்கணும். கெதியா தேத்தண்ணிய தா அம்மா" என்று மூச்சு விடாமல் தான் விரைவாக தன் வீட்டுக்கு அண்மையிலிருக்கும் சின்னத்தம்பியரின் வயலில், தனது சிறிய வருமானத்தை தேடுவதற்கு தயாரானான் சந்தியாப்பிள்ளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தியாப்பிள்ளை குடிகார அப்பாவிற்கும் பொறுப்புள்ள அம்மாவிற்கும் பிறந்த நான்காவது பிள்ளை. வயல் அறுவடை காலங்கள் அக்குடும்பத்திற்கு மகிழ்ச்சி யான காலம்.

நான்கு பிள்ளைகளும் கதிர்பொறுக்கி வந்து தங்களது வீட்டுக்குப் பின்னாலிருக்கும் குடிலில் உரப் பையில் போட்டு வைப்பார்கள். கிழமைக்கு ஒரு தடவை மாலைநேரத்தில் இரு அண்ணன்களும் தடியினால் கதிர்களை அடிப்பார்கள். நெல்மணிகள் கீழே விரித்திருக்கும் படங்கில் எஞ்சியிருக்கும் அவற்றை அம்மாவும் அக்காவும் சுளகினால் புடைப்பார்கள். சில நேரங்களில், காற்றில் தூற்றுவார்கள். கிடைக்கும் நெல் சாக்கில் பத்திரமாக அவர்களது உணவிற்காகவும் அப்பாவின் குடிக்குத் தேவையான முதலிற்காகவும் சேமித்து வைக்கப்படும். காலையில் கஞ்சி உணவாக அம்மா செய்து கொடுப்பாள்

கடைக்குட்டி சந்தியாப்பிள்ளையை படிக்க வைக்க வேண்டும் என்பதில் அம்மாவிற்கும் சகோதரங்களுக்கும் ஆசை. பள்ளிக்குப் போகச் சொன்னால் விருப்பமில்லாமல் அழுவான். மூத்தவன் செல்வநாயகம் தன் அதிகாரங் களைப் பயன்படுத்தி பள்ளிக்கு அனுப்பி வைப்பான்.

வகுப்பில், தனது சுட்டித்தனம் காரணமாக வகுப்பாசிரியரால் விரும்பப்பட சந்தியாப்பிள்ளைக்கு படிப்பில் ஆர்வம் தொட்டுவிட்டது. ஐந்தாம் தர புலமைப் பரிசில் தேர்வில் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெறமுடியாமல் போனது. வகுப்பாசிரியர் சாந்தகௌரி ஆசிரியருக்கு அளவிட முடியாக் கவலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகவும் எதிர்பார்த்திருந்தார். சந்தியாப்பிள்ளைக்கு பெரிதாக கவலையில்லை. அந்தத் தேர்வு சம்பந்தமாக அந்நாட்களில் அவ்வளவு தெரிந்திருக்கவில்லை. அவன் தேர்வு செய்யப்பட்டிருந்தால், அவர்களது குடும்பநிலையில், அவனுக்கு படிப்பதற்கு சிறு நிதி உதவியாவது கிடைத்திருக்கும் என்பது சாந்தகௌரி ஆசிரியரின் எதிர்பார்ப்பு.

சாதாரண தரத்தில் பள்ளியில், ஐந்தாவது சிறந்த பெறுபேறு எடுத்தான். உயர்தரத்தில் மாவட்டத்தில் கலைப் பிரிவில் முதலாவது இடம் கிடைத்தது. குடும்பம் மகிழ்ந்தது. பள்ளி, ஊர் பாராட்டு செய்தது.

கணிதத்துறையில் அவனுக்கு படிக்க ஆசை இருந்தாலும் கருணாநிதி ஆசிரியர்தான் கலைப் பிரிவில் படிக்க அவனுக்கு ஆலோசனை சொன்னார். அவனது குடும்ப நிலையில் நகரத்திற்கு சென்று படிக்க முடியாது என்பது அதற்கான முக்கிய காரணம்.

தொழில்நுட்பத்தில் சந்தியாப்பிள்ளைக்கு மிகுந்த ஈடுபாடு. வயலில் வேளாண்மை வெட்டிய பின்னர், எஞ்சியிருக்கு ஒட்டுக்கள் நைதரசன் செறிவுள்ளவை. அவற்றை விவசாயிகள் அறுவடையின் பின்னர் எரித்துவிடுவார்கள். அதனை மாற்றியமைக்க வேண்டும் என்பது சந்தியாப்பிள்ளையின் சிறுவயது எண்ணம்.

தன்னுடன் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் படித்த சில பொறியியல் பீட மாணவர்களின் உதவியுடன் கண்டி முல்கம்பொலவிலுள்ள ஒரு தொழில் நிறுவனத்தில், அதற்கான இயந்திர வடிவமைப்பினைச் செய்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வியந்திரத்தில் பொருத்தியுள்ள கை போன்ற அமைப்பு வயலில் அறுவடையின் பின்னர், ஒவ்வொரு வரவையிலுமுள்ள எஞ்சியிருக்கும் நெற்பயிரின் எஞ்சிய பகுதியை . (ஒட்டு) முழுமையாக அறுவடை செய்து இயந்திரத்திற்குள் அனுப்பியது பதினைந்து அடி சுற்றளவில் அறுவடை நடைபெற்றது. இயந்திரத்தினுள் செல்லும் ஒட்டுகள் சிறுசிறு துண்டு துண்டுகளாக்கப்பட்டு, உரப்பைகளில் சேமிக்கப்பட்டது.

பெறப்பட்ட துண்டுகள் கால்நடைகளுக்கு தீனிகளாகவும் வயல்களுக்கு சேதனைப்பசளை தயாரிப்பதற்கு மூலப்பொருளாகவும் பயன்பட்டது. விவசாயத் திணைக் களத்தின் உதவியுடன் சேதனப் பசளை தயாரிக்கும் திட்டத்தினை தொடங்கியும் இருந்தான் சந்தியாப்பிள்ளை.

சந்தியாப்பிள்ளை பல உயர் அரசபதவிகளைப் பெறக்கூடிய கல்வித் தகைமைகளைக் கொண்டிருந்தாலும் தான் ஒரு விவசாய ஆசிரியராக பணியாற்றுவதையே மிகவும் விரும்பினான். பிள்ளைகளுக்கு புத்தாக்க சிந்தனை களை ஊட்டி அவர்களை நல்ல உழைப்பாளிகள் ஆக்குவதே நோக்காக் கொண்டு தன் வாழ்நாளை தன் மக்களுக்காக அர்ப்பணித்தான்.

புதிய கண்டுபிடிப்பிற்கான பாராட்டு விழாவில், "செல்லத்தம்பி ஐயாவின் வயலில் பணிக்கதிர் பொறுக்கும் போது காலில் குத்தும் ஒட்டுக்களுக்கு ஒரு நாள் நல்ல தண்டனை கொடுக்க வேண்டும்" என எடுத்த சபதமே இவ்வியந்திரம் உருவான இடம் என்பதை கூறுகின்ற போது அரங்கு கரவொலியால் அதிர்ந்து மகிழ்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர்மையான நேர்மை

வாய் நிறைய பல்லுத் தெரிய " வாங்க, வாங்க" என்றவாறே வந்தவர்களை வரவேற்றுக் கொண்டு, வீட்டின் முற்றத்திலிருந்த மாமரத்தின் கீழிருந்த சாக்குக் கட்டிலில் இருவரையும் அமரச் சொல்லிவிட்டு, அருகில் இருந்த சாய்மனைக் கதிரையில் அமர்ந்தார் அய்யாக்கண்ணு. கவின்மலர், தமிழவேள் இருவரும் பல்கலைக் கழகத்தில் இரண்டாம் ஆண்டு மாணவர்கள்.

அய்யாக்கண்ணுவை செவ்வி காண்பதற்காக வந்திருக்கிறார்கள்.

சிறிய வயதிலிருந்து வறுமையின் பிடியில் வாழ்ந்தவர். எதையெடுத்தாலும் தோல்விதான். அல்லது கல்லில் நார் உரிப்பது போன்று சிக்கலில் ஒருவாறு செய்து முடிப்பார். மனதால் யாருக்கும் தீங்கு நினைக்க மாட்டார். ஊரில் பொது வேலை என்றால் தன் வேலையாக செய்து முடிப்பார். அவர்மீது ஊர் மக்களுக்கு சிறந்த மதிப்பு இருந்தது. ஆனால் பொருண்மியத்தில் அவரால் ஓர் அடி கூட முன்னே எடுத்து வைக்க முடியவில்லை.

திருமணம் ஆகி நான்கு பிள்ளைகள். துணைவி அமிழ்தவல்லியின் நச்சரிப்புத் தாங்க முடியாது. காதலித்து திருமணம் செய்ததால் வீட்டாரின் எதிர்ப்புக்கும் முகங் கொடுக்க வேண்டியதாயிற்று.

வயலில் கூலி வேலை, தோட்டத்தில் கூலி வேலை, அரிசி ஆலையில் அரிசி, நெல் மூட்டைகள் தூக்குதல் என எந்த வேலையில் பணம் வருகின்றதோ அந்த வேலையை செய்வதற்கு, ஒருநாளும் பின்னிற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதில்லை. ஆனால், நேர்மை தவறிய எந்த வேலையையும் இன்றுவரை அய்யாக்கண்ணு தன் நினைவுக்கு எட்டிய வரையில் செய்யவில்லை.

பிள்ளைகளின் படிப்பு, வீட்டுச் செலவு என செலவுகள் திக்குமுக்காட வைத்துக் கொண்டிருந்தது. நாட்டு நிலையால் வேலை செய்வதற்கும் வேலை இல்லாத நிலை தொடர்ந்தது.

ஒரு நாள் பிள்ளைகளுடன், தற்கொலை செய்து கொள்ளலாமா எனக் கூட இணைஞர்கள் எண்ணினர். வீட்டில் அடுப்பு எரியாமலிருப்பது ஊராருக்கு என்ன தெரியவா போகிறது. உதவிகள் ஓர் அளவில் தான் கேட்க முடியும்.

தற்கொலை முயற்சியில் இருந்து அய்யாக் கண்ணுவின் நிதானமான தன்னம்பிக்கைதான் தடுத்தது. துணைவியின் ஆலோசனையை ஏற்றே முடிவெடுத்தார் கள். "சாவதெனில் பட்டினியால் சாவோம். பிள்ளைகளுக்கு பள்ளியில் ஓரளவு உணவு தருகிறார்கள். நாம் நீரையாவது குடித்து கிடைக்கின்ற போது, ஏதாவது வேலைகளைச் செய்து உயிரை காப்பாற்றிக் கொள்வோம்." என்ற வார்த்தைகள் அமிழ்தவல்லிக்கு சினத்தைக் கொடுத்தாலும் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

உணவு இல்லாமலும் ஒரு வேளை, இரு வேளை என ஏறத்தாழ ஏழாண்டுகள் ஓடிவிட்டன. அய்யாக்கண்ணு விற்கு வயதும் ஏறிக்கொண்டிருந்தது.

"வாய்ப்பு என்றாவது எனக்கு வரும்" என்ற அசையாத நம்பிக்கை அவருக்கு இருந்தது என்னவோ உண்மைதான். வீட்டிலிருந்து வயல் வேலைக்கு மண்வெட்டியுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறப்பட்டு, தெருவுக்கு வந்த போது ஒரு சிற்றூர்தி தெருவின் ஓரத்திலுள்ள வடிகானில் உள்ள ஒரு கல்லில் மோதியவாறு நின்றது. உரிமையாளர் கண்டியிலிருந்து வந்தவர். செய்வதறியாது திகைத்து நின்றவேளை, அய்யாக்கண்ணுவின் உதவி அவரை மனம் நெகிழச் செய்தது.

நடந்து அடுத்தவாரம் அய்யாக்கண்ணுவின் வீட்டிற்கு தட்டு நிறையப் பழங்களுடன் சிற்றூர்தியின் உரிமையாளர் தன் குடும்பத்துடன் வந்திருந்தார். அன்று பணம் கொடுத்த போதும் வாங்க மறுத்து விட்டதனால், அய்யாக்கண்ணுவின் மீது அதிக மதிப்பு வந்தவருக்கு ஏற்பட்டு விட்டது.

குடும்ப நிலைகளைக் கேட்டறிந்தார். உயர்தரம் வரை படித்த அய்யாக்கண்ணுவை வியப்பாகப் பார்த்தார். பணம் கொடுத்தும் வாங்க மறுத்தமையால், கடனாக பணம் கொடுப்பதற்கும் கண்டியிலிருந்து தேயிலை பெற்று தொழிலை தொடங்குவதற்கும் தேவையான வழிகாட்டல் களை வழங்கவும் வந்தவரால், வைக்கப்பட்ட ஆலோசனை அய்யாக்கண்ணுவினால் நன்றியுடன் ஏற்றுக் கொள்ளப் பட்டது.

ஐந்து ஆண்டுகளில், பன்னிரண்டு இடங்களில் கிளைகள். தரமான குறைவான விலையில் தேயிலை மாத்திரமே விற்பனைப் பொருள். கிடைக்கும் இலாபத்தில் நாற்பது வீதம் பொது மக்களின் தேவைக்காக ஒதுக்கப் பட்டது.

மழைக் காலங்களில், ஒழுகிக் கொண்டிருந்த வீடு மாத்திரமே ஓட்டு வீடாக மாறியது. அவரின் பண்பில் எதுவித மாறுதல்களும் ஏற்படவில்லை. கோடீஸ்வரரான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அய்யாக்கண்ணு எளிமையான வாழ்க்கையுடன் அவ்வூர் மக்களுடன் அவர்களில் ஒருவராக அவரது குடும்பத்துடன் வாழ்ந்து கொண்டிருப்பதையே தங்களது இவ்வாண்டு செயற்றிட்டமாக பல்கலைக்கழகத்தில் செய்து சமர்ப்பிப்பதற் காக வந்த இருவரும் அமிழ்தவல்லியின் சுவையான தேனீரை சுவைத்துக் கொண்டு பெற்ற தகவல்களுக்கு நன்றி கூறி மகிழ்ச்சியுடன் திரும்பினர்.

## தெளிந்த அறியாமை

பொதுச்சுகாதாரப் பரிசோதகரான சிவநேசனின் வீட்டு முற்றத்தில் கையில் ஒரு பையுடன் நின்றான் தங்கவேலாயுதம். பையில் கத்தரி, பயற்றை, மிளகாய் என்பன ஏறத்தாழ ஒன்றரைக் கிலோ அளவில் கொண்டு வந்திருந்தான்.

சத்தம் கேட்டு வெளியே வந்த சிவநேசன் வீட்டுக்கு வந்தவனை வரவேற்பதா? அல்லது ஐந்து மாதத்திற்கு முன் அவ்வளவு ஆட்கள் மத்தியில் முகத்தில் அறைந்தவனைப் பழிதீர்ப்பதா? என்று கணப்பொழுது சிந்திப்பதற்குள் சிவநேசனின் மகன் இணையரசு ஓடிவந்து, "வாங்க வேலாயுதம் மாமா" என்று கையிலிருந்த பையை வாங்கி ஒரு கையில் வைத்துக் கொண்டு மறு கையால் மாமாவின் கையை பற்றிக்கொண்டு உள்ளே அழைத்துச் சென்றான் ஆறு வயதுச் சிங்கக்குட்டி.

அம்மாவிடம் சென்று பையைக் கொடுத்து விட்டு, அவள் கொடுத்த பணத்தை மாமாவிடம் கொடுத்தான். தேநீர் குடித்த மாமா அப்பாவுடன் ஒரு சொல்லும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைக்கவில்லை. அப்பாவும் வாய் திறந்து ஒரு சொல்லும் உதிர்க்கவில்லை. போன பின்னும் அம்மாவிடம் சிவநேசன் எதுவும் கேட்கவும் இல்லை.

விநாயகபுரத்தில் சிவநேசனின் உந்துருளி சென்று கொண்டிருக்கிறது. கிரவல் வீதியில் நீர்தேங்கி நிற்கிறது. உந்துருளியில் இறங்கி வாசல் கதவை தட்டுகிறான். தங்கவேலாயுதம் வீட்டு கதவால் "என்ன" என்று கேட்க "கொஞ்சம் வெளியில வாறீங்களா?" வந்தவனிடம் வீதியில நீங்க குளிக்கிற நீர் வருது. இப்பிடிவிட ஏலாது." கூறி முடிப்பதற்குள்,

"அப்ப எங்க உங்கட தலயிலயா விடுறது? வடிகான கட்டுங்க. பிறகு அதுக்குள்ள விடுறன்" தங்கவேலாயுதம் தன் குரலை உயர்த்தி சத்தமாகவே கதைத்ததனால் அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் பார்வையாளர்களா னார்கள்.

"வடிகான் கட்டினாலும் அதுக்குள்ளயும் உங்கட வீட்டு தண்ணிய விடேலாது" அமைதியாகச் சொன்னான்.

"அப்ப என்னத்துக்கு வடிகான்?" சூடாகக் கத்தினான்.

"மழத் தண்ணி போறதுக்கு"

"அப்ப எங்கட கழிவுத் தண்ணிய எங்கடா விடுறது?" அதிகரித்த கோபத்துடன் கேட்டான். வழிமுறைகளை அமைதியாக சொன்னான். அவை செவிடன் காதில ஊதின சங்கானது.

"நான் வீதியில தான் விடுவன், நீ செய்யிற செய்" என்று கூற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வழக்கு போட வேண்டி வரும்" எச்சரித்தான்.

கோபத்தின் உச்சத்திற்குப் போன தங்கவேலாயுதம் சிவநேசனின் கன்னத்தில் யாருமே எதிர்பார்க்காத வகையில் 'பளார்' என ஓங்கி அறைந்து விட்டான்.

சிவநேசனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. வெட்கமுமாகி விட்டது. அவ்விடத்தை விட்டு நகர சபைக்குப் போய் சக அலுவலர்களுக்குச் சொன்னான்.

எல்லோரும் செயலாளர், தலைவரிடம் முறையிட்டனர். தலைவர் கோபமடைந்தார். காவல்துறைக்கு அறிவித்தார். இரண்டு நாட்கள் தங்கவேலாயுதம் மாமியார் வீட்டில் கம்பி எண்ணிக் கொண்டிருந்தார். அவனை நீதிமன்றில் நிறுத்தி வழக்குப் போட சிவநேசன் விரும்பவில்லை.

மூன்றாம் நாள் வீட்டுக்கு வந்தவன், சிவநேசன் தான் வழக்குப் போட விரும்பவில்லை என துணைவி மூலம் தெரிந்து கொண்டான். மனம் நொந்தான். சிவநேசனின் ஆலோசனைகளை நடைமுறைப்படுத்த நினைத்தான்.

ஆறடி அகலத்தில் பத்தடி நீளத்தில் ஆறரையடி ஆழத்தில் வளவினுள் குழிவெட்டி சிவநேசன் சொன்னவாறே கட்டி, அதனுள் குளியலறை மற்றும் சமயலறை கழிவு நீரை சுத்திகரிப்பதற்கான பொறிமுறைகளைச் செய்தான். சுத்திகரிக்கப்பட்ட நீரை பயன்படாதிருந்த ஏழு பேர்ச் காணியில் நட்ட கத்தரி, பயற்றை, மிளகாய், தக்காளி என்பவற்றுக்கும் வாழைக்கும் பயன்படுத்தினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனது இந்த தோட்டத்தில் விளைந்து முதல் நாள் அறுவடை செய்த பொருட்களுடன் சிவநேசன் வீட்டுக்குச் சென்றான். சிவநேசன் வீட்டில் இருக்க வில்லை, துணைவி அருண்மொழியிடம் நடந்ததைக் கூறி பொறுத் தருளுமாறு கோரினான்.

"பணம் பெற்றுக் கொள்வதாயின் மரக்கறிகளை தரும்படி" உரைத்தாள். வேறு வழியின்றி ஒத்துக்கொண்டான்.

இணையரசுவிற்கு தங்கவேலாயுதம் மாமாவாகி மூன்று மாதங்களாகி இந்தக் கூத்து நடக்கிறது என்று இன்றுதான் அருண்மொழி மூலமாக சிவநேசனுக்கு தெரிய வந்தது.

உள்ளே மகிழ்ச்சி அடைந்தவனாக வெளியே சிரித்துக் கொண்டிருந்தான் இணையரசுவின் அப்பா.

## பிள்ளைகளின் அம்மா

சிவபாக்கியவதி எழுபத்தைந்து வயதில் தனது உழைப்பிலேயே வாழ்ந்து கொண்டிருப்பது, மனதில் நிறைவினையும் மகிழ்வினையும் கொடுத்துக் கொண்டி ருக்கிறது. தனது நான்கு பிள்ளைகளும் தன்னை இந்த வயதிலும் வைத்துப் பார்க்கவில்லையே என்ற கவலை இருபது ஆண்டுகளுக்கு முன்னர் இருந்தது. ஆனால், தனது பிள்ளைகள் தானே என்ற எண்ணத்தில் அனைத்து கவலைகளையும் மறந்து விட்டிருந்தாள் சிவபாக்கியவதிக் கிழவி.

கடைக்குட்டி அன்பினிக்கு மூன்று வயது இருக்கும்போது, நான்கு பிள்ளைகளின் அப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருகுலசிங்கம் சாவடைந்துவிட்டார். தமிழ்ப்பெயர் வைக்க வேணும் என்று தனது நாலு பிள்ளைகளுக்கும் தமிழில் பெயர் வைத்ததுடன் தமிழில் பேச வேணும் என்று ஒவ்வொரு நாளும் தனது பிள்ளைகளுக்கு இடித்துரைப்பார். தமிழ் ஆர்வம் அப்பா இருக்கும் போது மாத்திரமே பிள்ளைகளுக்கு இருந்தது. பிள்ளைகளின் படிப்பினையும் சாப்பாட்டினையும் பார்ப்பதிலேயே சிவபாக்கியவதியின் காலம் கழிந்ததனால் தமிழில் அக்கறை காட்டவில்லை.

நான்கு பிள்ளைகளுக்கும் தனது ஐம்பத்திரண்டு வயதாகின்றபோது திருமணம் முடித்துக் கொடுத்து விட்டாள். இருவர் தாமாகவே தனது துணைகளைத் தேடிக்கொண்டார்கள்.

நான்காவது அன்பினிக்கு திருமணம் முடித்து மூன்று ஆண்டுகள் இருக்கும். அன்பினியின் துணைவரின் வார்த்தைகள் சிவபாக்கியவதியை கவலையடைய வைத்தன. ஏனைய பிள்ளைகளின் துணைகளும் ஒரே வகையான கருத்துக்களையே கொண்டிருக்கிறார்கள் என்பதை சில நாட்களிலேயே அறிந்து கொண்டாள்.

தனது பிள்ளைகளும் தன்னை சுமையாக எண்ணுவதை சிவபாக்கியவதி விரும்பவில்லை. தனது ஊரிலிருந்து எங்காவது போய் வாழ்வது என்ற எண்ணத்தில் நகரப் பேரூந்தில் அதிகாலையில் புறப்பட்டவள்தான்.

திருக்கோணமலை நகரத்திற்கு வந்து சேர்ந்தாள். கோணேசர் கோயில் சென்று அன்னதானம் உண்டாள்.

தன்னிடம் மூவாயிரம் உருபா இருப்பது தன்னை வாழ வைக்கும் என எண்ணினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலையில், கடற்கரைக்குப் போனாள். அன்று சனக்கூட்டம் அதிகமாக இல்லாவிட்டாலும் மக்கள் வந்திருந்தார்கள். இங்கிருந்த ஒருவரிடம் "ஒரே இப்படி இங்க ஆக்கள் வாறவங்களா?"

"ஓம், சனி, ஞாயிறுகளில் அதிகம்" பதில் கிடைத்தது.

இரவு கந்தசாமி கோயிலில் கழிந்தது. மறுநாள் சில வீடுகளுக்குச் சென்றாள். தனது நிலையைச் சொன்னாள். யாரும் புதியவர்களை வீட்டில் வைத்திருக்க விரும்ப வில்லை. அவரது ஊர்க்காரர்களை நம்ப முடியாது. "இப்படியானவர்கள் தான் குண்டுகளையும் கொண்டு வருவார்கள்" என்று சிவபாக்கியவதியின் காது கேட்கவே சிலர் சொன்னது பயத்தையும் உண்டு பண்ணியது. அவர்களின் கூற்றில் உண்மையும் இருந்ததை உணர்ந்து கொண்டவளாக, தனது முயற்சியை கைவிடவில்லை.

ஒரு வீட்டில், அவளது கோரிக்கை ஏற்கப்பட்டது. அவர்களுக்குப் பிள்ளை பார்ப்பதற்கு ஆள் தேவைப்பட்டது. தங்குமிடம் கிடைத்தது மகிழ்ச்சி.

பிள்ளையையும் பார்த்துக் கொண்டு வீட்டு வேலைகளையும் செய்து கொண்டு இருந்தவள், அடுத்த வாரத்தில், தனது கைப்பணத்தில் இரண்டு கிலோ கச்சான் வாங்கி வறுத்து. சிறிய கறிப்பையில் ஒரு கைப் பிடியளவு போட்டாள். வீட்டு உரிமையாளரிடம் சொல்லிவிட்டு கடற்கரையில் முதல்நாள் வியாபாரத்தை தொடங்கினாள்.

ஒரு மணிநேரத்திலேயே கொண்டு வந்த நாற்பத்தெட்டு பைகளும் முடிந்து விட்டன. நிகர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலாபமாக நாற்பது உருபா கிடைத்ததாக கணக்குப் பார்த்தாள்.

மறு நாள் சனிக்கிழமை அதிகமானவர்கள் வருவார்கள் என்பதால் பத்து கிலோ கச்சான் வறுக்கப் பட்டது. இலாபம் இருநூறைத் தாண்டியது. மாத வருமானம் நான்காயிரத்தைத் தொட்டது.

சாப்பாட்டுச் செலவு இல்லை. தனது பணத்தினை வங்கிக் கணக்கொன்றில் வீட்டு உரிமையாளரின் ஆலோசனை அடிப்படையில் வைப்பிலிட்டாள்.

ஆண்டுகள் கடந்தோடின. தனது பிள்ளைகளை இன்றுவரை அவள் சந்திக்கவில்லை. சந்திக்க நினைக் கவுமில்லை. வவுனியாவின் மூலையில் தனது ஊர் இருந்தமையினால், தனக்குத் தெரிந்த யாரையும் அவள் காணவும் இல்லை.

தனது வீடு, கடற்கரை, அநாதை இல்லங்கள் இவை தான் சிவபாக்கியவதியின் போக்கிடங்கள். இன்று ஒரு மாதத்தில், நிகர இலாபமாக நாற்பதினாயிரம் கிடைக்கிறது. வங்கிக் கணக்கில் பல இலட்சங்கள் வைப்பிலிருக்கின்றன.

அநாதை இல்லங்களுக்குக் கிழமையில் இருநாள் சென்று, அங்குள்ள பிள்ளைகளுக்கு தனது பணத்தில் சமைத்துக் கொடுத்து, தானும் அவர்களுடன் உண்டு மகிழ்ந்து கொண்டிருக்கிறாள் கிழவி.

இப்படி மகிழ்ச்சியான வாழ்க்கை வாழும் போது, தனது பிள்ளைகளின் நினைவே இல்லாமல் போனது வியப்பிற்குரிய ஒன்றல்லத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணாமல் போன கானாங்கோழிகள்

கையில் சுண்டுவிலுடன் ஆற்றோரமாக கானாங் கோழியை துரத்திச் செல்ல எழில்வேந்தனின் ஓட்ட வேகத்தைவிட அதிக வேகத்தில் ஓடியும் பறந்தும் பிரப்பம் பற்றைக்குள் ஓடி மறைந்து. அன்றைய நாளின் வாழ்நாளை அதிகரித்தது ஓடிய கானாங்கோழி.

இது நடந்து முடிந்து, ஏறத்தாழ இருபத்து மூன்று ஆண்டுகளாகி விட்டது.எழில்வேந்தன் நாட்டில் ஏற்பட்ட சிக்கல்களினால், அவனது தந்தையால் போலந்துநாட்டில் குடியமர்த்தப்பட்டான்.

இரண்டாயிரத்து ஒன்பதில் வன்முறைகள் ஓய்வுக்கு வந்தாலும் அச்சம் காரணமாக எழில்வேந்தனால் தன் ஊருக்கு வருவதை நினைத்துக்கூடப் பார்க்க முடிய வில்லை.

தாய் இன்றோ நாளையோ என்ற நிலையில் இருந்த போதும், கூட அவன் வர விரும்பவில்லை. அப்பா அழுதழுது சொல்லிப் பார்த்தார், அவன் மசியவே இல்லை.

எழில்வேந்தன் சண்முகத்தாருக்கு ஒரே பிள்ளை, இயக்கத்திற்கு பிள்ளைகள் போய்க் கொண்டிருந்த நாட்களில் மகனை படிப்பதற்காக நகரத்திற்கு அனுப்பினார். பின்னர் போலந்துக்கு அனுப்பிவிட்டார்

அன்று விமான நிலையத்தில் பார்த்ததே கடைசிப் பார்வை, சண்முகத்தார் சாவடைந்த செய்தியை அப்பாவின் தங்கை சந்திரா மாமி அழுதழுது கூறினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சரி நாங்க வாறம்" என்றவன், தனது இரு பிள்ளைகளுடனும் துணைவியுடனும் தன் ஊரில் மீண்டும் காலடி வைத்தான்.

அன்று மாலையே அடக்கம் செய்ய ஏற்பாடு செய்யும்படி அறிவுறுத்தியிருந்தான்.

மேலைத்தேய இசைக்குழு யாழ்ப்பாணத்திலிருந்து வந்து, இசை வழங்க ஊரில் உள்ள சில மூத்த குடிகார குடிகளின் சந்திகள் தோறும் ஆட்டத்துடனும் காது செவிடாகும். சீனவெடிகளுடனும் சண்முகத்தார் மாலை ஐந்தரை மணிக்கு மண்ணுள் போனார்.

இடுகாட்டில், அனைவருக்கும் குளிர்பானங்கள் வழங்கப்பட வந்தோர் எழில்வேந்தனைப் பாராட்டிக் கொண்டு மகிழ்ச்சியுடன் வீடு சென்றனர்.

"அங்கயும் அவனுக்கு என்ன சிக்கலோ? அம்மாடதுக்கு வராட்டிலும் அப்பாடத ஊரில ஆருமே செய்யாத மாரி செய்து போட்டான் புள்ள.. சண்முகம் கொடுத்து வச்சவன்" என சின்னத்தம்பி கிழவன் சொல்ல "அதானே" என கோவிந்தர் பதிலுரைத்துக் கொண்டே வீடு திரும்பினர். அனேகமானோர் சின்னத்தம்பி கிழவன் போன்றே சிந்தித்தனர்.

அடுத்தநாள் காலையில் எழுந்து, ஆற்றுப்பக்கம் போய்ப் பார்த்தான். கானாங்கோழி ஓடி மறைந்த பிரப்பை இருந்த இடமே இல்லை. அனைத்தும் அழிக்கப் பட்டிருந்தன.

வயலுக்குப் போக என அந்தவழியால் வந்த சபாரெட்ணத்தார். "தம்பி சண்முகம் சாகும்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிம்மதியா சாகேல்ல, நீயும் வந்து பாக்கேல்ல, மரங்கள் அழியுது எண்ட கவலை இருந்திச்சுது. சும்மா காசயும் செலவழிச்சு செத்த விட்ட ஊர்ர பண்பாட்ட நீ சீரழிச்சுப் போட்டா.

அப்பாட ஆத்மா உன்ர கூத்தப் பாத்து ஆத்திரத்தோட தான் திரியும். ஊரில இருக்கிற வீதி ஓரங்களில எண்டாலும் மரங்கள் கொஞ்சம் நாட்டி விடு, அப்பத்தான் சண்முகத்திர ஆத்மா சாந்தியடையும்' என ஆதங்கத்துடன் கூறி நகர்ந்தார்.

எழில்வேந்தன் கவலைப்பட்டானா அல்லது சிந்தித்தானா என்று தெரியவில்லை. ஆனால், மரங்கள் நடவேண்டும் என்று முடிவெடுத்தான்.

நகரத்தில் யாரோ இளம் மருத்துவர் ஒருவர் நல்ல மரக்கன்றுகளை பொது இடங்களில் நடுகின்றாராம் என்பதை அறிந்து, அவர் மூலமாக வீதிகளில் நடக்கூடிய எண்ணூறு மரக்கன்றுகளை வாங்கினான்.

ஊரில் உள்ள இளைஞர்களை துணைக்கு அழைத்தான். மரக் கன்றுகளின் பாதுகாப்பிற்காக கம்பியாலான கூடுகள் செய்து, நீர் தொடர்ந்து ஊற்றுவதற்கு ஏற்ற ஒழுங்குகள் செய்து, அதற்கான நிதி ஏற்பாடும் வழங்கி வாங்கி வந்த மரக்கன்றுகளை தன் ஊரின் வீதியோரங்களில் நட்டுக்கொண்டிருக்கிறான் எழில்வேந்தன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவமானம்

ஈருருளி மணிச்சத்தம் கேட்க ஒளிச்சுடர் வெளியே வந்து பார்த்தாள். தபால் காரர் நின்றிருந்தார். "எங்களுக்குக் கடிதமா? இதுவரை ஒரு கடிதம் கூட எங்களுக்கு வந்ததில்லை. வர வேண்டிய தேவையும் இருந்த தில்லையே" என எண்ணிக் கொண்டு வந்து கடிதத்தைப் பெற்றாள்.

வெளிநாட்டு கடிதம். ஆச்சரியத்துடன் திறந்தாள்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, துவாரகன் மருத்துவமனையில் சிற்றூழியனாக பணிக்குச் சேர்ந்தான். நாலு இலட்சங்கள் மாகாணசபை உறுப்பினர் நிலாகரனுக்கு அன்பளிப்பு வழங்கியதனால், கிடைத்த வேலை அது. அதற்கு முன்னரும் வேலையொன்றைப் பெற்றுக் கொள்வதற்காக பல இலட்சங்களை இறைத்தும் மிஞ்சியது பதினெட்டு இலட்சங்கள் கடன்தான்.

உறவினர்கள் தூரச்சென்றதுடன், வீட்டிலும் அடுப்பு சிலநாட்களில் எரிய மறுத்திருந்தது.

துவாரகன் உயர்தரம் படித்திருந்தாலும் சிற்றூழியர் வேலையை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டான். நிலாகரனை உண்மையில் நன்றியுடன் நினைவு கொள்வான்.

நிலாகரனுடன் தொடர்பினை நெருக்கமாக்கினான். ஊரில் உள்ளவர்களும் தமது பிள்ளைகளுக்கு வேலை எடுத்துத் தரும்படி கோருவார்கள். "கதைக்கிறன், செய்துதாறன்" இப்படியான பதில்களுடன் வீடு செல்வார்கள் வந்தவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துவாரகனுக்கு வேலை கிடைத்து ஒரு மாதத்தின் பின், நிலாகரனின் பிரத்தியேகச் செயலாளர் கலாதரனிடம் இருந்து அழைப்பு வந்தது, "உடனடியாக வந்து சந்திக்கவும்" என்றது அழைப்புச் செய்தி. வேலை முடிந்தவுடன் சென்றான்.

" நான் அடுத்த மாதம் கனடா போறன், என்னோட ஒருத்தர கூட்டிப் போகலாம், இப்ப கனடாக்கு நாற்பத்தைஞ்சு போகுது, எனக்கு இருபத்தெட்டு இலட்சம் தந்தா, கூட்டிப் போய் அங்க விடுவன். உனக்கும் மூணு தாறன்" என்றான் நிலாகரன்.

மூன்று இலட்சங்கள் அடைய வேண்டும் என்பது துவாரகனின் எண்ண ஓட்டமானது. வேலை பெற்றுத் தருமாறு, வீட்டிற்கு வந்தவர்கள் வீட்டிற்குச் சென்றான். ஒன்பது வீடுகளுக்குச் சென்றான். "ஒவ்வொரு வீட்டிலும் மூன்று இலட்சங்கள் கொடுத்தால் ஒரு மாதத்தில் வேலை, மிகுதி ஒரு இலட்சம் வேலை கிடைத்த பின்" என்றான்.

பணத்தினை ஒரு கிழமையினுள் கொடுத்தார்கள்.

இரண்டு இலட்சங்களை துணைவி சிந்துவிடம் கொடுத்துவிட்டு, இருபத்தைந்து இலட்சங்களுடன் நிலாகரனைச் சந்தித்தான் "இதில, நீங்க கேட்ட காசு இருக்கு. நான் கனடா போக வாறன்" என்றான்.

"நீயா வரப்போறா? அதுசரி உனக்கு எங்கால இவ்வளவு காசு உடனேயே" என்ற கேள்விக்கு "துணைவியின் அம்மாவின் தாலிக்கொடியை விற்று தந்தவங்கள்" என்ற பொய் பதிலானது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மாதத்தில் கனடா புறப்பட்டான். துணைவி சிந்துவிற்கு "பயிற்சி ஒன்றுக்கு கொழும்பு போறன்" என்றான். தொடர் பொய்களுக்குச் சொந்தக்காரனானான்.

போய் அடுத்த கிழமை மருத்துவமனையில் இருந்து வந்து துவாரகனை கேட்டார்கள். சிந்துவிற்கு கவலை அதிகரித்தது. தொலைபேசி அழைப்பு எதுவுமில்லை. ஒரு தொடர்புமில்லை. ஒரு கிழமை ஒரு மாதமாகியது.

வேலைக்கு பணம் கொடுத்தவர்கள் வீட்டிற்கு வந்து திட்டிப் போனார்கள். கைக் குழந்தையுடன் படாத பாடு பட்டாள். காவல்துறை சென்று முறையிட்டாள்.

பணம் கொடுத்தவர்கள் கொடுத்த நெருக்கடியால், செம்மலையில் தன்னுடன் படித்த நண்பி வீட்டில் யாருக்கும் தெரியாமல் குடியேறினாள்.

ஓராண்டு கரைந்தது. இரண்டு இலட்சங்களும் ஏறத்தாழ முடிகின்ற நிலைக்கு வந்தபோது, துவாரகனின் அழைப்பு சிந்துவின் அலைபேசியை அழைத்தது. குரலைக் கேட்டவள் சில மணித்துளிகள் அழுது செத்தாள்.

நடந்தவற்றைச் சொன்னாள். அவனும் சொன்னான். வீட்டிற்கு பதினொரு இலட்சம் பணம் அனுப்பியுள்ளதாகவும், அதனை என்ன செய்ய வேண்டும் என்பதனையும் கூறினான்.

சிந்து தோழியிடம் நன்றியுரைத்து ஊர் திரும்பினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடிதம் படித்துக் கொண்டிருந்த ஒளிச்சுடர் வீட்டு வாசலில் நின்ற சிந்துவை குற்ற உணர்வுடன் நோக்கினாள். கையிலிருந்த பொதியை கொடுத்தாள். "எண்ணிப் பாருங்க அக்கா" சிந்து கூற, எண்ணிவிட்டு "சரியா இருக்கு" என துவாரகன் அனுப்பிய கடிதத்தைக் கொடுத்தாள்.

சிந்து வாசித்தாள்,

அன்புடன்,

ஒளிச்சுடர் அக்கா, நான் இப்ப கனடாவில இருக்கிறன். நீங்க உங்கள் அண்ணன் மகனுக்கு என வேலைக்காக கடன் வாங்கித் தந்த பணமும் நான் கனடா வர உதவியது. பல துன்பங்களை அநுபவித்திருப்பீர்கள். நான் பட்ட கடன்களை அடைப்பதற்கு, பிழையென்றாலும் எனக்கு வேற வழி தெரியவில்லை, பொறுத்தருளுங்கள்.

தற்போது நீங்கள் தந்த பணத்துடன் மேலும் ஐந்து இலட்சம் அனுப்பியுள்ளேன், பணம் ஏனையவர்களுக்கும் அனுப்பிய பின்னர், இன்னும் தருவேன். சிந்துக்கு பேசியிருப்பீர்கள். அவளுடன் நான் உண்மையில் இன்னும் கதைக்கவில்லை. அவளுடன் அன்பாக இருங்கள்.

நன்றியுடன்
துவாரகன்

சிந்து கடிதத்தை வாசித்து முடித்து கண் முழுவதும் நிறைந்த கண்ணீருடன் நிமிர்ந்த போது, கையில் எட்டு இலட்சங்களை வைத்துக்கொண்டு, ஒளிச்சுடர் எதற்கென்று தெரியாமல் விம்மி விம்மி அழுது கொண்டிருந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயரப்பார்

மலரொளி பள்ளியில் ஒன்பதாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தாள். தன் வீட்டில் மூத்த பிள்ளை. அவளுக்குப் பின்னர், மூன்று பிள்ளைகள். அனைவரும் பெண் பிள்ளைகள்.

தந்தை செல் அடிபட்டு ஒரு காலையும் ஒரு கண்ணையும் இழந்தவர். அம்மா கடலை வறுத்து விற்பது, காலையில் இடியப்பம் செய்து விற்பது. இவை தான் அவர்களின் குடும்ப வருமானம். தங்களது அன்றாட உணவிற்குப் போதுமானதாக இருந்தது.

தனது தங்கைகள் மீது மலரொளி உயிராக அன்பு வைத்திருந்தாள். அவர்களது பள்ளிச் செலவிற்கு பள்ளி நிருவாகத்தினர் எதுவும் கேட்பதில்லை. அவர்களது குடும்ப நிலை அனைவருக்கும் தெரிந்திருந்தது.

பக்கத்து வீட்டில் சித்தி இருந்தாள். இராசவள்ளி கிழங்கு நடுவதற்கு மலரொளியை அழைத்தார்கள். சிறிய தொகை பணம் கிடைக்கும். சென்றவளுக்கு சித்தி நூறு ரூபாய் பணமும் இரண்டு கிலோ கிழங்கும் கொடுத்து விட்டாள். கிழங்கை கறி சமையுங்கள் அல்லது பொரித்து சாப்பிடுங்கள் என்பதே சித்தியின் அறிவுரை.

மலரொளிக்கு அதனை நாமும் நட்டால் என்ன என்ற எண்ணம் வர அதனைச் செய்தாள். ஆனால், சித்தி போன்று நடவில்லை. பக்கத்தில் இருந்த சிறிய அரிசி ஆலைக்குச் சென்று உரப்பையில் உமி எடுத்து வந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழங்கு நடுவதற்குத் தயாரித்த நாற்று மேடையில் உமியைக் கலந்தாள்.

பள்ளியில் விவசாயப் பாட ஆசிரியர் கற்பித்தவை நினைவில் வந்தது. பக்கத்து வகுப்பில் நடக்கும் பாடத்திற்கும் காது கொடுக்கும் பழக்கம் இருந்தது மலரொளிக்கு. மாலை நேரத்தில் அம்மாவின் உதவியுடன் இரண்டு கிலோ கிழங்கையும் நட்டார்கள். ஒவ்வொரு நாளும் தானும் தங்கைகளின் உதவியுடன் நீர் ஊற்றினாள். சித்திக்கு விடயம் தெரிய வர மகிழ்ந்தாள்.

அறுவடை நேரத்தில், தன்னைவிட நான்கு மடங்கு அதிகமான கிழங்குகள் பிடுங்கிய மலரொளியை அதிசயமாகப் பார்த்தாள். சித்திக்கு காரணத்தை கூறினாள் மலரொளி. கிழங்கை அவள் விற்கவில்லை. முழுவதையும் விதைக்காக வைத்தாள்.

விவசாயத் திணைக்களத்திற்குச் சென்று அம்மா ஆலோசனை கேட்டு வந்தாள். மானிய உதவிகளும் கிடைத்தது. விவசாயப் போதனாசிரியர் வழிகாட்டல் களைச் செய்தார்.

அடுத்த ஆண்டு, அப்பிரதேசத்திலேயே அதிக விளைச்சல் மலரொளிக்கு கிடைத்தது. தனது மற்றும் தனது தங்கைகளின் பள்ளித் தேவைகளை தானே பார்க்குமளவிற்கு வளர்ந்துவிட்டாள் மலரொளி.

பள்ளியில் நல்ல வரவேற்பினை சகோதரிகள் ஆசிரியர்களிடம் பெற்றிருந்தார்கள். சாதாரண தரத் தேர்வில் சிறந்த பெறுபேறு கிடைத்தது. ஆனாலும் கலைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவில் படித்தாள். பள்ளியில் மூன்றாவது சிறந்த பெறுபேற்றினை உயர்தரத்தில் பெற்றாள்.

தங்கைகளை இராசவள்ளி உற்பத்திக்கு பழக்கப்படுத்தியிருந்தாள். பல்கலைக்கழகப் படிப்பும் இராசவள்ளியின் உதவியினால் முடித்தாள்.

பிரதேச செயலகத்தில் வேலை கிடைத்தது. சில ஆண்டுகளில் உதவி பிரதேச செயலகர் ஆனாள்.

இராசவள்ளி என்று ஊரில் மலரொளியை இன்றும் அழைப்பதற்கான காரணம், இன்றும் அவள் அலுவலக நேரம் தவிர்ந்த நேரத்தில் இராசவள்ளி பாரியளவில் செய்கை செய்வதாலாகும்.

## முதலுதவி

சிவகாமி தன் துணைவரை போராட்டத்தில் இழந்தவள். தானும் தனது பங்கிற்கு தனது மக்களுக்காக ஆயுதமேந்திப் போராடியவள். தனது மகன் அறிவன் கல்வியில் கெட்டிக்காரனாக இருந்தமையினால், நகரத்தில் உள்ள முன்னணிப் பள்ளியொன்றில் படிப்பதற்காக சேர்த்திருந்தாள்.

மகனின் படிப்புச் செலவிற்கும் தனது வயிற்றுப் பசியைப் போக்கவும், இபாத்துள்ளா மௌலவி வீட்டில் பணிப் பெண்ணாக வேலை பார்த்தாள். வீடு கூட்டுவது, பாத்திரங்கள் சுத்தம் செய்வது, பிள்ளையைக் குளிப்பாட்டி பாத்துக்கொள்வது இவைகள் அவளது நாளாந்த வேலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றும் வழமை போல் குழந்தையை குளிப்பாட்டிக் கொண்டிருந்தாள். அருகிலிருந்த பற்றைக்குள்ளிருந்து பாம்பு ஒன்று வந்ததை அவள் காணவில்லை. தன் வேலை முடிந்தவுடன் எழும்பியவள் பாம்பை மிதித்துவிட்டாள்.

ஏதோ தகரம் கீறியது போலிருந்தது கீழே குனிந்தவள் கண்ணாடிப் புடையன் தன்னைக் கடித்து விட்டதை தெரிந்து கொண்டவள் வீட்டின் உள்ளே குழந்தையுடன் ஓடிச்சென்று, அங்கேயிருந்த தன் எஜமானியிடம் விபரத்தைக் கூறிவிட்டு, "நான் தப்பமாட்டன். என்ர பிள்ளைய எப்பிடியெண்டாலும் படிப்பிச்சுப் போடுங்கம்மா" என்று அழுதவாறே மருத்துவமனைக்கு வீதியில் வந்த முச்சக்கர வண்டியிலேறிச் சென்றாள்.

ஒரு மணிநேரத்தில் இபாத்துள்ளா மௌலவி தன் துணைவியுடன் மருத்துவமனையில் மருத்துவரிடம் 'எவ்வளவு செலவாகினாலும் பர்வாயில்லை. அந்தப்பிள்ளைய எப்பிடியாவது காப்பந்துங்க டாக்ரர்' என்று கெஞ்சியதைப் பார்த்து வியந்து போனார்.

'அவ இயக்கத்தில பெற்ற முதலுதவி பயிற்சி இப்ப அவவ காப்பாத்தியிருக்கு' என்று மருத்துவர் கூற ஆனந்தக் கண்ணீர் சொரிந்தனர் எஜமான் தம்பதியினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவிச்ச மீன் துடிக்கிறது.

பொங்கும் பூம்புனல் தொடங்கப்போகிறது என்ற ஆர்வத்தில் நளிர்மகள் சட்டி, பானைகள் என்று எல்லாவற்றையும் சாம்பலை பழைய தேசிக்காயில் தொட்டுத்தொட்டு வேகமாகப் பூசிவிட்டு, அனைத்தையும் கழுவி முற்றத்திற்கு முன்னால் இருந்த சிறாம்பியில் அடுக்கி வைத்துவிட்டு,

"அம்மா எல்லாம் கழுவி காயட்டும் எண்டு சிறாம்பியில வச்சிருக்கன் சரியா" என்று கூறவும் ஏழு மணிக்கு இலங்கை வானொலியில் பொங்கும் பூம்புனல் நிகழ்ச்சிக்கான முன்னிசை ஒலிக்கவும் சரியாக இருந்தது.

நிகழ்ச்சி முடியும்வரை நளிர்மகள் வானொலி அருகிலிருந்து பாடல்களை கண்மூடி இரசிப்பாள்.

இன்று ஏனோ இருபது ஆண்டுகளுக்கு முந்திய நினைவுகள் அவள் மனதில் தோன்றியது.

மகிழ்ச்சியாக அசை போட்டவளின் விழி ஓரத்தில் கண்ணீர் துளியாகி கன்னத்தால் உருண்டோடியது.

பொங்கும் பூம்புனல் கேட்டுக்கொண்டிருக்கும் போதுதான், பொற்கேணியில் இராணுவம் அவர்களது வீட்டுக்குள் புகுந்து, படுத்திருந்த அண்ணன் தற்சாரனை பிடித்து இழுத்து வந்து எல்லோர் முன்னிலையிலும் சித்திரவதை செய்து, பக்கத்திலிருந்த வாய்க்காலுக்கு அருகில் சுட்டுக்கொன்றார்கள் அன்று பன்னிரண்டே முக்கால் செய்தியில் "அவிச்ச மீன் துடிக்கிறது" என்ற வகையில் செய்திகளை வழங்கும் 'லங்காபுவத்' இன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தியில் காலைச் சம்பவம் சொல்லப்பட்டது. ஆனால் உண்மையிலேயே அண்ணன் இயக்கத்தில் இருக்கிறவன் என்பது பிடித்தவர்களுக்கோ சுட்டவர்களுக்கோ தெரிந்திருக்கவில்லை.

உண்மையை பொய்யென எண்ணி உண்மையில் உண்மையை செய்தியில் சொன்னார்கள்.

கவலையில் சில நாட்களிலையே அம்மா, அப்பா சாவுகளை சந்திக்க வேண்டியேற்பட்டது நளிர்மகளுக்கு

தம்பி தில்லையன் சில மாதங்களில் போராடப் போய் படாத பாடெல்லாம் பட்டு. இப்ப ஏதோ தப்பி பிழைத்து பெல்ஜியத்திற்குப் போய் அந்த நாட்டுக்காரி ஒருத்தியை திருமணம் செய்து, இரண்டு பிள்ளைகளுடன் தனக்கும் தன் நாட்டிற்கும் எந்தத் தொடர்பும் இல்லாமல் தானுண்டு தன் பாடுண்டு என்ற பாட்டில் அவனது வாழ்க்கை.

தன் துணைவர் கலைமாடன் தமிழ்மொழி, பண்பாடு அழியாது இருக்க என்ன செய்ய வேண்டும் என்ற ஆய்வில் அல்லும் பகலும் ஈடுபடுகிறார்.

என்ன உலகமிது என்ன வாழ்க்கையிது என்றவாறு ஒவ்வொன்றாக நினைத்துக்கொண்டு, வீட்டின் குந்துச் சுவரில் சாய்ந்து இருந்து கையிலிருந்த போர்த்துக்கீசரின் கண்டி நோக்கிய படையெடுப்பில் போர்த்துக்கீச ஜெனரல் த அசவேதோ எப்படி தன் திறமைகளைப் பயன்படுத்தி போரிட்டான் என்பதையும் கண்டி மன்னன் விமலதர்மசூரியன் எப்படி யுத்த தந்திரோபாயங்களைப் பயன்படுத்தி, போர்த்துக்கீசரை ஓட ஓட விரட்டினான் என்பதையும் போத்துக்கீசருடன் சென்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னிரெண்டாயிரம் பேரைக் கொண்ட "லெஸ்கரின்" என்றழைக்கப்பட்ட உள்நாட்டு தமிழ்ப் படைவீரர்கள் அனைவரும் கொல்லப் பட்டவர்கள் தவிர ஏனையோர் எப்படி சிங்களவர்களாக மாறினார்கள் அல்லது மாற்றப்பட்டார்கள் என்பதனையும் வாசித்தபடி.

'ஏன் தமிழ் மக்கள் இவற்றை ஆய்வுக்கு உட்படுத்தாமல் இருக்கிறார்கள்?' என சிந்தித்தவாறு, உண்மையில் கவலையுடன் தேநீரை அருந்திக் கொண்டிருந்தாள் நளிர்மகள்

## போலியான உலகு

நமது மக்களின் வாழ்வியல்நிலை மாறும் என்ற அசையாத அதே நம்பிக்கையுடன் இன்றும் இருந்தாள் செங்காந்தாள்.

சுடுகலன்கள் தாங்கி காய்ச்சிப் போயிருக்கும் தன் கைகளை தன் கண்களால் பார்த்துப் பெருமூச்சு விட்டவளாக "எல்லாம் இழந்து விட்டோம். இழப்பதற்கு எதுவுமில்லை தன்னம்பிக்கையைத் தவிர" என அவள் மனதுக்குள் விரக்தியுடன் சொல்லிக்கொண்டாள்.

வசதியான குடும்பத்தில் ஓர் அண்ணன், இரண்டு தங்கை. இரண்டு தம்பியுடன் பிறந்தவள் செங்காந்தாள். ஆயுத மோகத்தால் இயக்கத்திற்கு அவள் சென்றிருக்க வில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் இனத்தின் நிலையறிந்து, விடிவினைக் காண வேண்டும் என்ற உணர்வு பூர்வமான சிந்தனையில் தன்னை போராட்டத்தில் இணைத்துக் கொண்டவள்.

யுத்தம் மௌனிக்கப்பட்ட பின், புனர்வாழ்வு பெற்று வீட்டுக்குச் சென்றாள். அம்மா இல்லை. வயதான அப்பா, சகோதரங்கள், யாருமே அன்போடு வரவேற்க வில்லை. சில நாட்களில், அவள் குடும்பத்திற்கு வேண்டாத சுமையாக தான் தெரிவதாக உணர்ந்தாள்.

புலனாய்வாளர்களின் தொல்லை செங்காந்தாளை வாட்டி எடுத்தது. தொலைபேசி ஒட்டுக் கேட்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதை அறிந்திருந்ததனால், யாருடனும் எதுவும் தொலைபேசியில் பேசுவதில்லை. நேரிலும் தான்.

வாழ்க்கை வெறுமையானது. வல்லவராயன் துணிந்து, அவளைத் திருமணம் செய்யும் வரை இது தான் அவளது நிலை.

வல்லவராயன் இரண்டு வயது செங்காந்தாளிலும் குறைந்தவன். குடும்ப விபரம் தெரிந்து கொண்டு செங்காந்தாளின் நிலையறிந்து, அவள் மீது உள்ள பற்றி னால் கைப்பிடித்தான்.

செங்காந்தளின் பேச்சும் அவளது மக்கள் நலனும் வல்லவராயனுக்கு பிடித்திருந்தது.

தேங்காய் வாங்கி, அதனை வீடு வீடாக விற்பதன், மூலமாக கிடைக்கும் வருமானத்தில் எளிமையாக ஒரு பெண் குழந்தையுடன் குடும்பம் உருண்டுகொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலைவாசி ஏற்றத்திற்கு ஏற்ப வருமானம் ஓட முடியாமலிருந்தமை இவர்களது வாழ்க்கையையும் நகர்த்த சிக்கலாகத்தான் இருந்தது. தொழில் செய்யக்கூடிய ஆற்றலும் அறிவும் இருந்தும், மூலதனம் தடையாக இருந்தது.

தன் பிறந்த வீட்டை அடியோடு மறந்திருந்தாள். அவர்களது குத்தல் பேச்சுக்கள், போராட்டம் பற்றிய பார்வையும் கருத்துக்களும் செங்காந்தாளுக்குப் பிடிக்க வில்லை. முரண்பட விரும்பாமையினால் விலகியிருந் தாள். தெருவில் வீட்டாரைக் காணும் போது சிரித்தும் சிலவேளை பேசியும் கொள்வாள்.

தளபதியாக அவள் இருந்த போது, எவ்வாறு மக்கள் மத்தியில் செல்வாக்குடன் இருந்தாள்.

மலர்விழி அவளது இயக்கப் பெயர். மலர்விழி அக்கா மேல் அளவற்ற மரியாதை இருந்தது. மக்களுக்கு அப்போது. இப்ப அந்த மதிப்பும் மரியாதையும் எங்கே போனது? இந்த உலக நடைமுறை என்ன? என்று தன் காய்ச்சிப் போன கைகளைப் பார்த்தவாறு யோசித்துக் கொண்டிருந்தாள்.

போலியான உலகு. இந்த மக்களுக்காகவா நான் இவ்வளவு துன்பங்களையும் அனுபவித்தேன் என சில வேளைகளில் எண்ணியதும் உண்டு. ஆனால் மறு கணமே, எனது எதிர்கால மக்களுக்காகத் தான் எனது அர்ப்பணிப்பும் தியாகமும் என தேற்றிக்கொள்வாள்.

காலம் மாறும். நடைபெற்ற அனைத்தும் அடுத்த தலைமுறைக்கு மாற்றப்பட வேண்டும். அதனை ஆவணப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்த வேண்டும். அந்த முயற்சியில் இறங்கினாள். வல்லவராயன் ஊக்கமளித்தான். ஆனால் பொருளாதாரம் புத்தக வடிவில் கொண்டுவருதற்கு இடம் கொடுக்க வில்லை.

முக்கியமான பதிவுகள், எதிர்காலத்திற்குத் தேவையானவை அனைத்தையும் இரண்டு ஆண்டுகளில் அறுநூற்றி ஐம்பத்திநாலு பக்கங்களில் கணனியில் தட்டச்சு செய்து முடித்திருக்கிறாள்.

யாராவது உதவ வருவார்கள் என்ற நம்பிக்கை யுடன் காத்திருக்கிறாள் செங்காந்தாள்.

## மாற்றம்

அழகப்பன் தன் வீட்டுத் திண்ணையில், சொல்ல முடியாத கவலையுடன் அமர்ந்திருந்தான். என்ன வழி செய்வது என்று தெரியவில்லை. இன்னும் பதினெட்டு நாட்கள் இருக்கின்றன மகளின் திருமணத்திற்கு. சம்பந்தி காலையில் திட்டவட்டமாக சொல்லிவிட்டார்.

"சீதனக்காசு மூன்று இலட்சத்தையும் இரண்டு நாட்களில் தராவிட்டால், வேறு மாப்பிள்ளை பார்க்கும்படி".

கவலையின் காரணம் இதுதான்.

செங்குட்டுவன் அழகப்பனுடன் ஒன்றாக ஐந்தாம் தரம் வரை ஒன்றாகப் படித்து, அவனது தந்தையின் இடமாற்றம் காரணமாக கொழும்பு சென்று பின்னர் பிரான்ஸ் நாட்டில் நிரந்தரமாக குடியேறி முப்பத்தியிரண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டுகளின் பின்னர், அழகப்பனை கவலை தோய்ந்த முகத்துடன் சந்திப்பது கவலையாக இருந்தது.

தனது பள்ளித் தோழனுக்கு உதவுவதற்கு எண்ணினாலும் அழகப்பன் இணங்கவில்லை. ஆனால், கடனாக உதவி கோரினான். வேறு வழியின்றி செங்குட்டுவன் இணங்கினான்.

"மூத்திரம் பெய்ஞ்சிற்று வாறன்" என்று வீட்டின் பின்புறம் சென்று, சிறிய பற்றை ஒன்றை முழுமையாக நனைத்து விட்டு வந்தவன்

"உனக்கு எவ்வளவு காசு வேணும்?" என்றான்.

"எல்லாமாக ஐந்து இலட்சம் தேவை" அழகப்பனின் பதில்.

"எனக்கு பின்னால் இருக்கிற இரண்டு மரத்தையும் தா. கடனில்லாமல் நான் பணம் தாறன்" என்றான் செங்குட்டுவன்.

"ஒரு மரம் சொக்கநாதையாவின் நினைவாகவும் மற்றது உன் நினைவாகவும் வச்சனான். உனக்கு ஞாபகம் இருக்கா சொக்கநாதையா நம்மட வகுப்பில உள்ள எல்லாப் பிள்ளைகளுக்கும் ஒரு மரம் தந்தாரே.

"உனக்குத் தந்தத நீ என்னடத் தந்தனி" தனது பழைய நினைவுகளை ஓடவிட்டான். அழகப்பனின் நட்பின் தன்மையை எண்ணி வியந்தான் செங்குட்டுவன்.

"பரவாயில்லை. இந்த நேரத்தில் உனது பணத்தேவைக்காக இத்தா. உனக்கு நான் ஐந்து இலட்சம் தாறன்" என்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்மதம் தெரிவித்தான் அழகப்பன். தனது கைப்பேசியில் அழகப்பனுக்கு புரியாத மொழியில் பேசினான்.

"நாளை வருவார்கள் மரத்தை வாங்க" என்றவன் கிராம உத்தியோகத்தர் இருப்பிடம் அறிந்து கடிதம் ஒன்றினை எழுதி மரம் வெட்டுவதற்கான அநுமதியினை பிரதேச செயலாளரிடமும் பெற்றுக்கொண்டான்.

மறுநாள் ஊரில் உள்ளவர்கள் ஏறக்குறைய அனைவருமே என்று தான் சொல்ல வேண்டும் எல்லோரும் அழகப்பன் வீட்டு வாசலுக்கு வந்தார்கள். பிரதேச செயலாளர், கிராம உத்தியோகத்தர் என பல அரச பணியாளர்களும் வந்திருந்தார்கள். அழகப்பனுக்கு மட்டுமல்ல ஊராக்களுக்கும் எதுவும் விளங்கவில்லை.

கொழும்பில் இருந்து வந்தவர்கள் மரத்தை வெட்டினார்கள். நிறுத்தார்கள். "ஒரு மரம் முந்நூற்றி பதினைந்து கிலோ மற்றது இருநூற்றி தொண்ணூறு கிலோ" என்றனர்

காரில் வந்தவர் முப்பத்தியொரு இலட்சத்து எழுபத்தாறாயிரத்தி இருநூற்றி ஐம்பது ரூபாய் என பணத்தை செங்குட்டுவனிடம் கொடுத்தார். அப்பணத்தை அப்படியே அழகப்பனிடம் கொடுத்துவிட்டு ஊர் மக்களிடம் சொன்னான்.

"இது சந்தன மரம். நாங்க படிக்கும் போது சொக்கநாதையா கொடுத்தது. அழகப்பன் மட்டும் தான் அதனை நட்டு பராமரித்து, இன்று வரை காத்து வந்திருக்கிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கிலோ ஐயாயிரத்தி இருநூற்றி ஐம்பது ரூபாய்க்கு எடுத்திருக்கிறார்கள். தான் ஒரு இலட்சாதிபதி என்பதே தெரியாமல் கூலி வேலை செய்து நாளும் சிக்கல்களை அநுபவித்து, மகளின் திருமணத்தை நடத்த வழி தெரியாது திணறிக் கொண்டிருந்தான்.

"நல்ல வேளையாக நான் வந்தன் உங்களுக்கும் இது தெரியாமல் தான் இருக்கு." என்று மூச்சு விடாமல் தெளிவு படுத்தியவன் இடையில் நிறுத்தி தொடர்ந்தான்.

"நீங்களும் ஒவ்வொருவரும் உங்கட பிள்ளைகள்ற பிறந்த நாளுக்கு தேவையில்லாம செலவு செய்து தீன் பண்டங்கள் செய்து, ஆக்களயும் கூப்பிட்டு, அவங்கட காசையும் வாங்கி அவங்களுக்கும் சிக்கலயும் குடுத்து உங்களுக்கும் கடன் கூட்டிக்கொள்றீங்க.

இதெல்லாம் நிப்பாட்டிப் போட்டு பிள்ளகள்ற பிறந்த நாளுக்காவது பத்து சந்தன மரம் இல்லாட்டியும் ஒரு மரமாவது நாட்டி விடுங்க. பிள்ளைகள்ற காலத்தில அவங்களுக்கு நல்ல பலனாக இருக்கும் " என்று கூறி முடித்தான்.

அழகப்பனின் கண்கள் குளமான காட்சியும் ஊராரின் வியப்பும் பிரதேச செயலாளரின் நன்றி கலந்த பார்வையும் செங்குட்டுவனுக்கு கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

அழகப்பனின் குடும்ப வாழ்வு மகிழச்சியானதை சொல்லவும் வேண்டுமா என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழப்படிகாரனின் உரிமட்டை அடி

தமிழிசை விடுதலைப் போராட்டத்தில் தன்னை இணைத்துக் கொண்டிருந்தவன். சிறிய வயதில் போராளியாகச் சேர்ந்து கொண்டவன். அங்கு பலரது அன்பைப் பெற்றவன். ஆனால் சரியான குழப்படிகாரன். பள்ளியில் படிக்கும் போதும் குழப்படிதான்,. அந்தப்பழக்கம் இன்றுவரை அவனை விட்டு விலகவில்லை. ஆனால் குழப்படியின் தன்மை மாறியிருக்கின்றது.

இரண்டு பிள்ளைகளின் தந்தையாக ஒரு பொதுச் சுகாதாரப் பரிசோதகராக, அவனது குழப்படிகள் பல சாப்பாட்டுக் கடைக்கரார்களிற்கு தொடர் தலையிடியாக இருந்தது.

தான் வேலை செய்த மாவட்டத்திலுள்ள பெரிய மருத்துவமனை சிற்றுண்டிச்சாலையில் உணவுகள் சுகாதாரமாக தயாரிக்கப்படுவதில்லை. உள்ளிட்ட பல குறைபாடுகளை கண்டுபிடித்து நிருவாகத்தினர் மீது நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்தான்.

ஆனால், இந்த நடவடிக்கை மாகாணப் பணிப்பாளரினால் கண்டனம் தெரிவிக்கப்பட்டு, வேறு மாவட்டத்திற்கு இடமாற்றம் கொடுக்கப்பட்டது. மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டான்.

அங்கும் இதே குழப்படிதான் பல உணவகங்கள் முற்றுகையிடப்பட்டன. பலர் தண்டிக்கப்பட்டார்கள். அவர்களது கோபத்திற்குள்ளானான். ஆனாலும் அவற்றை அவன் பொருட்படுத்தவேயில்லை. மக்களுக்கு சுகாதார



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான பணியை வழங்குவதே தமிழிசையின் நோக்கமாக இருந்தது.

தான் வாழ்ந்து கொண்டிருந்த ஊரில் இருந்த மிகவும் பிரபலமான உணவகம், அதிகாலையில் சுற்றி வளைக்கப்பட்டது. உணவுப்பொருட்கள் எங்கு வைக்கக் கூடாதோ அங்கெல்லாம் வைத்திருந்தார்கள். உடனடியாக உணவகம் பூட்டப்பட்டது. வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கறிஞர்கள் யாரும் உணவக உரிமையாளருக் காக வாதாட முன்வரவில்லை. "சமூகவலைத் தளங்களில் தங்களின் பெயர் நாறிவிடுமே" என்ற அச்சமே அதற்கான காரணமாக இருந்தது. அவ்வுணவகம் நிரந்தரமாக மூடவேண்டும் என்பது நீதிமன்றத் தீர்ப்பானது.

உரிமையாளர் தமிழிசை வீட்டிற்குச்சென்று அச்சுறுத்தினார். அவன் கலங்கவில்லை. காவல்துறை யினரிடம் முறையிட்டான். அதன் பலன் உரிமையாளர் சிறை சென்றார்.

மாகாணப் பணிப்பாளர் தமிழிசை வீட்டிற்கே சென்று வாழ்த்தினார். "தனது தவறான முடிவை" கவலையாகத் தெரிவித்தார். ஆனால் "அந்நடவடிக்கையே தனக்கு பல நல்ல பணிகளை மக்களுக்கு வழங்கக் காரணமாக அமைந்தது" என நன்றியும் தெரிவித்தான்.

இது மாகாணப் பணிப்பாளருக்கு உரிமட்டையால் முகத்தில் ஓங்கி அடிப்பது போல் இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை எல்லாவற்றையும் தனது பேரப்பிள்ளைகளுக்கு சாய்மனைக் கட்டிலில் சாய்ந்திருந்தவாறு கதைகளாக அழகாகச் சொல்லிக் கொண்டிருக்க மகிழ்ச்சியுடன் ஆர்வமாக கேட்டுக்கொண்டிருந்தனர் தமிழிசையின் இரண்டு பிள்ளைகளின் பிள்ளைகள்.

## தம்பலின் மகிமை

தரணிதரனின் மனம் ஒருநிலையில் இல்லை. என்ன நடக்குமோ என்று ஊசலாடிக் கொண்டிருந்தது. இந்த ஊர்மக்களை நம்பிச் சொல்லி விட்டோம். என்ன செய்வார்களோ! தெரியாது. கடைசியில கழுத்தறுத்து விட்டுவிடுவார்கள் என்ற நியாயமான அச்சம் அவன் மனதில் எழுந்ததனால் பதற்றமாகவிருந்தான்.

சரியாக பத்து பதினைந்தளவில் அரசசார்பற்ற நிறுவனத்தினர் வந்தனர். தரணிதரன் எதிர்பார்த்தது போலவே, ஊராரின் பதிலும் அமைந்தது. "இந்த இடத்தில பொன்னாங்காணி வளர்க்க ஏலாது. இது யாரோ உங்களுக்கு கதை அளந்திருக்கிறாங்கள்." என்று கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் கூறவும், வந்தவர்களோ தரணிதரன் எவ்வளவோ கூறியும் கேட்காதவர்களாக திரும்பிச்சென்றனர்.

எவ்வளவோ முயன்றும் பலனில்லை என்று உணர்ந்தாலும் அவன் தன் முயற்சியில் சலிக்கவில்லை. ஒரு ஏக்கரில் பரீட்சார்த்தமாக பள்ளவயல் காணியில் பொன்னாங்காணி செய்வதென முடிவெடுத்து, கோயில் வயல் என்பதால் கோயில் தலைவரிடம் பேசினான். கோயில் நிருவாகம் அனுமதியளித்தது. சும்மா நீரில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூழ்கும் இடத்தில் போகத்திற்கு இரண்டாயிரம் தருவதாக உடன்பட்டதனால் உடன்பாடு ஏற்பட்டது.

விவசாயத் திணைக்களத்தின் தொழில்நுட்ப ஆலோசனைகளைப் பெற்று பொன்னாங்காணி செய்கையில் ஈடுபட்டான். சரியாக முப்பத்தைந்து நாட்களில் அறுவடை ஆரம்பமானது.

ஒவ்வொரு நாளும் முந்நூறு பிடி கீரைகள் சந்தைக்கு அனுப்பக்கூடியதாக இருந்தது. செலவுகள் போக நிகர இலாபமாக நாளொன்றிற்கு இரண்டாயிரம் கிடைத்தது. மாதத்திற்கு அறுபதினாயிரத் திற்கு அதிகமாக இலாபம் கிடைத்தது.

அடுத்த போகத்திற்கு அறுபது ஏக்கரிலும் பொன்னாங்கேணி நட்டான். மேலதிகமான கீரைகள் கொழும்பிற்கு அனுப்பி வைத்தான். இதுவரை காலமும் பயிரிடப்படாத வயல்நிலம் தரணிதரனின் முயற்சியால் அவனுக்கும் கோயிலுக்கும் வருமானத்தை ஈட்டித் தந்தது.

விவசாயிகள் தங்கள் வயல்களிலும் பள்ள வயல்களில் பொன்னாங்காணி பயிரிட்டதுடன், அவற்றை அவனிடமே விற்பனை செய்தனர்.

நெற்செய்கை மூலமாக கிடைக்கும் வருமானத்தை விட அதிகளவான வருமானம் பொன்னாங்காணி மூலமாக கிடைக்கப் பெற்றதனால் தரணிதரனை நன்றியுடன் நோக்கினர் ஊரார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடனேயே செய்துவிடு

நித்திரைத் தூக்கம் கண்ணை நிறைத்து விட்டது. மனதில் இருக்கும் விடாப்பிடியான எண்ணம் தூக்கத்திற்கு விளங்கவில்லை. எப்படியும் எழுதி முடிக்க வேண்டும் என்ற வெறி பாலச்சந்திரனை உற்சாகமூட்டியது.

எழுந்து சென்று கண்ணை குளிர் நீரால் கழுவினான். சற்று நேரத்திற்குத் தாக்குப்பிடிக்கும் என்பது பொறிமுறை. அடுத்த பத்து மணித்துளியில் சூடான ஒரு தேனீர் அடுத்த அரை மணி நேரத்திற்கு கண்களை விழித்திருக்கச் செய்தது. அது அவனுக்கு போதுமானதாக இருந்தது.

எழுதி முடித்த பின்னர் வந்த நித்திரை எங்க போனதென்றே தெரியவில்லை. மனதில் ஆனந்தம். ஒருவாறு நாளை எதுவித சிக்கலுமின்றி விழாவில் கலந்து கொள்ளலாம். எழுதிய அனைத்தையும் கணணி யில் தட்டச்சு செய்து பிரதியும் எடுத்துவிட்டிருந்தான்.

மறுநாள் காலை ஐந்து மணிக்கே எழும்பி விட்டான். தனது வேலைகள் எல்லாம் முடித்து விட்டு ஆறுதலாக இருந்தான். "டேய் இப்ப சும்மா தானே இருக்கிறா? இரவு படு படு எண்டு எத்தின தரம் சொல்லி இருப்பன். நித்திரையும் கொள்ளாம என்ன பாடத்தான் படுத்திப் போட்டா. தேத்தண்ணி வைக்கக்கொள்ள பாத்திற்றுத்தான். படுத்துக் கிடந்தனான். நீயா ஊத்தினா நித்திர வராது எண்டு தான் எழும்பல்ல" என கொட்டித் தீர்த்தாள் அம்மா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இல்ல அம்மா இண்டைக்கு மின்சாரம் சில வேளை போயிற்றா என்ன செய்யிறது" என்று சொல்லி வாய் மூடவில்லை மின்சாரம் வீட்டில் துண்டிக்கப்பட்டது. மின்விசிறி இயங்கவில்லை.

"பாத்தியா அம்மா இதத்தான், எங்கட ஜெயவீரசிங்கம் ஐயா சொல்றவர், எந்த வேல எண்டாலும் உடனேயே செய்து போடனும். பிறகு, நாளை எண்டெல்லாம் ஒத்தி வைக்கிறதும் ஒண்டுதான் அத செய்யாம விடுறதும் ஒண்டுதான் எண்டு. நான் நேற்று செய்திருக்காட்டி என்ர நிலை என்ன யோசிச்சுப் பார்." என்றவனின் கருத்துக்களை அப்படியே ஏற்றுக்கொண்டாள் தாய் மகராந்தகம்.

பத்து மணிக்கு விழா. நண்பன் புகழேந்தியின் எழுத்துக்கள் நூல் வடிவில் வெளியிடப்படுகின்றன. அவ்விழாவில் நண்பனின் நூலினை ஆய்வு செய்யும் பணி பாலச்சந்திரனது.

அவனது ஆய்வினை எழுத்து வடிவிலே முதல் நாள் செய்து முடித்திருந்தான். அதன் சுருக்கத்தை மாத்திரமே மேடையில் பேசுவது என்பது அவனது தீர்மானம்.

ஒரு விழாவில் அதிகளவான நேரம் உரையாற்றுவது தற்போதெல்லாம் எரிச்சலையூட்டுகின்ற செயற்பாடகப் பார்க்கப்படுவதனால், இந்த முடிவு. ஆர்வமுள்ளவர்கள் வாசிப்பார்கள் என்பது பாலச்சந்திரனின் கணிப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழா முடிவில் தனது முடிவு சரி என்பதனை பலர் அவனருகில் வந்து அவனது செயற்பாட்டை மெச்சியதிலிருந்து தெரிந்து கொண்டான்.

விழாவில் அவனது நேரம் நூலைப் பற்றிய இரு மணித்துளிகள் விளக்கம். தமிழ் மக்களிடையே எழுத்தாக்கம் குன்றிய நிலை, வாசிப்பு இல்லாநிலை பற்றிய கவலையும் மேம்படுத்த எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை விவரிக்க மூன்று மணித்துளிகள்.

நாம் ஒவ்வொருவரும் நமது கொள்ளளவை வளர்த்தெடுக்க வேண்டிய தேவைப்பாடு பற்றிப் புரிய வைப்பதற்கு, இரண்டு மணித்துளி என ஏழு மணித்துளியில் அவனது ஆய்வுரை முடிந்தமை வந்திருந்தவர்களை மகிழ்ச்சிப்படுத்தியது மட்டுமல்லாது, அவன் பின்னால் நீண்ட உரை ஆற்ற வந்திருந்தவர் களுக்கும் கட்டுப் போட்டு வைத்தது என்னவோ உண்மை தான்.

விழா சரியாக ஒரு மணி பதினைந்து மணித் துளிகளில் நிறைவு பெற்றது.

இவ்வாறு ஒரு விழா நடந்தால் உரிய நேரத்திற்கு வந்து நேர விரயமில்லாது மகிழ்ச்சியுடன் செல்லலாம் என விழாவிற்கு வந்தவர்கள் திரும்பிச் செல்லும் போது தங்களுக்குள் பேசிச் சென்றதை மகிழ்வுடன் நோக்கினார் கள் ஏற்பாட்டுக்குழுவினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திண்மக்கழிவும் மியோவாக்கியாவும்

கதிர்வேள் நாட்டில் ஏற்பட்ட சிக்கல்கள் காரணமாக பிரான்ஸ் நாட்டில் குடியேறி, அந்நாட்டின் குடியுரிமை பெற்றவன். தனது துணைவி, இரண்டு பிள்ளைகள் குடும்பம் மகிழ்ச்சியான வாழ்க்கை.

ஆனால், தனது நாட்டிற்குச் சென்று வாழ வேண்டும் என்பதில் நாலுபேருக்கும் உடன்பாடு இருந்தது. தாய் நாடு திரும்பி ஐந்து மாதங்களாகி விட்டன. நீண்ட நாட்களின் பின், ஊருக்கு வந்தமையினால் உறவினர், நண்பர் வீடு என நாட்கள் போனதே தெரியவில்லை. தனது ஊரில் உள்ள பள்ளியில் பிள்ளைகளைப் படிப்பதற்கு சேர்த்து விட்டிருந்தான்.

வெயிலின் கொடுமை தாங்கமுடியவில்லை. மழையைக் காணோம். காடுகளில் மரங்கள் வெட்டப் பட்டமையினால் வந்த நிலை என்பதை உணர்ந்து கொண்டான்.

மூன்றாண்டுகளுக்கு முன்னர் யப்பான் நாட்டுக்குச் சென்றபோது, குறைந்த நிலப்பரப்பில் எவ்வாறு காடுகளை உருவாக்கலாம் என்பதை நேரில் பார்த்து வந்தவன். நமது ஊரில் அதனை நடைமுறைப்படுத்தினால், என்ன என துணைவியுடன் கலந்துரையாடினான். அவள் இயற்கை யில் ஆர்வமுள்ளவள் தானும் இணைந்து கொள்வதாக வழிமொழிந்தாள்.

பிரதேச செயலகத்திற்கு சென்று பிரதேச செயலாளரிடம் திட்டத்தை விவரித்தான். குத்தகைக்கு ஐந்து ஏக்கர் நிலம் ஆரம்பக்கட்டத்திலும் பின்னர் தேவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யான நிலம் தரலாம் எனவும் கூறி, காணியை வழங்குவதற்காக, காணி உத்தியோகத்தரிடம் அறிமுகம் செய்து வைத்தார்.

பிரதேச சபையிடம் சென்று, தனக்கு பிரதேசத்தில் சேரும் குப்பைகள் தேவை எனக் கோரினான். பிரதேச சபைச் செயலாளருக்கு மட்டில்லா மகிழ்ச்சி. திண்மக் கழிவுகளை எங்கே கொட்டுவது என்ற பிரச்சினை இருக்கும்போது அவை தனக்கு தேவை எனும் கேட்கும் போது மகிழ்ச்சி வராதா என்ன?

ஒரு மாதத்தின் பின்னர், காணி குத்தகைக்கு கிடைத்தது. பிரதேசசபையின் கனரக இயந்திரத்தின் மூலம் மூன்றடி ஆழத்திற்கு காணி தோண்டப்பட்டது. ஓர் ஏக்கரில் காடு வளர்ப்பது திட்டம். பிரதேசசபையின் செயலாளர் சுற்றுச்சூழல் அதிகாரிகள் என்போர் திட்டத் தினை பார்ப்பதற்கு அடிக்கடி வந்து போனார்கள்.

தோண்டப்பட்ட இடங்களில் குப்பைகள் போடப் பட்டன. இரண்டரை மாதத்தில் நிரம்பியது. அதனுள் நுண் ணுயிர்கள் போடப்பட்டு, அதன் மேல் அரை அடிக்கு தோண்டப்பட்ட மண் பரவப்பட்டது. மிகுதி மண் பள்ளத்திற்குப் போடப்பட்டு சமதரையாக்கப்பட்டது.

ஆயிரம் சதுர அடியில் நானூறு மரங்கள் நடலாம். ஓர் ஏக்கரில் நடுவதற்கு ஓர் இலட்சம் மரக்கன்றுகள் வனவள திணைக்களத்திடம் பெற்றான். தங்கள் ஊரின் பள்ளி மாணவர்களை முதல்வரின் ஒத்துழைப்புடன் மர நடுகைக்காக பயன்படுத்தினான். மாணவர்களிற்கு சிற்றுண்டிகள் வழங்குவதற்கு என்ற போர்வையில்

இத்திட்டத்தினை பிரபல்யப்படுத்துவதற்கு லயன்ஸ் கழகத்தின் உதவியையும் நாடி வெற்றி பெற்றான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்டெம்பர் மாத்தில் நடப்பட்டதனால், அளவாக மழையும் வந்தது. மரக்கன்றுகள் வேர் ஊன்றிவிட்டன.

இரண்டு ஆண்டுகளில் யாருமே எதிர்பாராத வகையில், பத்துவருட மரங்கள் போல் எல்லா மரங்களும் வளர்ந்திருந்தன.

அரச அதிபர் இத்திட்டத்தைப் பார்க்க வந்தார். "இத்திட்டத்தினை மியோவாக்கி முறை என அழைப்பார்கள். மிக விரைவாக மரங்கள் வளர்ப்பதற்காக மியோவாக்கி என்பவர் கண்டுபிடித்த முறையே இது. இதனை எமது மாவட்டத்தில் மட்டுமல்ல நாடு பூராவும் செயற்படுத்தினால் பல நன்மைகள் ஏற்படும்" என விபரித்தான்.

அவ்வாறே, இத்திட்டம் நாட்டில் "கதிர்வேள் திட்டம்" என்ற பெயரில் அரசினால் நடைபெறத் தொடங்கியது.

அந்த ஆண்டு நாட்டின் சிறப்பான குடிமகன் விருது கதிர்வேளுக்கு கிடைத்தமை யாரும் ஆச்சரியப் படுகின்ற விடயமாக இருக்கவில்லை.

## மாட்டிக்கொண்ட முருங்கைமரம்

மத்திய வங்கியினால் நடத்தப்பட்ட கூட்டத்திற்கு சனம் பெரிதாக வரவில்லை. ஆனால், அவர்கள் கூறிய விடயம் பெரிதாக இருந்தது. சசி கூட்டத்தில் கலந்து கொண்ட சிலரில் ஒருவன். அவனும் கூட்டத்திற்கு என்று வரவில்லை. "கோயிலடியில் என்ன ஆக்கள் நிக்கிறாங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாப்பம்" என்று வந்து "மாட்டிக்கொண்டோம்" என நினைத்தே கூட்டத்தில் இருந்தான்.

கூட்டம் கலந்துரையாடலாகவே இருந்தது. சிலர் மாத்திரமே வருகை தந்தது. ஒருவகையில் நல்லாதாகவும் தெரிந்தது சசிக்கு. அனைவரும் கேள்விகளுக்கூடாக தமது ஐயங்களை தெளிவுபடுத்திக் கொண்டனர்.

முருங்கை மரத்தின் பயன்களும் அதிலிருந்து எவ்வாறு வருமானத்தை பெற்றுக்கொள்ளலாம் என்பதை தெளிவுபடுத்துவதுமே வந்தவர்களின் நோக்காக இருந்தது.

சசி உயர்தரம் வரை படித்துவிட்டு வேலை யில்லாது தன்து நண்பர்களோடு ஊர் சுற்றுவதும், கிடைக்கும் நேரங்களில் கங்கைக் கரைக்குச் சென்று மணல் ஏற்றுவதும், அதன் மூலம் கிடைக்கும் பணத்தை இரண்டு மூன்று நாட்களுக்கு பியர் குடிப்பதன், மூலமாக மகிழ்ச்சியாக இருப்பதுமே நாளாந்த நடவடிக்கைகள்.

ஊரில் நல்ல பெயர் அவனுக்கும் அவன் நண்பர்களுக்கும் இல்லை. வீட்டிலும் ஒரே சிக்கலாகத்தான் இருந்தது.

கூட்ட முடிவில் புத்தருக்கு ஞானம் கிடைத்தது போல் சசிக்கும் ஏதோ பிறந்தது. எதிர்காலம் பற்றிய அக்கறை முதன்முதலாக மனதில் எழுந்தது. அதனை யாருடனும் பகிர அவன் விரும்பவில்லை. "வாழ்ந்து காட்ட வேணும்" என்ற வைராக்கியம் மனதில் எழுந்தது. மத்திய வங்கியின் அறிவுரையினை அப்படியே கடைப்பிடித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது அரை ஏக்கர் நிலத்தை முருங்கைச் செய்கைக்கு பயன்படுத்துவது. அதோடு, ஊரில் உள்ளவர் களுக்கும் இதனை ஊக்கப்படுத்துவது என எண்ணினான். அதனை நடைமுறைப்படுத்தினான். விவசாயத் திணைக் களத்தின் உதவி என்பதை விட அவர்களது ஊக்கமளிப்பு அவனை உற்சாகமூட்டியது.

தன்னுடன் இன்னும் பதினைந்து பேரை தேர்ந்த் தெடுத்து கீரிமலைக்கு முருங்கைச் செய்கையையும் அதன் மூலமாக எவ்வாறு வருமானம் ஈட்டுகின்றார்கள் என்பதனையும் பார்ப்பதற்காக விவசாயத் திணைக்கள பேருந்தில் கள விஜயம் மேற்கொண்டு அறிவினைப் பெற்றான்.

ஆரம்பத்தில் கீரிமலையில் உள்ளவர்களுக்கே தமது உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதென தீர்மானித்தார்கள்.

ஐந்து மாதங்களின் பின்னர், முருங்கைக்கீரை யினை மரத்திலிருந்து பிரித்தெடுத்தார்கள். அதனை காய வைத்தார்கள். பின்னர் அதனை தூளாக்கினார்கள். பெறப்பட்ட பயிற்சிகளின் அடிப்படையில் செயற் பட்டார்கள். ஒரு கிலோ முருங்கைக் கீரைத் தூள் ஆறாயிரம் உருபாய்க்கு விற்பனை செய்தார்கள். ஒரு கிலோ தூள் பெறுவதற்கு ஐந்து கிலோ பச்சைக் கீரை தேவைப்பட்டது. முதலாவது தடவை எல்லோருமாகச் சேர்ந்து இருபத்து மூன்று கிலோ தூள் உற்பத்தி செய்ய முடிந்தது.

ஒரு கிலோ உற்பத்தி செய்வதற்கு ஆயிரம் ரூபா கூட செலவாகவில்லை என்பது ஊக்கமளித்தது சசிக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது தோட்டத்தில் நூற்றி எண்பது மரங்கள் நட்டிருந்தான்.

ஒவ்வொரு நாளும், சசி இருபது கிலோ கீரைகள் பறித்து, இரண்டு நாட்களில் அதனைக் காயவைத்து நான்கு கிலோ தூள் பெற்றான். ஒரு நாளின் வருமானம் இருபத்தினான்காயிரமாகியது. முருங்கைப்பூவிலிருந்து எண்ணை பெறுவது, முருங்கை விதையிலிருந்து எண்ணை பெறுவது என வியாபாரம் பெருகியது. இதனைப் பார்த்து ஊரில் உள்ள அனைவரும் தமது வளவினுள் முருங்கை மரம் நட்டதோடு, சசியிடம் விற்பனையும் செய்தனர்.

சசி தனது வீட்டை சிறிய கைத்தொழிற்சாலையாக மாற்றினான். மூன்று பேருக்கு வேலை கொடுத்தான். இரண்டு வருடத்தில் ஜேர்மன் நாட்டுக்கு பலவகையான முருங்கை உற்பத்திப் பொருட்கள் ஏற்றுமதி செய்தான்.

தனது புதுத் துணைவி இணையத்தில் தேர்ச்சி பெற்றவளாக இருந்தமை, அவனது ஏற்றுமதி வர்த்தகத்திற்கு அவளது அறிவு துணையாகியது. ஊரிலிருந்து எல்லோராலும் ஒதுக்கப்பட்ட சசி, அதிசொகுசு வாகனத்தில் ஒரு கோடீஸ்வரனாக வாழ்ந்து கொண்டிருந்தது ஏனையவர்களுக்கு எடுத்துக்காட்டாகியது.

## மறுக்கப்படும் மனிதாபிமானம்

காந்திமதி பிரதேச செயலாளர் முன் நின்று அழுது கொண்டிருந்தாள். "என் துணைவர் சாவடைந்து எட்டுக்குக் கூட வைக்கவில்லை. வீட்டைவிட்டு வெளியே போகக் கூடாது என்று சொன்னார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் வரவேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது" அழுதுகொண்டே பிரதேச செய லாளரிடம் சொன்னாள்.

அவளது நிலையறிந்து எதுவித தாமதமுமின்றி அவளது தேவைகளை இயலுமான விரைவாக செய்து முடித்துக் கொடுத்தார் பிரதேச செயலாளர். "உங்கட நிலைக்கு நான் கவலையடைகிறேன். நான் அவருக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கிறன்" என்று அவளை சமாதானப்படுத்தி அனுப்பி வைத்தார் பிரதேச செயலாளர்.

நான்கு நாட்களுக்கு முன்னர், மருத்துவமனையில் சிற்றூழியராக பணியாற்றிய காந்திமதியின் துணைவர் சிறுநீரக செயலிழப்பு காரணமாக சாவடைந்தார். அவரது சம்பளத்தினைப் பெற்றுக்கொள்ள வேண்டிய தேவை காந்திமதிக்கு ஏற்பட்டது.

துணைவர் சாவடைந்ததை கிராம உத்தியோகத்தர் உறுதிப்படுத்தியதற்கான ஆவணத்தினை கொண்டு வருமாறு, மருத்துவமனையிலிருந்து கோரினார்கள். தனது மகனிடம் அதனைபெற்று வருமாறு கிராம உத்தியோகத்தரிடம் அனுப்பினாள். அவரோ மருத்துவ மனைக்குச் சென்று மருத்துவரின் சாவை உறுதிப்படுத்திய ஆவணத்தைக் எடுத்துவருமாறு, கூறி அம்மாவை நேரிடையாக வந்து தன்னைச் சந்திக்குமாறு கூறி, மகனை அனுப்பிவிட்டார்.

வீட்டில் சாவடைந்ததால் மருத்துவரால் உறுதிப் படுத்த முடியாத நிலையிலிருப்பதை நியாயபூர்வமாக மருத்துவர் தெளிவுபடுத்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுநாள் காந்திமதி கிராம உத்தியோகத்தரின் அலுவலகத்திற்குச் சென்றாள். அவளை வெளியே இருக்கு மாறு கூறிவிட்டு, தனது பணியில் கவனம் செலுத்திக் கொண்டிருந்தார். இரண்டு மணி நேரத்தின் பின்னர், அவளை அழைத்து விபரம் கேட்டார். " மருத்துவர் உறுதிப்படுத்தாமல், என்னால் எதுவும் செய்ய முடியாது." என மறுத்துவிட்டார். எவ்வளவோ கூறி கெஞ்சியும் பார்த்தாள் பலன் கிடைக்கவில்லை. அழுதவாறே வீடு வந்தாள்.

என்ன செய்வதென்றே தெரியவில்லை. ஊரில் உள்ள பெரியவர்களிடம் கதைத்தாள். அவர்களது ஆலோசனையின் அடிப்படையில், பிரதேச செயலாளரை சந்திக்க வேண்டியேற்பட்டது. குடும்ப உறுப்பினர்கள் போக வேண்டாம் என தடுத்தனர். அவளுக்குத்தான் தனது குடும்பத்தின் பொருளாதார நிலை தெரியும். குடும்பத்தினரின் கருத்துக்களை கவனத்திலெடுக்காது தனது காரியத்தை முடித்தாள்.

"முழுநாளுமே ஊரிலிருந்து மக்களுக்காக பணியாற்ற வேண்டிய பொறுப்பிலிருப்பவர்கள் கிராம உத்தியோகத்தர்கள். பலர் சிறப்பான பணிகளை ஆற்றுகின்றனர்.

இப்படியான ஒரு சிலர் மனிதாபிமானம் இல்லாது செயற்படுகின்றமையால், தான் எல்லா கிராம உத்தியோகத்தர்களுக்கும் கெட்ட பெயர் வருகின்றது" என ஓய்வு நிலை கிராம உத்தியோகத்தர் அவ்வூர்த் தலைவருடன் பேசிக்கொண்டிருந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளியரங்கு கூட்டம்

"அப்பா மறந்து போயிடுவார் ஞாபகப்படுத்தி விடுங்க அம்மா" என்ற சிவம், அவசர அவசரமாக எட்டு மணி வகுப்பிற்கு ஈருளியை எடுத்து வேகமாகச் சென்றான்

ஒன்பது மணிக்கு கூட்டம். பத்து மணிக்கு வீட்டிற்கு வந்த தந்தையிடம் "என்ன கெதியா வந்திற்றீங்க அப்பா" என்றான் சிவம். "கையெழுத்து வைக்கத்தானே போற வச்சாச்சி. வந்திற்றன். உனக்கு நாளைக்குப் பிரச்சினை இல்ல" அப்பாவின வார்த்தைகள் எரிச்சலை ஏற்படுத்தியது மகனுக்கு

"அம்மா இதுக்குத் தான் நான் உங்களப் போகச் சொன்ன னான். அங்க என்ன நடந்தது எண்டே தெரியாது." ஆர்வமாக கவலையடைந்த மகனின் நியாயமான கருத்துக்களை தனது சிந்தனையில் பறக்கவிட்டார் அப்பா.

கூட்டத்தில் இருந்திருக்கலாம் தான். இரண்டாயிரத்தினைனூறு பிள்ளைகளுக்கு அதிகமாக படிக்கும் பாடசாலையில் வெறும் நானூறு பேர் மட்டுமே இருக்கக்கூடிய மண்டபத்தில் கூட்டம்.

முதலில் வந்த பெற்றோர்கள் மாத்திரம் உள்ளே இருந்தனர் பின்னர் வருகை தந்த பெரும்பான்மையான பெற்றோர்கள் வெளியே நின்றனர். வெளியே இருப்பதற் கேற்ற இருக்கை வசதிகளும் செய்யப் படவில்லை. வெயில் நேரத்தில் எவ்வளவு நேரம் நிற்பது? அங்கிருந்த ஓர் ஆசிரியரிடம் சென்று பேசி இருப்பதற்கான வசதி களைச் செய்த பின்னர், அங்கு இருப்பதற்கு விருப்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மில்லாமல் வீடு திரும்பிவிட்டார் அப்பா. மகனின் ஆதங்கம் அப்பாவை சங்கடத்திற்கு உள்ளாக்கி விட்டது.

மறுநாள், பள்ளிக்குச் சென்று பள்ளி முதல்வருடன் நேற்றைய கூட்ட விடயமாக பேசினார். இனிவரும் காலத்தில் மாலை ஐந்து மணியின் பின்னர் திறந்த வெளியரங்கில் பொதுக்கூட்டத்தை நடத்துங்கள். அனைவரும் கூட்டத்தில் ஈடுபாட்டுடன் கலந்து கொள்ள வாய்ப்பாகும் என்ற தனது ஆரோக்கியமான ஆலோசனை யை முன்வைத்தார் அப்பா.

முதல்வரும் அப்பாவின் கருத்தில் உள்ள நியாயத்தை புரிந்துகொண்டு ஏற்றுக்கொண்டார். கவலையும் தெரிவித்தார். இருநாள் நடந்தவைகளை விரிவாக மகனிற்கு தெளிவு படுத்தினார் அப்பா. "அடுத்த ஆண்டும் கூட்டத்திற்கு நீங்களே போங்க அப்பா" மகிழ்ச்சியுடன் கூறினான் சிவம்."

## மலையுச்சியில் கோழை

மலை உச்சியில் இருந்த அமுதனுக்கு தனது இரண்டு பிள்ளைகளின் முகமும் கண் முன்னே வந்து நின்றன. கண்கள் குளமாகின.

வேறு வழி?

நடக்க முடியாத கால்களை வைத்துக்கொண்டு, என்ன செய்வது? கடன் தரவும். இனி ஆட்கள் இல்லை. துணைவியின் ஆறுதலான வார்த்தைகள் மாத்திரம் நமக்கு சோறு போடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயக்கத்தில் இருந்த போது அவனது நிலையை எண்ணிப்பார்த்தான். அவனது திறமையை மெச்சாதவர்கள் யார்? அதனால் தானே, இன்று நடக்க முடியாத நிலை ஏற்பட்டது எதிர்காலத்தில் நம்மட பிஞ்சுகள் நிம்மதியாய் வாழ வேணும் அமுதன் வாயால் அடிக்கடி வரும் வார்த்தைகள்.

அப்படியானவன் இன்று தனது மனதை உரமாக்கிக் கொண்டு உயிரை உலகிலிருந்தே அனுப்பும் செயலுக்கு தயாரானான். வேறு வழியில்லையென்பதால் எடுத்த முடிவு.

பிள்ளைகளை என்ன செய்வாள் துணைவி? அவள் என்ன செய்வாள்? மலை உச்சியில் தவன்று ஏறிச் சென்றபின் சிந்திக்கத் தோன்றியது.

தன்னைதானே உரமாக்கிக் கொண்டு சில இடங்களில் உருண்டும் கூட ஒருவாறு இறங்கி வீடு சேர்ந்தவன் எதுவும் வீட்டில் கூறவில்லை.

மறுநாள், தன்னுடன் இயக்கத்தில் இருந்த செழியனிடம் சென்று உடைந்து கிடந்த ஈருருளியை தனக்கு திருத்தித் தருமாறும் ஆறு மாதத்தில் பணம் தருவதாகவும் கூற செழியனும் அவ்வாறே செய்தான்.

புனர்வாழ்வு பெற்ற இடத்தில் தொழிற்பயிற்சி பழகியதை பயன்படுத்துவதாக திட்டம். பால் வாங்கி அதிலிருந்து பாலினிப்புகள் செய்தான். துணைவியின் ஒத்துழைப்பும் கிடைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளொன்றிற்கு ஐம்பது ரூபாயில் தொடங்கிய இலாபம் மூன்று மாதத்தில் ஆயிரத்தி ஐநூறு ரூபாயாகியிருந்தது.

இப்போது கடை கடையாக கொண்டு செல்வதில்லை. கடைக்காரர்களே, அமுதன் வீட்டிற்கு வந்து, பால் இனிப்புகளுடன் யோக்கட்டும் தயிரும் வாங்கிச் சென்றார்கள்.

ஆறு மாதத்தில் அமுதன் நான்கு பணியாளர் களுக்கு முதலாளியாகவும் வங்கியில் பெற்ற கடனுதவி யினால் ஒரு முச்சக்கர வண்டிக்கு உரிமை யாளராகவும் வளர்ந்திருந்தான்.

நாட்கள் மாதங்களாகி வருடங்களாகின. பிள்ளை கள் படித்து பெரியவர்கள் ஆனார்கள். பட்டமும் பெற்றார் கள்.

இருவரும் தொழில் தேட வேண்டிய தேவை இருக்கவில்லை. அப்பாவின் "இராசகிளி பால்பொருட்கள் நிலையத்தில்" பணியாற்றிக் கொண்டிருக்கும் ஒருநாளில், "தான் ஒரு கோழையாகாமல் மலையுச்சியிலிருந்து காத்தது மறைந்த தன் தோழன் இராசகிளியின் நம்பிக்கை தரும் சொற்கள் தான்" என்பதைக் கூற.

"எப்படித்தான் எங்களையெல்லாம் விட்டிற்று போக மனம் வந்ததோ" என்று கண்ணீர் சொரிந்தாள் தமிழரசி எனப் பெயரை மாற்றிக் கொண்ட சந்திரலேகா என்ற இரு பிள்ளைகளின் தாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொக்குவாய்க் கேள்வி

"மாங்காய நாம மரத்தில இருந்து ஆய்ஞ்சு வச்சா கெதியா பழுக்குது அப்ப ஏன் மரத்திலயே இருந்து பழுக்க கனநாள் எடுக்குது?" என்ற ஆறு வயது தயாவின் கேள்வி அப்பாவை விழி பிதுங்க வைத்து விட்டது. விடையும் தெரியவில்லை. மகனிடம் அதனைக் காட்டிக்கொள்ளவும் தயாரில்லை. "மரகதம் மாடு அறுத்திற்று வந்திற்று போல இருக்கு" என்று பலத்த குரலில் கேட்டுக் கொண்டே மகனிடமிருந்து போனால் போதும் என்ற நிலையில் வெளியே சென்றார் அப்பா.

சில நேரங்களில் பிள்ளைகள் கேட்கும் கேள்விகள் தாய் தந்தையரை சிக்கலில் சேர்க்கின்றது. என்னவோ உண்மைதான். தயாவிற்கு இப்ப பத்தொன்பது வயது. ஊரில் மழையில்லை இம்முறை குளத்தில் நீர்ப் பற்றாக்குறையால் நெற்செய்கை இல்லை என அறிவிக்கப்பட்டது. வரட்சி நிவாரணம் அரசினால் வழங்கப்படுவதற்கான ஆயத்தங்கள் நடைபெற்றன. கிணறுகள் வற்றிவிட்டன. குடிப்பதற்கு நீர் பெறுவது சிக்கலாகிவிட்டது. பிரதேசசபை தமது உழவு இயந்திர தாங்கியில் ஒரு நாளைக்கு ஒரு தடவை வந்து நீர் வழங்கிச் சென்றார்கள்.

தயாவின் வீட்டிற்கு அரை கிலோ மீற்றர் தூரத்தில் கடல் இருந்ததால், மாலை வேளையில் கடலில் குளித்தார்கள்.

தயா சிறிய வயதிலிருந்தே நல்ல கெட்டிக்காரன். குடிநீருக்கு தீர்வு காண வேண்டும என நினைத்தான். கடல் நீரிலிருந்து குடிநீர் தயாரிப்பதற்கான நடவடிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் ஈடுபட்டான். சிறிய இயந்திரமொன்றை வடிவமைத்தான். ஊரில் உள்ள மெக்கானிக் ராசன் அண்ணனும் அவனுக்கு சிறு சிறு உதவிகள் செய்தார். இரண்டு வாரத்தில் தயாவின் இயந்திரத்தின் மூலமாக மணித்தியாலயத்திற்கு ஐம்பது லீற்றர் குடிநீராக கடல்நீர் கொடுத்தது. ஊரில் உள்ளவர்களுக்கு மகிழ்ச்சி.

"இத பெரிதாகச் செய்தா கூட தண்ணீர் கிடைக்கும் தானே" என்ற நாகம்மா கிழவியின் பொக்குவாய் கேள்வி தயாவிற்கு உந்துதலளித்தது.

"அதற்கு நிறைய காசு வேணும் பாட்டி".

"ஊராக்களக் கூப்பிட்டு விசயத்த சொல்லி கேட்டுப்பார். தருவாங்க".

பாட்டியின் ஆலோசனைப்படி, ஊராரை கூட்டத்திற்கு அழைத்து விடயத்தை தெளிவுபடுத்தினான்.

ஊரில் நானூற்றி பதினேழு குடும்பங்களுக்கும் ஒரு நாளைக்கு எப்படியும் பதின்மூவாயிரம் லீற்றர் நீராவது தேவை. அப்படி நீரை தயாரிப்பதற்கான இயந்திரத்தைத் தயாரிப்பதற்கு பதினைந்து இலட்சத்துக்கு மேல் தேவை என தயா கூற "தம்பி! அது ஒரு சிக்கலே இல்ல. நம்ம யாரிட்டயும் போகத் தேவையில்ல. ஒரு குடும்பத்து ஐயாயிரம் போட்டாலே போதும். இப்ப நாம அதவிடக் கூடத்தானே குடுத்திற்று இருக்கிறம்" என்றார் ஊர்த்தலைவர்.

அனைவரும் தலைவரின் கூற்றை ஆமோதித்தனர். ராசன் மெக்கானிக்கும் தயாவும் சேர்ந்து மூன்று கிழமையில் தங்கள் வேலையை முடித்து விட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேச செயலகத்திலிருந்து திட்டத்தை வந்து பார்த்தார்கள். மறுநாள் முதலமைச்சரும் வந்து பார்வை யிட்டார் இந்த திட்டத்தினை தயாவின் உதவியுடன் பல ஊர்களில் செய்வதற்கான நடவடிக்கைகளை அரசு செய்தது.

ஆண்டில் சிறந்த புத்தாக்குனராக தயா தெரிவு செய்யப்பட்டு பாராட்டப்பட்டான்." தயாவிற்கு இவ் வேலைத்திட்டத்தின் மூலமாக தொழிலும் கிடைத்திருந் தது.

## யாதுமாகி நின்று

மருத்துவமனையிலிருந்து வீடு வரும் வரை ஐந்திணையரசி மகன் கதிர்வேலுவுடன் எதுவும் பேச வில்லை முச்சக்கரவண்டியிலிருந்து வீட்டு வாசலில் வந்து இறங்கி நொண்டி நொண்டி நடந்து சென்று முற்றத்தில் இருந்த நாற்காலியில் அமரும் போதே அம்மா வாய் திறந்தாள்.

"நான் கூட்டத்திற்குப் போக வேணாம், போக வேணாம் எண்டு எத்தின தரம் சொன்னனான். ஓம் ஓம் எண்டு மாடு மாரி தலய ஆட்டிப் போட்டு போயிருக்கிறா உனக்கு இதுவும் வேணும் இன்னமும் வேணும்." கொட்டித் தீர்த்தாள் கதிர்வேலைப் பெற்றெடுத்த தாய்

அம்மாவின் கோபத்தில் நியாயம் இருப்பதை கதிர்வேல் தனக்குள் உணர்ந்து கொண்டான். கும்பம் முடியிற வரை கோயில் பக்கமே போற இல்ல என்று சபதமெடுத்துக் கொண்டான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாவின் தம்பி சந்தனச்சென்னி மருமகனுக்கு காலிலும் முகத்திலும் ஏற்பட்ட காயத்தைப் பார்ப்பதற்காக கேள்விப்பட்ட உடனேயே ஓடி வந்துவிட்டார். நல்ல வேளை அவருக்கு தகவல் முன்னர் தெரியாது. தெரிந்திருந்தால் கூட்டத்தில் பலர் மருத்துவமனையில் இருந்திருக்க வேண்டியிருக்கும்.

கதிர்வேலின் காயத்தைப் பார்த்தவுடன், அந்த மனுசன் அழுதே விட்டார். தூக்கி வளர்த்தபிள்ளை இப்படி அடிவாங்கி காயத்துடன் இருந்த போது சந்தனச்சென்னியால் பொறுக்க முடியவில்லை. மருமகனின் வேண்டுகோளினால் கோபம் தணிந்து யாருக்கும் எதுவும் செய்வதில்லை என சத்தியம் செய்துவிட்டு தனது வீட்டுக்குப் போனார்.

கும்பம் தொடங்கி விட்டாலே, சிக்கல் ஏற்படுவது ஊரில் வழக்கம். ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு சிக்கல் உருவாகும். இம்முறை தலைமைப் பூசாரிக்குப் போட்டி. தற்போது இருக்கும் தலைமைப் பூசாரியின் மகனின் பிள்ளை சாவடைந்ததால், அவரால் கோவிலுக்குப் போக முடியாது போய்விட்டது. அந்தப் பொறுப்பை யாரிடம் கொடுப்பது என்பதில் தான் சிக்கல். துணைப் பூசாரியாக இருந்து வருகின்ற கற்பூரமதியனை தலைமைப் பூசாரியாக்க கோவில் செயற்குழு முடிவெடுத்தது.

ஆனால் தலைமைப்பூசாரியோ தனது உறவினர் ஒருவரை தனது இடத்திற்கு முன்மொழிந்தார். அதனை செயற்குழு ஏற்றுக் கொள்ளவில்லை. பேச்சுவார்த்தைகள் பலனளிக்கவில்லை. கருத்துக்கள் வன்முறைகளை தோற்றுவிக்கும் அளவிற்கு சென்றன. உடனடியாக செயற்குழு பொதுக்கூட்டத்திற்கு அழைப்பு விடுத்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுக்கூட்டத்தில் பரிமாறப்பட்ட கருத்துக்கள் கைகலப்பில் கொண்டு போய்ச் சேர்த்தன சண்டையில் ஈடுபடுபவர்களை பிடிக்கப் போன கதிர்வேலுக்கு முகத்தில், காலில் என கூட்டத்தோடு நடந்த சண்டையில் பரிசளிக்கப்பட்டது. பலரது இரத்தம் கும்பம் தொடங்கும் முன்னரே பலி கொடுக்கப்பட்டது.

காவல்துறை தலையீட்டினால், சண்டை முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. ஆனால், கும்பம் வைக்க முடியாத நிலை ஏற்பட்டது. இரு பகுதியினரும் சமாதானமாக விரும்பினாலும் காவல்துறை அதற்கு தயாராக இருக்க வில்லை. கும்பம் வைக்க முடியாதென தடையுத்தரவு போடப்பட்டது.

"நான் பிறந்ததுக்கு இந்த முறை தான் கும்பம் நம்மட ஊரில வைக்கல்ல. கலிகாலம், பாதகனுகள் தங்கட பதவிப் போட்டியால ஊர நாசமாக்கிப் போட்டானுவள்.

அரசியல்வாதிகள் தான் கதிரைக்கு அடிபடுறானு வள் எண்டா அவனுவள விட இந்த பூசாரிகள்ற தொல்ல தாங்க முடியல." என முணுமுணுத்துக் கொண்டு சென்றார் முதலாம் பூசை உபயகாரரான எழுபத்தியிரண்டு வயது கலியுகவரதனார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசு பாலும் தரும்

வடிவேல் தனது பேரனை அருகில் இருக்கச் சொல்லிவிட்டு, முகத்தில் ஒரு வித பெருமிதத்துடன் காணப்பட்டார். தனது மகன் ஒன்பது நாட்களுக்கு முன்னர் தாய்லாந்துக்குச் சென்று, இன்று நாட்டிற்குத் திரும்பி வீட்டிற்கு வருவதற்கு, சிறிது நேரமே இருக்கும் நேரத்தில் தனது பேரனுக்கு தனது வாழ்க்கையில் எவ்வாறு முன்னேற்றம் ஏற்பட்டது என்பதை சொல்லிக் கொண்டிருந்தார். பேரனின் இடைவிடாகேள்விகள் வடிவேலிற்கு உற்சாகமூட்டின.

சண்முகத்தாரின் பசுப் பட்டியில் சென்று பால் வாங்கி அதனை தயிராக்கி நகரில் உள்ள ஒவ்வொரு வீடு வீடாக விற்கத் தொடங்கியபோது நகர்ப்புறத்திலுள்ள வீடுகளில் சேதனப் பசளைகளை தாம் வளர்க்கும் பூச்செடிகளுக்கு போடுவதைப் பார்த்து,

"என்ன போடுறீங்க? மாட்டெரு மாதிரி இருக்கே" என்று கேட்க

"இல்ல இது ஓர்காணிக் பேற்றிலைசர்" என்று வீட்டுக்காரர் சொல்ல வடிவேல் எதுவும் விளங்காதவனாக

"இது மாட்டெரு தான்" என்பதில் உறுதியானவன் அதனை வாங்கிய கடையின் விபரத்தைப்பெற்று அந்தக் கடைக்குச் சென்று விபரம் அறிந்தான்.

தான் நினைத்தது சரி என்பது உறுதிப்படுத்திக் கொண்டு அதனை நாமும் செய்ய வேண்டும் நல்ல இலாபம் கிடைக்கும் என எண்ணினான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்முகத்தாரின் பசுப்பட்டியில் உள்ள எருவை உரப்பையில் எடுத்து வந்து. அதனை அரித்து பொலித்தீன் பைகளில் ஒரு கிலோ அளவில் பொதி செய்தான். பொலீத்தீன் பை மாத்திரமே மூலதனம். மறுநாள் நகரிற்கு, தயிருடன் பத்து பைகளில் எருவும் எடுத்துச் சென்றான். அவனே பூ மரங்களுக்குப் போட்டும் விட்டான். ஒரு கிலோ பத்து உருபாக்கு கொடுத்தான் நூறு உருபா மேலதிக இலாபம் கிடைத்தது.

அடுத்தநாள் பல புதிய வாடிக்கையாளர்கள் அறிமுகமானார்கள். பழைய வாடிக்கையாளர்களின் உதவி பேருதவியாகியது.

ஒவ்வொரு நாளும் சராசரியாக நூறு கிலோ தேவைப்பட்டது. போக்குவரத்து வசதிகள் இன்மையினால், ஐம்பது பைகள் மாத்திரமே கொண்டுசெல்ல முடிந்தது. இவ்வாறு ஒரு மாத காலத்திற்கு கொண்டு போனான். அடுத்த மாதம் வங்கி நிதியின் மூலமாக முச்சக்கர உந்துருளி ஒன்றினை நகரில் உள்ள ஒரு வாடிக்கை யாளரின் உதவியினால் பெற முடிந்தது.

பசு எரு நாளொன்றுக்கு இருநூறு கிலோ, தயிர் நூறு சட்டி என வியாபாரம் இலாபத்துடன் கூடிச்சென்றது.

ஆயிரங்களுக்குச் சொந்தமான வடிவேல் பல ஆயிரங்களுக்குச் சொந்தக்காரனாகி இலட்சங்களுக்கு அதிபதியானான். மகனின் புதுவரவு அவன் பெரியவனாக மகனுடன் சேர்த்து தானும் அவ்வூரில் ஒரு கோடீஸ்வரனானான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகன் வீடு வீடாக பசு எருவை விற்கவில்லை. விற்பதற்கு தற்போது பசுப்பட்டிகளில் தாராளமாக பசு எரு கிடைப்பதுமில்லை. மகன் சேதனப் பசளை நவீன முறையில் உற்பத்தி செய்யத் தொடங்கினான் அதனை விரிவுபடுத்தும் நோக்கில், நவீன இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்காக தாய்லாந்து சென்றான்.

தனது பழைய நினைவுகளையும் சாதனை களையும் பேரனுக்கு சொல்லி மகிழ்ந்த வடிவேல், மகனது வாகனம் வீட்டு வாசலில் வந்து நின்றவுடன், ஓடிச்சென்று கதவைத் திறந்து வாய் நிறைய பல்லாக வரவேற்றார் தன் செல்வத்தை.

## நிதானம் தேவை

இடுகாட்டில் உடலத்தை அடக்கம் செய்துவிட்டு, அனைவரும் வீடு திரும்பிக் கொண்டிருந்தனர். தணிசேரனுக்கு அவ்விடத்தை விட்டு அகல மனம் வரவில்லை. அவனால் நம்ப முடியவில்லை. எப்படி தனது கண்களில் இருந்து தொடர்ந்து கண்ணீர் வந்து கொண்டே இருக்கிறது என்பதைக் கூட நம்ப முடியவில்லை அவனால்.

உயர்தரத் தேர்வுகளின் முடிவுகள் வெளியாகி விட்டன. பல்கலைக்கழகத்திற்கு செல்லக்கூடிய பெறுபேற்றி னை தணிசேரனும் அவன் உயிர் நண்பன் இளவளவனும் பெற்றிருந்தார்கள். மகிழ்ச்சியாய் இரு நாட்களை கழித்தார்கள். பள்ளி நாட்களில் பிரத்தியேக வகுப்பிற்குச் செல்கின்ற போது இளமதியைச் சந்திப்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் பின்னால் சென்று, இளமதி வீட்டு வாசலினுள் புகுந்த பின்னரே இருவரும் தமது இருப்பிடம் செல்வார்கள். இளமதி ஓராண்டுக்கு முன்னர் குழப்பத்தில் இருந்தாள்.

இருவரில் யார் தன்னை விரும்புகின்றான் என்பது தெரியாது. நண்பர்களுக்கும் அதே சிக்கல் இருந்தது. "இளவளவன், இள்மதி பெயர் பொருத்தத்த பாத்தியா மச்சான்" என்ற போது தான் தணிசேரன் தன் நண்பனின் மனக்கிடக்கையைத் தெரிந்து கொண்டான். சற்றுக் கவலை ஏற்பட்டாலும் நண்பனுக்கு உதவியாகவும் ஒத்துழைப்பாக வும் இருந்து வந்தான்.

இளமதிக்கும் பல்கலைக் கழகம் செல்லும் வாய்ப்புக் கிடைத்திருந்தது.

மூவரும் வெற்றியினை குளிர்களி அருந்தி மகிழ்ந்து கொண்டனர். தணிசேகரன் தனது தந்தையின் உந்துருளியை வார இறுதி நாட்களில் எங்காவது போ வதற்கு என பொய் சொல்லி எடுத்து வருவான். நண்பர்கள் இருவரும் மகிழ்ச்சியாய் சுற்றுவார்கள். மாலை நேரங்களில் விளையாடுவார்கள். சிறந்த பிள்ளைகள் என்ற பெயர் ஆசிரியர்களிடத்தில் பெற்றவர்கள்.

தணிசேரன் வழமை போல் தனது தந்தையின் உந்துருளியை எடுத்து வந்தான். இளவளவன் துணிச்சல்காரன். எப்போதும் அவன் தான் உந்துருளியைச் செலுத்துவான். வேகமாகச் செலுத்தா விட்டால், அவனு க்குத் திருப்தி இருக்காது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றும் அப்படி வேகமாகத்தான் சென்று கொண்டிருந்தார்கள். நண்பர்கள் இளமதியைத் தாண்டியவுடன் சற்று தூரத்தில் பசுவின் பின்னால் சென்ற கன்றொன்று, வீதியை நோக்கி திரும்பி பாய்வதற்கும் உந்துருளி அவ்விடத்திற்குப் போவதற்கும் நேரம் சரியாக இருந்தது. இருவரும் வீதியின் மறு பக்கத்தில் தூக்கி வீசப்பட்டனர். இளமதி ஐயோ என்ற அலறலுடன் மயங்கினாள்.

வீதியில் நின்றவர்கள் ஓடி வந்து பார்த்த போது இளவளவனின் தலைக்கவசம் அருகிலிருந்த மின்கம்பத்திற்கு அருகில் கிடந்தது. தணிசேரன் அம்மா, அம்மா என அழுது கொண்டிருந்தான். இளவளவன் அறிவற்ற நிலையிலிருந்தான். மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டனர் நண்பர்கள்.

எட்டு நாட்களின் பின்னர் தணிசேகரன் வீடு வந்தான். இளவளவன் கண்டி மருத்துவ மனையில் மேலதிக சிகிச்சைக்காக அனுப்பப்பட்டிருந்தான். சிகிச்சை பலனின்றி, பதினேழாவது நாள் இவ்வுலகை விட்டு இளவளவன் சென்றுவிட்டான்.

தணிசேகரனால் தாங்க முடியவில்லை. தனது உந்துருளியால் தனது நண்பனின் உயிர் பறிக்கப்பட்டு விட்டதே என எண்ணி எண்ணி இடுகாட்டில் தாங்க முடியாமல் அழுதவாறு நின்று கொண்டிருந்தான்.

இளமதி நடந்தவைகளை அடிக்கடி இன்றுவரை நினைத்துக் கொண்டே இருக்கிறாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## • இலைக்கஞ்சி

கதிரையில் சாய்ந்து அமர்ந்திருந்திருந்து, கவலை போக்க என்ன வழி என சிந்தித்துக் கொண்டிருந்தான் தமிழ்நாதன்.

"என்ன யோசித்துக் கொண்டிருக்கிறீங்க" என்று தனது அன்பான துணைவி பூங்குன்றம் கேட்ட பின்பே, தனது நினைவிற்கு வந்தான்.

வறுமையிலும் ஏழ்மை என்ன என்று காட்டிக் கொள்ளாத வரம் பூங்குன்றம் அவனுக்கு. பதில் வரவில்லை. துணைவி கொண்டு வந்த தேனீரை சுவை த்துக் கொண்டு இருந்தவனுக்கு பொறி தட்டியது. திட்டத்திற்கு தயாரானான்.

கடந்த மாதம் மருத்துவமனைக்கு சென்றிருந்த போது, லயன்ஸ் கழகத்தால் அங்கு வருகின்ற நோயாளர் களுக்கு இலைக்கஞ்சி கொடுத்தபோது, அதில் ஒரு குவளை வாங்கிக் குடித்துவிட்டு, அதனை எவ்வாறு செய்யலாம் என்பதனையும் அவர்களிடம் கேட்டுத் தெரிந்து வைத்திருந்தான்.

சிறிதாக தொடங்கலாம் என எண்ணி துணைவி யிடம் கூற மறுப்பிற்குப் பதிலாக ஊக்கமூட்டினாள் பூங்குன்றம்.

மறுநாளே, இலைக்கஞ்சி தயாரிக்கலாம் என சொன்னாள். முடக்கத்தான், முருங்கை, முதலீடில்லா மூலப் பொருட்களாயின. வல்லாரை பிடி உருபா இருபது, ஆறு பிடிகள் பொன்னாங்காணி ஐந்து கட்டுகள், சிவப்புப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பச்சையரிசி, அரைக்கிலோ தேங்காய் ஒன்று, பயறும் காக்கிலோ போடுவம் என்ற பூங்குன்றத்தின் சத்துணவு ஆலோசனையும் சேர இலைக்கஞ்சி தயாரானது.

பேருந்து தரிப்பிடத்திற்கு அருகில் பெரிய பானையில் தமிழ்நாதனின் புதிய வருவாய் தொடங்கியது. "மலிவான விலையில் சேதன சத்துணவு" என ஒரு பதாதை அவன் முன்னால் வியாபார உத்தியாக தொங்கிக் கொண்டிருந்தது.

ஆறு மணிக்கு ஆரம்பமான வியாபாரம் எட்டரை மணிக்கு நாற்பது பேருக்கு இலைக்கஞ்சி கொடுத்ததும் முடிந்தது. ஒன்றின் விலை இருபத்தைந்து உருபா என நாலாங்கட்டை சந்தியில் உள்ள அதே விலை தீர்மானித் தமையால், நிகர இலாபமாக உருபா ஐநூற்றறுபது கிடைத்தது. முதலீடு நானூற்றிமுப்பத்தைந்து உருபா முதலீட்டினை விஞ்சிய இலாபம் உற்சாகமூட்டியது.

உடற்பயிற்சியில் ஈடுபட்டவர்கள் வீடு செல்லும் போது, தமிழ்நாதனை பார்த்துவிட்டுப் போனார்கள்.

வெள்ளி, செவ்வாயில் காளி கோவிலுக்கு வருபவர்களும் அவனிடம் வரத் தொடங்கினார்கள். நாளாக நாளாக விலையை இருபது உருபாவாக குறைத்தான். வருபவர்களும் கூடினார்கள். உயர்தர மாணவர்கள் பாடசாலை போகும் போது வந்து போனார்கள். மாணவர்களின் வரவு அதிகரிக்க பள்ளிச் சீருடையில் வருபவர்களுக்கு பதினைந்து உருபாவாக விலை சரிந்தது.

வியாபாரத்தை தனி ஒருவனால் சமாளிக்க முடியாத நிலை ஏற்பட்டது. பூங்குன்றம் உதவியாளனா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னாள். நான்கு மாதத்தில் நகரசபையின் அநுமதியுடன் சிறிய கடை உருவானது.

அடுத்த ஆண்டில குடிசைவீடு கல்வீடானது. தொலைக்காட்சி வாங்குவதில்லை என்பது வீட்டின் கொள்கையானது. செய்திகள் பார்ப்பதற்கு நாளேடுகள் துணையாயின. பிள்ளைகள் மூவரானார்கள்.

"நஞ்சற்ற உணவகம் அன்புடன் வரவேற்கின்றது" என்ற வாசகத்துடன் "பூங்குன்றம் உணவகம்" எப்போதுமே பரபரப்பான வியாபாரத்துடன் வெளிநாட்டுக்காரர்கள் உட்பட பல ஆயிரக்கணக்கானோர் வாடிக்கையாளர்களாக மகிழ்ச்சியுடன் தமிழ்நாதனின் பிள்ளைகள் மூவரின் கடும் உழைப்புடன் உற்சாகமாக ஓடிக்கொண்டிருக்கிறது.

மாணவர்களுக்கு இன்றும் பதினைந்து உருபாக்கே இலைக்கஞ்சி விற்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

## உனக்குத்தான் போடுவம்

வாக்குகள் எண்ணப்பட்டுக் கொண்டிருந்தன. குற்றாளன் நம்பிக்கையுடன் இருந்தான். சென்ற இடமெல்லாம் மக்கள் "உங்களுக்குத் தான் போடுவம்" என்ற வார்த்தை அவனை மேலும் நம்பிக்கையடையச் செய்திருந்தது. மாலை ஆறு மணிக்குத் தொடங்கிய வாக்கெண்ணும் பணி சரியாக அதிகாலை நான்கு நாற்பந்தைந்தில் முடிவடைந்தது.

பதினொரு வேட்பாளர்களைக் கொண்ட வேட்பாளர் பட்டியலில் நான்கு பேர் குற்றாளனின் கட்சியிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஏழாவது இடத்தில் குற்றாளன் இருந்தான். முடிவுகள் குற்றாளனை வெகுவாகப் பாதிப்படையச் செய்தது. முதலாவது அதிகூடிய வாக்குகள் தனக்குக் கிடைக்கும் என நம்பியிருந்தான். எல்லாரும் "உனக்குத்தான் போடுவம்" என்று ஏமாற்றி விட்டார்கள் என்று மனம் வெம்பினான்.

பத்து நாட்கள் வரை வீட்டிற்குள்ளேயே அவனது வாழ்க்கை கழிந்தது. நன்றாக உறங்கினான். மக்கள், நண்பர்கள், கட்சி மீது கோபம் கோபமாக வந்தது. தனிமை ஆறுதலளித்தது. "இனி இந்த அரசியலே வேணாம்" என்று எண்ணும் அளவிற்கு வெறுப்படைந்திருந்தான்.

சந்தனக் கோதை, அவனது கட்சியின் அவனது தொகுதியின் அமைப்பாளர், குற்றாளனைப் பார்க்க அவனது வீடு சென்றார். தோல்வியடைந்த அனைவரது வீடுகளுக்கும் சென்று கடைசியாகவே குற்றாளனைச் சந்திக்கச் சென்றார். சந்தனக்கோதையின் வேண்டுகோளின் அடிப்படையிலேயே அவன் தேர்தலில் போட்டியிட்டவன். நன்றாகப் படித்தவன். நல்ல பண்புள்ளவன். அயலவர்களிடத்தில் மரியாதையுடன் பழகுபவன் போன்ற காரணிகள் குற்றாளனை வேட்பாளராக்க துணைபுரிந்தன.

ஆறுதலாக இருவரும் இரு மணிநேரத்திற்கும் அதிகமாகப் பேசினார்கள். சந்தனக்கோதை அவனது வீட்டிலிருந்து போகும் போது மனநிறைவுடன் சென்றார். குற்றாளனும் புதுத் தெம்புடன் காணப்பட்டான்.

"முதல் தடவையில், நீங்கள் பெற்ற வாக்குகள் அதிகம் என்றுதான் நான் சொல்வேன். உங்களிடம் நல்ல பல விடயங்கள் இருந்தாலும் மக்களுடனான தொடர்புகள குறைவாக இருந்திருக்கின்றன. உங்கட ஊர் இல்லாத ஓர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடத்திலுள்ள ஒரு சாவு வீட்டிற்குச் சென்று அங்கு வருபவர்களில் உங்களுக்கு எத்தனை பேரைத் தெரியும் என கணக்கிட்டுப் பாருங்கள். உங்களது மக்கள் தொடர்புகளை நீங்கள் உணர்ந்து கொள்வீர்கள்" என சந்தனக்கோதை கூறிய எடுத்துக்காட்டு அவனுக்கு பல சேதிகளை எடுத்துச் சொல்லியது.

"மக்கள் எல்லோரிடமும் தான் சொல்லுவார்கள் "உங்களுக்குத் தான் போடுவம்" என்று. அத நாம நம்பிடக் கூடாது. மக்கள்ற மனதில் இடம் பிடிக்க வேணும். மக்களுக்கு பணியாற்ற வேணும். தன்னலமற்ற உங்களது பண்பு, அதற்கு துணை செய்யும். கடினமாக உழையுங்கள். விரைவான முன்னேற்றம் காண்பீர்கள். இந்தத் தேர்தலை தோல்வியாக எண்ண வேண்டாம். உள்நுழைவுச் சீட்டாக எடுத்துக்கொள்ளுங்கள். இந்தத் தேர்தலின் பட்டறிவை பாடமாக வைத்துச் செயற்படுங்கள்" என்ற உற்சாக மூட்டல்கள் குற்றாளனைக் கவர்ந்தன.

"அரசியல் சிலருக்கு தொழிலாக இருக்கலாம். ஆனால், உங்களுக்கு அப்படியல்ல. நீங்கள் அரசியலில் இருந்து ஒரு சதமேனும் உங்கட வீட்டுக் எடுக்கக் கூடாது. நீங்கள் எடுக்க மாட்டீர்கள் என எனக்குத் தெரியும். எனினும் எனது மனக்கிடக்கையை உங்களுடன் பகிர்கின்றேன். மக்கள் அரசியல் உங்களிடம் எதிர்பார்க் கின்றேன்." என்ற எதிர்பார்ப்பு வினாவுடன் ஒரு பெருமூச்சு விட்டார்.

காத்திருந்தான். அவர் தொடரும்வரை குற்றாளன்.

"எதிர்வரும் மாகாணசபைத் தேர்தல் தொகுதி அடிப்படையில் நடைபெற இருக்கிறது. அதில் நீங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றி பெற வேண்டும். எமது கட்சிக்கு புது வடிவம் கொடுக்க வேண்டும். அது உங்களைப் போன்றவர்களால் தான் கொடுக்க முடியும். தேர்தலுக்கு அதிகளவில் செலவில்லாது வெற்றி பெற வேண்டும். சுவரொட்டிகள் ஒட்டக்கூடாது." என அவன் செய்ய வேண்டிய பல விடயங்களை எடுத்துக்கூறினார்.

குற்றாளனின் நம்பிக்கை தரும் பதில்களுடன் தொகுதித் தலைவர் சென்றார். பல மாதங்கள் சென்றன. கட்சியினை உயர் நிலைக்கு கொண்டு வருவதில் கடின உழைப்பை வழங்கினான். மக்களின் காலடிக்கு கட்சி குற்றாளனால் கொண்டு செல்லப்பட்டது. பல அரசியல் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆசிரியர்களுடன் குழுக் கலந்துரையாடல்கள் நடை பெற்றன.

நடைபெற்ற தேர்தலில் குற்றாளன் வென்றான். அதிகளவான மகிழ்ச்சி அவனிடத்தில் காணப்படவில்லை. அவன் மனதெல்லாம் மக்களின் தேவைகளை எவ்வாறு நிறைவேற்றுவது என்பதில் தான் இருந்தது. வாக்கு எண்ணும் இடத்திற்குக் கூடச் செல்லாமல், அவனது ஊரில் உடைந்து போன வடிச்சல் வாய்க்காலை விவசாயிகளுடன் சேர்ந்து கட்டிக் கொண்டிருந்த போதே தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டன. அங்கிருந்த விவசாயிகளுடன் பச்சையரிசிச் சோறும் பச்சடியுடனும் தேர்தல் வெற்றியைக் கொண்டாடினான். வெற்றிக் கொண்டாட்டங்கள் எதனையும் அவன் அநுமதிக்கவில்லை

அவனுக்கான பணியாளர்களை தேர்வு செய்து தருமாறு கட்சியிடம் கோரினான். இருவரை கட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்தது. மூன்றாவது ஆளை, அவனுடன் தேர்தல் வேலைகளில் ஈடுபட்ட தனது பள்ளித் தோழன் தாய் தந்தையரை இழந்து, தனது மூன்று தங்கைகளை தனது பிள்ளைகளாக வளர்த்துக் கொண்டிருக்கும் காளிராசாவிற்கு கொடுத்தான்.

தன்னுடன் மக்கள் தொடர்பு கொள்வதற்கு வசதியாக இரண்டு அலுவலகங்கள் அமைத்தான். தனக்கான கொடுப்பனவில் முக்கால்வாசியை வசதியற்ற பல்கலைக்கழக மாணவர்களின் கல்விக்காக வழங்கினான். நான்காம் வருடத்தில் அவனுக்காக வழங்கப்பட்ட வாகனம் பெறுவதற்கான அநுமதியை கட்சியிடம் வழங்கினான். தான் கூறிய ஆலோசனைகளையும் நடைமுறைப்படுத்திக் கொண்டு கட்சியையும் மீண்டும் நல்லநிலைக்கு கொண்டு வருவதற்கு துணைநின்ற குற்றாளனை பெருமையுடன் அடிக்கடி நினைவுபடுத்திக் கொண்டிருக்கிறார் சந்தனக்கோதை.

## சூரியனில் பரிபூரணன்

பொது மக்கள் நூறு பேராவது கூட்டத்திற்கு அழைத்து வர வேண்டும் என்ற முனைப்புடன் பரிபூரணன் முயன்று கொண்டிருந்தான். அவனது எதிர்பார்ப்பிற்கு மேலாக நூற்றிபதினேழு பேர் வந்திருந்தார்கள். கூட்டம் உரிய நேரத்தில் தொடங்கியது.

மின்சார சபையின் நிறைவேற்றுப் பொறியியலாளர், சூரிய சக்தி மூலம் மின் வழங்கும் உபகரணங்களை வழங்கும் நிறுவனத்தின் பொது முகாமையாளர், கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர், திட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தியோகத்தர் பரிபூரணண் என நால்வரும் முன்னால் இருந்தார்கள். கூட்டத்திற்கு பரிபூரணன் தலைமை தாங்கினான். திட்டத்தின் நோக்கங்களை விபரித்தான்.

மின்சாரசபை பொறியியலாளர் நக்கீரன் "உங்கள் வீடுகளில் மின்பாவனைக்கான கட்டணம் அதிகரித்துக் கொண்டு செல்கிறது. இவ்வூரில் ஒரு வீட்டிலிருந்து மின்சார சபைக்கு இரண்டாயிரத்திலிருந்து ஆறாயிரம் வரை வந்து கொண்டிருக்கிறது. சூரிய சக்தி மூலமாக மின்சாரத்தினைப் பெறுகின்ற முறை தற்போது உலகெங்கும் நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டு வருகின்றது. ஒரு வீட்டிற்கு இரண்டு கிலோவாற்ஸ் மின் உற்பத்தி செய்யக் கூடியளவான முதலீட்டை ஒவ்வொருவரும் செய்வீர்களாயின், நீங்கள் மாதமொன்றிற்கு சராசரியாக பதினோராயிரம் பெறலாம்.

உற்பத்தியாகும் மின் இரண்டு முறைகளில் மின்சார சபையினால் கொள்வனவு செய்யப்படும். ஒன்று உங்களது மின்பட்டியலில் இருந்து கழிப்பது. மற்றையது நேரடியாக பணத்தை மின்சார சபையிடமிருந்து பெறுவது. ஓர் அலகிற்கு இருபத்திமூன்று உருபா மின்சார சபை வழங்கும். பதினாறு ஆண்டுகளுக்கு, இது நடைமுறையிலிருக்கும். அதன் பின்னரே அலகு விலை மீள்நிர்ணயம் செய்யப்படும்." என விபரித்து அமர்ந்தார்.

கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர்," இவ்வாறான ஒரு திட்டம் எமது ஊரிற்கு பொருத்தமாக இருக்கும் என பரிபூரணன் முன்மொழிந்தபோது, அதனை எமது பணிப்பாளர்சபை முழுமனதுடன் அநுமதி வழங்கியிருக்கின்றது. பொறியியலாளர், நிறுவனம், கூட்டுறவு என எல்லோரையும் ஒரே இடத்திற்கு அழைத்தமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராட்டப்பட வேண்டியது. பெயருக்கு ஏற்றது போல் பரிபூரணமாகச் செய்துள்ளார். உங்களது சார்பில் எனது நன்றிகளை பரிபூரணன் தம்பிக்கு தெரிவித்துக் கொள்கின்றேன். இத்தத் திட்டத்திற்கான நிதியை நாம் குறைந்த வட்டியில் உங்களுக்கு வழங்க நடவடிக்கை எடுத்துள்ளோம். ஆனால், அனைவரும் எமது அங்கத் தவர்களாக இருக்க வேண்டும். அங்கத்துவம் இல்லாதவர்கள் இன்றே அங்கத்தவராகி விடுங்கள்" என நிறைவுசெய்தார்.

அலிஅக்பர் சூரிய சக்தி மூலமாக மின்சாரம் பெறும் நிறுவனத்தின் பொது முகாமையாளர், "ஒரு வீட்டிற்கு இரண்டு கிலோ வாற்ஸ் மின்னைப் பெற வேண்டுமாயின், அதற்காக உருபா ஐந்து இலட்சம் செலவாகும். அதுவே எமது விலை. ஆனால், கூட்டுறவுச்சங்கத்தின் தலைவரின் வேண்டுகோளுக் கிணங்க முதல் நானூறு வீடுகளிற்கு நாம் நாலு இலட்சம் உருபாக்கு அதனை வழங்க தீர்மானித்துள்ளோம்.

தேவைப்படும் நிதியை முழுமையாக கடனாக கூட்டுறவுச் சங்கம் பன்னிரண்டு சதவீத வட்டியில் வழங்க தீர்மானித்திருக்கின்றார்கள். மாதாந்தம் நீங்கள் எட்டாயிரம் அளவில் ஐந்து ஆண்டுகளில் கடனைச் செலுத்தி முடித்துவிடலாம். அத்துடன் மின்கட்டணத்தை செலுத்து வதற்கும் பணத்தைப் பெற்று விடலாம். ஐந்து ஆண்டுகளின் பின்னர், மின்கட்டணம் செலுத்தி மேலதிகமாக எட்டாயிரம் உருபா வருமானம் கிடைத்துக் கொண்டிருக்கும்." என நன்மைகளை எடுத்தியம்பினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறத்தாழ வந்த அனைவருமே திட்டத்தினை ஏற்றுக்கொள்வதற்கு ஒப்புதல் வழங்கினார்கள். ஒருசிலர் மாத்திரம் "கொஞ்ச நாள் பாத்திற்று செய்வம்" என்றார்கள்.

அடுத்த வாரத்தில் ஒப்பந்தங்கள் கைச்சாத்தாகின. பெருந்தொகைப் பணம் தேவைப்பட்டது. இலங்கைத் தேசிய சேமிப்பு வங்கியிடமிருந்து நான்கு சதவீத வட்டியில் கடன் பெறுவதற்கு உதவி கூட்டுறவு ஆணையாளர் உதவினார். சிக்கல் தீர்க்கப்பட்டன.

பரிபூரணின் தந்தை வண்பொருள் வாணிபம் செய்பவர். அவரிடமிருந்து வீடுகளுக்குத் தேவையான மின்பொருட்கள் கொள்வனவு செய்வதற்கு ஒப்பந்தம் கைச்சாத்தானது. மகனை எண்ணி தந்தை மனம் மகிழ்ந்தார்.

மின் உற்பத்திக்கான பணம் கூட்டுறவு கிராமிய வங்கிக்கே அனுப்பட வேண்டும் எனவும் மின்பட்டியல்கள் கூட்டுறவு கிராமிய வங்கிக்கூடாகவே செலுத்தப்படும் எனவும் உடன்பட்டமையினால், அதற்கான ஒப்பந்தம் மின்சார சபையுடன் கூட்டுறவுச் சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டது.

ஒவ்வொரு வீட்டிற்கும் மின்சாரசபையால் உற்பத்தியாக்கப்படும் மின்னை அளவிடுவதற்கு தனியான மின் அளவீட்டுமானி பொருத்தப்பட்டது. மூன்று மாத காலத்தில் இருநூறு பேருக்கு இணைப்புகள் வழங்கப்பட்டன.

தலைவரது பேரம் பேசலினால் கூட்டுறவுச் சங்கக் கூரையில் நான்கு கிலோவாற்ஸ் மின் உற்பத்தியாக்கக் கூடிய சாதனம் இலவசமாக பெறப்பட்டது. அதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலமாக மாதாந்தம் சங்கத்திற்கு அண்ணளவாக இருபத்தையாயிரம் வருமானமாகியது. அது பரிபூரணனின் வேலைக்கான கொடுப்பனவானது.

அத்துடன், முதலாவது பாரிய ஊரளவிலான திட்டம் என்பதால் ஊர் வீதிகளுக்கு தெரு விளக்குகளை இலவசமாக பிரதேச சபையின் அனுமதியுடன் நிறுவனத்தினர் பொருத்தினார்கள். பரிபூரணனை அவ்வூர் மக்கள் நன்றியுடன் பாராட்டினர்.

கடன் நூறு வீத அறவீடு நடைபெற்றது. இலங்கை தேசிய சேமிப்பு வங்கியின் நிறைவேற்று உத்தியோகத்தர் கூட்டுறவுச் சங்கத்தைப் பாராட்டி கடிதம் அனுப்பி யிருந்தார்.

"மீள்கொடுப்பனவை சிக்கல்கள் இன்றி பெறுவதற்காக இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படும் ஒரேயொரு வெற்றிகரமான திட்டம்." எனக் குறிப் பிட்டிருந்தது அனைவருக்கும் மகிழ்ச்சியளித்தது.

பரிபூரணனுக்கு நன்றியைத் தெரிவித்தார் தலைவரும் பணிப்பாளர்களும். இத்திட்டத்தின் மூலமாக ஐந்தாண்டுகளிற்குப் பின்னர், நடைபெற்ற வெற்றி விழாவில் கூட்டுறவு அமைச்சர் முன்னிலையில் பரிபூரணன் கிடைத்துக் கொண்டிருக்கும் நன்மைகளை பட்டியலிட்டு அனைவரது பாராட்டையும் பெற்றான்.

"இன்றிலிருந்து உங்கள் அனைவருக்கும் உழைக்காமலே உருபா எட்டாயிரம் நிரந்தர வருமானம். ஐந்து இலட்சம் பெறுமதியான சொத்துக்களுக்கு உரிமையாளர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உங்கள் தெருக்களில் பகல் போன்ற செலவில்லா வெளிச்சம்." கூட்டுறவுச்சங்கத்திற்கு இருபத்தைந்தாயிரம் நிரந்தர வருமானம். கூட்டுறவுக் கிராமிய வங்கிக்கு பாரியளவிலான வருமானம். இன்றுவரை, அண்ணளவாக ஆறு கோடி உருபாகள் இலாபமாக கிடைத்துள்ளது.

கூட்டுறவுச்சங்கத்தின் அங்கத்தவர் எண்ணிக்கை விரைவாக உயர்ந்திருக்கிறது. நாட்டின் மின்பாவனைக்கான கணிசமான ஒத்துழைப்பு இவ்வூரினால் வழங்கப் பட்டுள்ளது என நிறைவுசெய்தான்.

அனைவரது வானுயர்ந்த கைதட்டலுடன்.

## குமுகாய மதிப்பு

சுபா என்றழைக்கப்படும் சுடர்ப்பாவை மனதில் மகிழ்வுடன் காணப்பட்டாள். ஒன்பதாண்டுகளுக்கு முன்னர், இதே நாளில் கார்வேந்தனை முதன்முதலாக நான்கு நாட்களாக கொட்டிக் கொண்டிருந்த மழையினால், பெருக்கெடுத்த வெள்ளத்தினால் மக்கள் உணவிற்கு ஏங்கிக் கொண்டிருந்த நேரத்தில் உணவுப்பொதிகளுடன் பார்த்தாள்.

சுபாவின் பார்வையிலோ அல்லது வேறு எதனிலோ மயங்கியவன், இன்று மூன்று பிள்ளைகளுக்கு தந்தையானான். கார்வேந்தன் துணையினால் சுடர்ப்பாவை ஏழு ஆண்டுகளுக்கு முன்னர் தாய் எனும் மதிப்பினை குமுகாயத்தில் பெற்றாள். வேதனையிலும் வலியிலும் மகிழ்ந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தை ஒன்று இல்லையெனில், ஒரு பெண் படும்பாட்டை தன் தோழியின் வாழ்வில் பார்த்து வேதனையை அனுபவித்தவள் சுடர்ப்பாவை. தோழி நாககுழலி தான் சுடர்ப்பாவைக்கு "சுபா" என்ற செல்லப் பெயரை வைத்தவள்.

சுபாவிற்கு முதலாவது பிள்ளை பிறந்ததும் முதலாவதாக சுபா வீட்டிற்குச் சென்று பார்த்தவளும் அவள் தோழிதான். தோழியின் மகிழ்ச்சியில் , சுபா மகிழ்ந்தாலும் நாககுழலியின் முகத்தில் ஓடிய கவலை ரேகைகளை கவனிக்கத் தவறவில்லை.

அன்பான தோழிக்கு குழந்தைப் பாக்கியம் கிடைக்கவில்லையே என நாளும் கவலையடைவாள் சுடர்ப்பாவை. கார்வேந்தனிடம் இது விடயமாக அநேகமான நேரங்களில் சல்லாபிப்பாள். அவனும் துணைவியின் கவலையில் பங்கெடுப்பான்.

"கவலைப்படுவதைத் தவிர வேறு எதுவும் செய்யக்கூடிய விடயம் அல்ல இது" என மனதுள் எண்ணிக் கொள்வான்.

திருமணத்தின் முன்னர் இருந்த கலகலப்பான தன் தோழி நாககுழலியை தான் பார்க்க வேண்டும் என்பது சுடர்ப்பாவையின் அவாவாக இருந்தது.

இந்தியா சென்று மருத்துவம் செய்வதற்கு பொருண்மியம் இடம் தரவில்லை. அம்மாவின் ஆலோசனையான சாமியார்களிடம் செல்ல தோழியின் துணைவர் இடம் தரவில்லை. அவளும்தான் விரும்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லை. ஏமாற்றுக்காரர்களிடம் சென்று ஏன் ஏமாற வேண்டும் என்பது இருவரினதும் ஒத்த கருத்து.

கொழும்பில் உள்ள ஒரு தனியார் மருத்துவ மனையில் சகல வசதிகளும் உள்ளதாக நாளேடு செய்தி சொல்லியது. சுடர்ப்பாவை தோழிக்கு தன்னாலான ஒத்துழைப்பினை வழங்கத் தீர்மானித்தாள்.

துணைவரின் தடையின்றிய ஒப்புதலினால், தன்னிடமிருந்த நகைகளில் பதினேழு பவுன் நகைகளை விற்ற பணம் முழுவதையும் நாககுழலியிடம் கொடுத்து விபரத்தையும் சொன்னாள். தோழியின் எண்ணமும் அதுவாகவே இருந்ததனால் ஏற்றுக்கொண்டாள்.

ஒரே நாளில் தோழிகள் இருவரும் திருமணம் செய்தவர்கள். ஒன்பதாண்டுகளின் பின்னர், இதே நாளில் இரட்டிப்பு மகிழ்வுடன் தன் துணைவர் கார்வேந்தனுடன் நாககுழலியின் இரட்டைக்குழந்தைகளைப் பார்ப்பதற்காக கொழும்பு நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறாள்.

அடுத்த ஆண்டு இருவரின் திருமண நாள் கொண்டாட்டத்தினையும் புதுவரவான இருவரினது பிறந்தநாள் கொண்டாட்டத்தினையும் சண்முகா ஆண்கள் இல்லத்தில் செய்வதென, மனத்திரையில் படத்தினை ஓடவிட்டவளாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாவும் நன்மைக்கே

ஞானமுகில் விடியற்காலை ஐந்து மணிக்கே எழுந்து நித்திரைக் கண்களுடன் பிரத்தியேக வகுப்பிற்கு செல்வதைக் கவலையுடன் பெருமூச்செறிந்தார் ஓர்மவாணன்.

மகிழ்ச்சியாக நித்திரை செய்ய வேண்டிய வயதில் மகன் ஞானமுகிலை "படி படி" என தாய் மலர்விழியாள் தொல்லைப்படுத்துவதும் விளையாட வேண்டிய நேரத்தில் பிரத்தியேக வகுப்புகளுக்குக் கொண்டு சென்று விடுவதும் ஓர்மவாணனுக்கு நாளாந்தம் எரிச்சலூட்டும் விடயங் களாகின.

தாத்தா தனது மனநிலையைச் சரியாகப் புரிந்து வைத்திருக்கும் நபர் என்பதனை அறிந்ததனால், ஞானமுகில் அவருடன் தனது மனக்கிடக்கைகளை பகிர்ந்து கவலையடைவான். பிஞ்சுள்ளம் படும் வேதனையை ஓர்மவாணன் அறிந்திருந்தாலும் என்ன செய்வதென தெரியாமல் பேரனுடன் சேர்ந்து தனக்குள் மாத்திரம் கவலைப்பட்டுக் கொள்வார். ஆனால் அவற்றை பேரனிடம் காட்டிக் கொள்வதில்லை. தனது மனச்சாட்சிக்கு எதிராக பேசுவார்.

"அம்மா பிள்ளையின் நலனுக்காகத்தான் எல்லாம் செய்வா அதனால அவ சொல்றபடி செய்து தேர்வில் கூடிய புள்ளிகள் பெற்று கெட்டிக்காரனாக வரவேணும்." என்று சொல்லும் போது தாத்தா பொய் சொல்லுகிறார் என புரிந்துகொண்டாலும் பேரனும் அதனை வெளிக் காட்டிக்கொள்வதில்லை.

ஒரு நாள் அம்மா காலையில் குளித்துவிட்டு, மகனை வகுப்பிற்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசரத்தில் வரும்போது வழுக்கி விழுந்ததனால் நடக்க முடியாத நிலை ஏற்பட்டு படுத்த படுக்கையாக கட்டிலில் கிடந்தாள்.

சமையல் வேலைகள் தாத்தாவின் தலையில் வந்து சேர்ந்தன. ஞானமுகிலை வகுப்புகளுக்கு கூட்டிச் செல்வதற்கு ஆட்கள் இருக்கவில்லை. யாரும் கூறாமலே பிரத்தியேக வகுப்புகள் இல்லாது போயின. அம்மாவின் இயலாமை கவலையளித்தது. ஆனால், வகுப்புகள் இல்லை என்ற மனநிறைவு ஏற்பட்டது சிறுவனுக்கு.

பள்ளிப் படிப்புடன் மாலையில் விளையாடுவதற்கு ஊக்கப்படுத்தினார் தாத்தா. இரவு நேரங்களில் முன்னரை விட அதிக நேரம் படித்தான். விளங்காத பாடங்களை மறுநாள் பள்ளியில் ஆசிரியர்களிடம் கேட்டுத் விளங்கிக் கொள்ளப் பழகியிருந்தான். நூலகத்திற்கு வார இறுதி நாட்களில் பேரனைக் கூட்டிச்சென்றார்

ஓர் ஆண்டில் அனைத்து வேலைகளும் தானாகவே செய்வதற்குப் பழகியிருந்தான். ஞானமுகில். சாப்பாடு தீத்திவிடுதல் (ஊட்டுதல்), உடைகள் தோய்த்தல் என அனைத்து வேலைகளும் 'பிள்ளை பாவம்' என அம்மா தான் முன்னர் செய்தாள்.

ஆனால், அம்மாவிற்கு அப்போது புரிந்திருக்க வில்லை தனது மகனை தானே பாழாக்கிக் கொண்டிருந் தது. தன்னம்பிக்கை வளர வேண்டிய வயதில், அதனை தானே இல்லாமல் செய்து கொண்டிருந்தமையை தாய் உணர்ந்திருக்கவில்லை.

இதனை ஓர்மவாணன் பல தடவைகள் மருமகளுக்கு தெளிவுபடுத்தியிருந்தார். துணைவர் சாவடைந்ததால் மகனை எப்படியாவது படிப்பித்து நல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைக்குக் கொண்டுவர வேண்டும் என்பதே தாயின் குறியாக இருந்தது. யாருடைய ஆலோசனைகளும் செவிகளுக்கு ஏறவில்லை.

ஆனால் தற்போது படுத்த படுக்கையில் மகனின் தேர்ச்சி அறிக்கை வரும்போது புள்ளிகளைப் பார்ப்பதற்கு முன்னர், மாணவர் நிலையினை முதலில் பார்த்து மூன்றாம்பிள்ளையாக வந்திற்றிற்றியே என மகனை அழைத்து முத்தமிட்டு மகிழ்வாள்.

ஆண்டுகள் உருண்டோடின. மெதுமெதுவாக ஞானமுகில் அனைத்துத் துறைகளிலும் முன்னேறிக் கொண்டிருந்தான். விளையாட்டில் உதைபந்தாட்டத்தில் மாவட்டமட்டத்தில் சிறந்து விளங்கினான். சதுரங்கத்தில் மாவட்ட முதல்நிலை வெற்றியாளனாக தொடர்கின்றான்.

மட்டைப்பந்திலும் ஆர்வம் காட்டினான். வாரஇறுதி நாட்களில், நூலகத்திற்குச் சென்று வரும்போது, நீச்சலிலும் ஈடுபட்டான். பள்ளியில் படிக்கும் எந்தப் பாடங்களுக்கும் மேலதிக வகுப்புகளுக்குச் செல்ல வில்லை. ஆங்கிலம் , சிங்களம் மாத்திரம் பேசுவதற்காக வகுப்புகளிற்குச் சென்றான் தாத்தாவின் வழிகாட்டல் ஞானமுகிலுக்குப் பிடித்திருந்தது.

அம்மாவை சுகமாக்க வேண்டும் என்ற ஏக்கம் மகனுக்கு இருந்தது. பொருளாதாரம் அவர்களுக்கு இடம் தரவில்லை. ஒளிமயமான எதிர்காலத்தை நோக்கி, தனது வாழ்வை நகர்த்திக்கொண்டிருக்கும் ஞானமுகிலினால் அம்மாவை சுகமாக்க முடியாதா என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவீரர் குடும்பங்கள்

பொழுது புலர்வதற்கு முன்னர் போய்ச் சேர வேண்டும் என்ற அவதியில் கட்டி வைத்திருந்த இரண்டு உரப்பையில் ஒன்றைத் தூக்கிக்கொண்டு பேருந்து தரிப்பிடத்தில் வைத்துவிட்டு, மற்றையதை எடுப்பதற்காக வந்து கொண்டிருந்தாள் அன்னப்பாக்கியம்.

முதல்நாள் மழை பெய்திருந்ததால், வீதியில் கிடந்த கொடுக்கான் அவள் காலை கடித்துவிட்டது. வேதனையாக இருந்தது அறுபத்தைந்து வயது அன்னப்பாக்கியத்திற்கு. பேருந்து வந்துவிடப் போகிறது என்ற அவதியில் வேதனையும் பாராமல் வீட்டிற்குச் சென்று மற்றைய உரப்பையையும் எடுத்துக்கொண்டு வந்து சேர பேரூந்தும் வந்தது. ஒருவாறு இரண்டு பொதிகளையும் ஏற்றிக் கொண்டு வழமையாக இறங்கும் இடத்தில் இறங்கி கொண்டுவந்த பைகளிலிருந்த மரக்கறிகளை பரவினாள் வயதானவள்.

ஆறு மணிக்குத் தொடங்கிய மரக்கறி வியாபாரம் பன்னிரண்டு முப்பது வரை நீடித்தது. அனேகமாக அனைத்து மரக்கறிகளும் விற்று முடிந்திருந்தது. அவளுக்கென்று தனியாக வாடிக்கையாளர்கள் இருந்தார்கள். அன்று "யூன் இருபத்தியொன்று உலக யோகா நாள்" என்பதால், அவளது வாடிக்கையாளர்கள் விழிப்புணர்வு வீதி நடைக்குப் போயிருந்தார்கள். அதனால் சற்று தாமதமாக வந்தார்கள். மற்றைய நாட்களில் பத்து மணியுடன் அவளது வியாபாரம் நிறைவடைந்துவிடும்.

வயதான நேரத்திலும் தனது பேரனைப் படிப்பித்து நல்ல நிலைக்குக் கொண்டுவர வேண்டும் என்ற ஒரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்குடன் தனது வயது, உடல்நிலை எதனையும் பாராது துன்பங்கள், வேதனைகள் அனைத்தையும் தனக்குள்ளே அடக்கிக்கொண்டு வெளியில் காட்டிக்கொள்ளாது அயராது மாடாக சுழன்றுகொண்டிருக்கிறாள் அன்னப்பாக்கியம்.

பேரன் இளங்கிள்ளி பெற்றார் இல்லாது கடந்த ஒன்பது ஆண்டுகளாக பாட்டியுடன் பத்தாம் வகுப்புவரை வந்துவிட்டான். பாட்டியின் சிக்கல்களை நன்கே அறிந்து உணர்ந்தவனாக வளர்ந்து வந்தான். படிப்பிலும் கவனத்தைச் செலுத்துவதுடன் பின்னேரங்களில் பாட்டிக்கு உதவியாக மரக்கறிகளை வாங்கி வருவதுடன், காலையில் பேருந்து தரிப்பிடத்திற்கும் அவற்றைக் கொண்டு சேர்ப்பதற்கும் தற்போது அவனால் உதவக்கூடியதாக இருந்தது.

குறைந்த வருவாயிலும் நிறைவான ஆனால், மலிவான உணவுகளை இளங்கிள்ளிக்கு வழங்கி மகிழ்வடைந்தாள் பாட்டி அன்னப்பாக்கியம். பேரன் படிப்பில் நல்ல நிலையில் இருக்கிறான் என்பதை ஊரார் சொல்லக் கேட்டு மகிழ்வடைவாள்.

தனது மகள் தவமாலையும் மருமகன் ஆற்றலரசும் போராட்டத்தில் ஈடுபட்டு இருமாத இடைவெளியில் வீரச்சாவைத் தழுவி, இளங்கிள்ளியை அன்னப்பாக்கியத்திடம் விட்டுச் சென்றார்கள்.

"மாவீரர் குடும்பங்களிற்கு இருந்த மதிப்பு, மரியாதை எல்லாம் இப்போது இல்லை. மாவீரகள் யாரென பலருக்குத் தெரியாமலே போய்விட்டது. ஆருக்கெண்டு போய் என்ர பிள்ளைகள் செத்ததுகள்? அதுகளுக்கென்ன கொழுப்பா? இந்த வயசிலயும் நான் இந்தப் பாடுபட வேண்டி ஏற்பட்டுவிட்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர், யாரோ புண்ணியவான் வந்து விசாரித்து கணக்கிலக்கம் கேட்டு வாங்கிகொண்டு போனார். அந்தப் புள்ளதான் வங்கிக்குக் கூட்டிப்போய் ஒரு சேமிப்புக் கணக்காம் எண்டு திறந்து தந்தவர்.

அடுத்த மாத்தில் ஓர் இலட்சம் கணக்கிற்கு போட்டிருந்தார்கள். அந்தப்பணம் இளங்கிள்ளிக்கு பின்னர், தேவைப்படும் எண்டு அப்படியே வச்சிருக்கிறன்" என்று கண்கள் ஈரமாக மரக்கறி வாங்கப் போன இடத்தில் தனது மனதைப் பரிமாறிக்கொண்டாள் பாட்டி.

"அந்த எண்ணம் இருந்தா எப்பயோ நமக்கு நாடு கிடைச்சிருக்குமே. ஆனா ஒருசிலர் உங்களுக்கு உதவிசெய்த மாதிரி ஆக்களும் இருக்கிறாங்க. உங்கட பேரன் வளர்ந்து இப்பிடியான குடும்பங்களுக்கு உதவி செய்வான் அக்கா" என்ற பதிலைக் கேட்டு மகிழ்ந்தவளாக.

"ஓம், பிள்ள அவனிட்ட நடந்தது ஒண்டும் விடாம சொல்லித் தான் வாறன். அவனும் அப்பிடித்தான் சொல்லுவான். நம்மட மக்களுக்காக பாடுபட்டவங்க எல்லாருக்கும் உதவ வேணும். அம்மம்மா என்பான். எனக்கும் மகிழ்ச்சியாருக்கும்." பாட்டியின் மனதில் கண்களில் ஒரு நம்பிக்கை ஒளி தெரிந்தது.

அந்த நம்பிக்கையுடன் தனது காலத்தை ஓட்டிக் கொண்டிருக்கிறாள் அன்னப்பாக்கியம் எனும் தளர் வடையாத பாட்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதிச்செல்வனும் மாங்காய்ப் பானமும்

செந்தூரன் தன் நண்பன் மதிச்செல்வனுடன் கொழும்பிலுள்ள ஹில்டன் உல்லாசவிடுதியில் அன்றிரவைக் கழிப்பதற்காகச் சென்றிருந்தான். மதிச்செல்வன் ஐந்து நாட்களுக்கு முன்னர் கனடாவிலிருந்து, தன் தாய் நாட்டிற்கு பதினைந்து ஆண்டுகளுக்குப் பின்னர் வந்திருந்தான்.

தனது உயிர் நண்பனை அழைத்துக்கொண்டு அன்று காலை கொழும்பு நோக்கி விரைந்தான்.மாலை ஏழு மணியிருக்கும் இருவரும் சாப்பாட்டிற்காகச் சென்றார்கள். சாப்பிடமுன் குடிப்பதற்கென்று, ஏதோ ஒரு பெயரில் பானம் ஒன்றைக் கொண்டுவரும்படி மதிச்செல்வன் கூற, செந்தூரன் பார்த்துக் கொண்டிருந்தான். இளம்பச்சை நிறத்தில் இருவருக்கும் குளிரான பானம் தரப்பட்டது. குடிக்கும் போது மிகவும் சுவையாக இருந்தது.

இரவு பத்து மணியளவில் இருவரும் தள்ளாடிய நிலையில் தமது அறையினைச் சென்றடைந்து உடனேயே உறங்கி விட்டார்கள்.

"நேற்றுக் குடிச்சது என்ன சாமான் மச்சான்" செந்தூரனின் கேள்வி.

"அது நான் வரக்கொள்ள கனடாவில இருந்து கொண்டு வந்தனான் மச்சான்" மதிச்செல்வன்.

"அது இல்ல ,இளம் பச்ச நிறத்தில ஒண்டு கொண்டு வந்து தந்தானே அது என்ன சாமான் எண்டு கேட்டன்" செந்தூரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" ஆ அதுவா அது மச்சான் சொன்னா சிரிப்பா, நல்லா இருந்துதா இல்லையா?" மதிச்செல்வனின் கேள்வி.

"அந்தமாரி இருந்துது. அதான் கேட்கிறன்" செந்தூரனின் பதில்.

"அது புளி மாங்காயில செய்த குளிர்பானம்" மதிச்செல்வன் கூற செந்தூரன் வியந்தே போனான் "என்ன மச்சான் இப்பிடி சுவையா இருக்குது? என்ன விலை மச்சான்?" செந்தூரன் ஆச்சரியத்துடன் கேட்டான்.

"அதென்ன மச்சான் ஒண்டு இருநூற்றி ஐம்பது தான். உடம்புக்கு நல்லது. நான் எங்க போனாலும் இது குடிப்பன்" மதிச்செல்வனின் பதில் வியப்பையூட்டியது செந்தூரனுக்கு.

புளி மாங்காய நாங்க கண்டு கொள்றதே இல்ல. வௌவால் திண்டு போட்டுப் போகும். இதென்னடா எண்டா இருநூற்றி ஐம்பது உருபாவாம் என மனதுள் எண்ணிக்கொண்டான்.

நண்பனை கொழும்பிலேயே விட்டு விட்டு, செந்தூரன் வீடு திரும்பும்போது தன் நண்பனுக்காக ஒரு கட்டுப் பணத்தைக் கொடுத்தான் மதிச்செல்வன்.

செந்தூரன் மறுத்தாலும், நண்பனின் அன்பிற்கு கட்டுப்பட்டு மதிச்செல்வன் கொடுத்த ஐம்பதினாயிரத்தை தன்னுடன் எடுத்துக்கொண்டு வீடு நோக்கிப் புறப்பட்டான்.

அடுத்த கிழமை தம்பலகமம் சந்திக்கு அண்மையில் இருக்கும் ஆடைத் தொழிற்சாலைக்குச் சென்று தொழிற்சாலை முகாமையாளருடன் பேசினான். தான் கொண்டு வந்த மாதிரியை கொடுத்தான். சுவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றாக இருப்பதாக முகாமையாளர் சொன்னார். முதல் நாள் அரைவிலையில் தருவதாக செந்தூரன் சொன்னான். முகாமையாளர் உடன்பட்டார்.

மறுநாள், ஆடைத்தொழிற்சாலைச் சிற்றுண்டிச் சாலையிலேயே மாங்காய்ப்பானம் செய்து தொழிலாளர்களுக்கு வழங்குவதற்கு ஏற்பாடானது. ஒரு மாங்காயில் இரு பானங்கள் செய்யலாம் என்றும் எவ்வாறு செய்வது என்பதையும் கொழும்பில் உல்லாச விடுதியில் உள்ள சமையலாளரைக் கண்டு அறிந்து வந்திருந்தான் செந்தூரன்.

"மாங்காயை சிறு துண்டுகளாக வெட்டி மிக்சியில் அடிக்க வேண்டும் பின்னர் அளவான நீரூற்றி கொஞ்சம் உப்பும் தேவையானளவு சீனியும் போட்டு கொஞ்ச ஐஸ் கட்டிகளும் போட்டு மீண்டும் மிக்சியில் அடித்து வடித்தெடுக்க வேண்டும்" இது தான் செய்முறை.

ஆடைத்தொழிற்சாலையில், முதல்நாள் வியாபாரம் தொடங்கியது. அறுநூற்றி பதின்னான்கு பேருக்கு மாங்காய்ப்பானம் வழங்கப்பட்டது. முப்பது உருபா ஒரு பானம். பதினைந்து உருபாய்க்கு வழங்கினான். ஒன்பதினாயிரத்து இருநூற்றி பத்து உருபாய்கள் கிடைத்தது.

வழக்கமாக, தென் பகுதியில் இருந்து வருபவர்கள் மாமரத்தை முழுமையாக விலைபேசி மூவாயிரம் தொடக்கம் ஆறாயிரம் வரை விலையாக வழங்குவார்கள். மரத்தில் இரண்டாயிரத்திலிருந்து மூவாயிரம் காய்கள் வரை இருக்கும். அவ்வாறான ஒரு மரத்தை செந்தூரன் இருபதினாயிரத்திற்கு வாங்கியிருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னேரமும் வழங்கும்படி முகாமையாளர் கோரினார். பதினெட்டாயிரத்தி நானூற்றி இருபது உருபாய்க்கு வியாபாரம் நடந்தது.

மறுநாள் காலையும் மாலையும் வழங்கினான். மொத்த வருமானமாக அறுபத்திநாலாயிரத்தி நாநூற்றி எழுபது உருபாய்க்கு விற்பனை நடந்திருந்தது. இரு நாட்களும் நிகர இலாபமாக நாற்பத்தியோராயிரத்தி நூற்றி எழுபது உருபாய்கள் கிடைத்தது.

ஒரு நாளைக்கு இருபதினாயிரம் சராசரி நிகர இலாபம் கிடைப்பதை உறுதிப்படுத்திக்கொண்டான். தொடர்ந்தும் வழங்குமாறு முகாமையாளர் கேட்டிருந்தார். ஊரில் உள்ள மாங்காய்கள் அனைத்தும், செந்தூரனால் வாங்கப்பட்டதுடன் ஊரில் உள்ளவர்களும் மாங்காயி லிருந்து உற்பத்தியாகும் பானத்தையே தற்போது தமது வீடுகளுக்கு வருபவர்களுக்கும் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

## தவறாத குறி

நீண்ட நேரமாகிறது பல்லவன் சென்று, இவ்விடத்தை விட்டு உடனடியாக போகவேண்டும் என நினைத்தவனாக அருகில் இருந்த சினைப்பர் துப்பக்கியை கையிலெடுத்தான் கதிரொளி. சினைப்பர் கையாள்வதில் கில்லாடி எனவும் வைத்த குறி என்றுமே தப்பியதில்லை எனவும் பெயர் எடுத்தவன்.

தனது உதவியாளன் பல்லவனை இராணுவ நடமாட்டத்தைப் பார்த்து வருமாறு அனுப்பியிருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி இங்கிருப்பது ஆபத்து என நினைத்தவன் வேறிடம் செல்ல தயாரானான்.

மெதுவாக, பார்வையை தூரத்தே செலுத்தியவனாக மெதுவாக நிதானத்துடன் நடந்து, சென்று ஆழமற்ற இடங்களால் ஆற்றைக் கடந்தான். பதினைந்து மணித்துளிகள் சென்றிருக்கும். ஒரு மரத்தின் மேல் ஏறிப்பார்த்தான். தான் நினைத்தது போலவே பல்லவன் இராணுவத்திடம் பிடிபட்டுவிட்டான்.

அவன் முன்பு இருந்த இடத்தில் துப்பாக்கி வேட்டுச்சத்தங்கள் காதைப் பிளந்தன. பல்லவன்தான் என்ன செய்வான்.அவனைத் துன்புறுத்தியிருப்பார்கள். அவன் இடத்தைக் காட்டியிருப்பான் என தன்பாட்டில் சாத்தியப் பாடுகளை மனத்திரையிட்டான்.

மரத்திலிருந்து தன் சினைப்பரின் தொலை காட்டியினூடே பார்த்தவனுக்கு அதிர்ச்சி. ஆற்றினை கடப்பதற்காக இரண்டு இராணுவத்தினர் வந்து கொண்டிருந்தினர். அவர்கள் முன்னால் பல்லவன் வந்து கொண்டிருந்தான்.

வந்தவரில் ஒருவன் உயரதிகாரி யாக இருக்க வேண்டும் என நினைத்தவனின் வலதுகை ஆட்காட்டி விரல் அழுத்தமாக பின்னோக்கி அசைய உயரதிகாரி என தான் எண்ணியவனின் தலையை பதம் பார்த்தது கதிரொளியின் சினைப்பர் ரவை. கண் மூடி விழிப்பதற்குள் அடுத்தவனும் சாய்ந்தான். பல்லவனுக்கு என்ன நடந்திருக்கும் என்று அறிந்துகொள்ள நேரமாகவில்லை. நொடிப்பொழுதில் இருவரும் கொண்டு வந்த துப்பாக்கிகளையும் அவர்கள் உடம்பில் கட்டியிருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரவைகள் அடங்கிய அனைத்தையும் எடுத்துக்கொண்டு ஓடினான் பல்லவன்.

ஆற்றின் மறுபுறம் சென்றடைந்தது தான் தாமதம். இராணுவத்தின் துப்பாக்கிகள் குண்டுமழை பொழிந்தன. தன்னை வரவேற்பதற்காக காத்திருந்த தன் நண்பனுடன் சிறிது தூரத்திற்கு தவழ்ந்து சென்று பின்னர், மகிழ்ச்சியுடன் நடந்து சென்றனர்.

தான் எதிர்பாராதவிதமாக பிடிபட்டது, சித்திர வதைக்குள்ளானது, இராணுவத்தைக் கண்டு ஓடிய முருகனை சுட்டுக்கொன்றது என தன் நண்பனிடம் கவலையுடன் கூறிக்கொண்டிருந்தான் பல்லவன்.

## தங்கிலீசும் தமிழும்

தனது மகன் ஆராவமுதன் சதுரங்கப் போட்டியில் பாடசாலை மட்டத்தில் வெற்றியீட்டியதனால், கல்லூரி பரிசளிப்பு விழாவில் பரிசு வாங்குவதைப் பார்ப்பதற்காக தயாராகிக் கொண்டிருந்தான் நாவினியன்.

"நேரத்திற்கு போக வேண்டும் அப்பா. இல்லாவிட்டால், பின்வரிசையில் தான் இருக்க வேண்டும்." என்ற மகனின் அதட்டல் அப்பாவை விரைவுபடுத்தியதனால், கல்லூரி விழாவில் ஓரளவு முன்னுக்கு இருப்பதற்கு வழிசமைத்தது. மகனின் எதிர்கால நலனின் திட்டமிடல் சரியாக இருக்கிறது என தந்தை எண்ணி மகிழ்ந்தார். விழா முடிவடைந்து பெற்ற பரிசுடன் ஆனந்த உச்சத்தில் ஆராவமுதன். அப்பாவுடன் வீடு வந்து சேர்ந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்பா என்னடா கடுப்பில் இருக்கிறார். நல்ல பரிசு தானேடா தந்திருக்கிறாங்க. பரிசின் அளவைப் பார்த்து கவலைப்படும் ஆள் இல்லையே அவர் என்ன மகன் நடந்தது?என்ன அம்மா வினவ " எல்லாம் தமிழ்ச் சிக்கல் அம்மா அங்க உரையாற்றினவர்கள் எல்லாம் ஆங்கிலத்தை கலந்து கலந்து பேசினாங்க. எனக்கே வெறுப்பாவும் எரிச்சலாவும் இருந்திச்சு. அப்பாவுக்கு எப்படி இருக்கும்?" என்ற வினாவுடன் அப்பாவின் கோபத்திற்கான காரணத்தை தெளிவுபடுத்தினான் மகன் அம்மாவிற்கு.

நாவினியன் தமிழ் மீது அளவுகடந்த பற்றுக் கொண்டவன். தமிழ் பேசுபவர்கள் தமிழைப் பேசாது விட்டால் வேறு யார் பேசுவார்கள் என்பது அவனது நியாயபூர்வமான வாதம்.

மறுநாள், கல்லூரிக்குச் சென்ற நாவினியன் முதல்வரைச் சந்தித்து பேசினான். தமிழின் பண்புகளை பக்குவமாக எடுத்துச் சொன்னார் "நாம் ஏதோ வெள்ளக்காரனுவளுக்குப் பிறந்த மாதிரி ஆங்கிலத்தக் கலந்து பேசிக்கொண்டிருக்கிறம்" என்று முதல்வருக்கு கொஞ்சம் உறைக்க வேண்டும் என்பதற்காக அழுத்தம் கொடுத்தான்.

"தொலைக்காட்சிகளும், ஆசிரியர்களும் தமிழை நேசிக்க வேண்டும். குறிப்பாக ஆசிரியர்களே எதிர்கால தலைவர்களின் வழிகாட்டிகளும் முன்மாதிரிகளும். அவர்கள் தான் தமிழை பிள்ளைகளுக்கு ஊட்ட வேண்டும். காலத்தால் முந்திய மொழியை பேசும் மக்கள் நாம். அந்தப் பெருமையை ஏன் நாம் இழக்க வேண்டும்? பள்ளி முதல்வர்கள் இதில் கூடுதல் அக்கறை செலுத்த வேண்டும். நமது அரசியல் தலைவர்களுக்கும் எடுத்துச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லும் தலையாய பணி உங்கள் முன் உள்ளது. அதனை விரைவாக நீங்கள் செய்ய வேண்டும்." என்ற கோரிக்கையுடன் தமிழ் பற்றிய தனது எண்ணக் கிடைக்கைகளை சுருக்கமாக எடுத்துரைத்தான்.

முதல்வர் தான் தவறிழைத்திருப்பதை உணர்ந் திருக்க வேண்டும். நாவினியனிடம் "நேற்றைய நிகழ் வினையிட்டு பொறுத்தருள்க" என்று அதனால் தான் கூறியிருக்க வேண்டும். இது விடயமாக நீண்ட கலந்துரையாடல் இருவருக்குமிடையில் நடைபெற்றது.

"உங்களுடைய கருத்துக்கள் பெறுமதியானவை. தமிழை வளர்ப்பதற்கான செயற்றிட்டங்களை தொடங்குவதற்கான நடவடிக்கைகளை நாம் ஆரம்பிக்கின்றோம். உங்களைப் போன்ற தமிழ்ப் பற்றாளர்களின் ஒத்துழைப்பும் கிடைக்கும். அதன் மூலமாக தமிழ் உலகில் நீண்ட நாட்களுக்கு வாழ வைப்போம்." என பதிலுரைத்தார் முதல்வர்.

அடுத்த வாரத்திலேயே முதல்வர் தான் கூறிய கருத்துக்களுக்கு செயல்வடிவம் கொடுக்கத் தொடங்கினார். ஆசிரியர்கள், மாணவர்களிடத்தில் நல்ல ஒத்துழைப்புக் கிடைத்தது. இந்நடவடிக்கை ஏனைய பள்ளிகளுக்கும் பரவியது.

"தொலைக்காட்சிகள் தமது தவறைத் திருத்திக் கொள்ள வேண்டும்" என மாணவர்கள் பட்டிமன்றங்கள் மூலமாகவும் விவாத மேடைகள் மூலமாகவும் எடுத்தியம்பியது பலனளித்தது. ஓராண்டில் பல்வேறு மாற்றங்கள் நாவினியனின் முயற்சியின் மூலமாக ஏற்பட்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த ஆண்டு பரிசளிப்பு விழாவிற்கு தமிழில் மாத்திரமே உரையாற்ற வேண்டும் என்ற கண்டிப்பான கோரிக்கையுடன் விருந்தினர்கள் அழைக்கப்பட்டமை எடுத்துக்காட்டாகியது.

முழுமையான தமிழ் விழாவாக கல்லூரி பரிசளிப்புவிழா நடைபெற்றதை எண்ணி கர்வம் கலந்த மகிழ்ச்சியுடன் நாவினியன் வீடு நோக்கி மகனுடன் சென்றுகொண்டிருந்தான்.

## மறுபக்கம்

சுருதி நரைத்த தலையுடன், சுருக்கமான முகத்துடன் கவலையே வடிவமாக மெதுவான குரலில் பேசிக்கொண்டிருந்தது பல செய்திகளை சொன்னதாக புரிந்து கொண்டான் மலரவன்.

பேச்சில் நிதானமும் தெளிவும் இருந்தாலும் வாழ்வில் விரக்தியும் மனதால் பட்ட வேதனைகளும் மலரவனின் மனதால் புரிந்துகொள்ளக் கூடியதாக இருந்தது.

முப்பதியொரு ஆண்டுகளாகி விட்டது, சுருதியின் துணைவருக்கு சாகும்வரை தூக்கிலிட வேண்டும் என்ற தீர்ப்பாயத்தின் நீதி வழங்கப்பட்டு, அந்தக் கணத்தில் நீதிமன்றில் தன்னையறியாமலே வாய்விட்டு வீரிட்டு அலறினாள் சுருதி.

"தன் துணைவர் அப்படியானவர் இல்லை".அவளது மனம் அப்படித் தான் அந்த வேளையில் சொல்லியது. அதனால் அவ்வாறு அழுதாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தன் மீதும் தன் பிள்ளைகள் மீதும் எவ்வளவு அன்பாகவும் பிரியமாகவும் இருந்தவர். இப்படி ஓர் இழி செயலைச் செய்வாரா? கூட்டாக ஒரு சிறுமியை வன்புணர்வுக்கு உட்படுவதையே நினைத்துக் கூடப் பார்க்க மாட்டார். அப்படியானவர் அவ்வாறான செயலில் ஈடுபடுவாரா?" சுருதியின் மன நியாயப்படுத்தல்கள் இவ்வாறு தான் இருந்தன.

ஆனால், நாளாக நாளாக துணைவரின் நடவடிக்கைகள் பற்றிய தகவல்கள் தனது நெருக்கமானவர்கள் மூலமாக அவளுக்கு தெரிய வந்து கொண்டிருந்தபோது "அனைத்தும் பொய்யா? இந்த மனுசன் வாழ்ந்தது, பேசியது அனைத்தும் பொய்யா? எப்படி அவரால் எங்களுடன் இப்படி நடந்துகொள்ள முடிந்தது?" இவ்வாறான வினாக்களுக்கு சுருதியிடம் விடை கிடைக்கவில்லை. ஆனால் துணைவரைப் பற்றிய உண்மைமுகம் தெரிந்தது.

சிறைச்சாலைக்குப் போய்ப் பார்ப்பதைத் தவிர்த்தாள். பிள்ளைகளையும் அநுமதிக்கவில்லை. இரண்டு பிள்ளைகள். நான்கு வயது, இரண்டு வயது.

எவ்வளவு வேதனைகள் சுருதியின் மனதில். என்ன குறை கண்டார். சுருதியால் பல மாதங்கள் நிலையாக சிந்திக்க முடியவில்லை.

ஊராரின் வசைகள். தெருவால் செல்ல முடியாத நிலை அவளுக்கு. வயதான அம்மா, தம்பி என ஐந்து பேர் கொண்ட குடும்பம் நிம்மதியிழந்து தவித்தது. தம்பி கூலி வேலை. ஐவரையும் எப்படி சமாளிப்பான். இந்த ஊரில் இருக்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் ஆண்டின் பின் சுருதி முடிவெடுத்தாள். பிள்ளைகளை பள்ளியில் இந்த ஊரில் படிக்க வைக்க முடியாது என்பதை உணர்ந்தாள் சுருதி தெருவால் ஏதாவது முக்கிய தேவைகளுக்காக செல்லும் போது, சிறுவர்கள் கூட பேசும் வார்த்தைகள் அவளது நெஞ்சைக் கிழித்தன.

வேறு ஊருக்குச் செல்வதென முடிவானது. தம்பி எவ்வளவோ சொல்லிப் பார்த்தான். "உலகிற்கே தெரிந்த சேதி எங்கு சென்றாலும் நிலை இதுதான்" என வாதிட்டான்.

"பரவாயில்லை. எங்களை யாருக்கும் தெரியாது. யாருக்கும் தெரியாத ஊரில் நாங்க போய் வாழ்றம். அங்கயும் ஏலாட்டி சாகிறம்" என்ற வாதங்களின் பின்னர், ஒரு நாள் யாருக்கும் கூறாமலே அதிகாலை நான்கு மணிக்கே தனது இரு பிள்ளைகளுடன் அவர்களுக்குத் தேவையான உடைகளுடன் புறப்பட்டவள் தான்.

யாரையும் தெரியாத ஓர் ஊரில் தென்னம் தோட்டம் ஒன்றில் கூலி வேலைக்குச் சேர்ந்து, அங்கேயே தங்கியிருந்து உழைத்து நாராகத் தேய்ந்து படாத துன்பங்களைப் பட்டு தாங்கொண்ணா வேதனைகளை அநுபவித்து நூலாகி, ஒருவாறு பிள்ளைகளைப் படிப்பித்து விட்டாள்.

"கடந்த ஆண்டு துணைவரை தூக்கிலிட்டார்கள்" என ஊரிலிருந்து தேங்காய் வாங்க வந்த சின்னச்சாமி கூறித்தெரிந்து கொண்டாள். சின்னச்சாமிக்கு சுருதியைத் தெரியாது. அவனது பேச்சிலிருந்து தன் ஊரவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதையறிந்து, சுருதி வழக்கு விடயமாக தெரிந்து கொள்வதற்காகக் கேட்போது தெரிந்தது தான்.

சின்னச்சாமி தன் மகன் மலரவனிடம் நடந்த விடயத்தைக் கூறினான். இந்த வழக்கு விடயமாக கதைத்திருப்பதால், அவர் ஏதோ இந்த வழக்குடன் சம்பந்தப்பட்டவராக இருக்கும் என சந்தேகித்து சுருதியைத் தேடி வந்து, சந்தித்து பேசிய போது தனது சந்தேகம் சரியென்பதை உணர்ந்தான்.

"மரண தண்டனைக் கைதிகளின் குடும்பங்கள் படும் பாடு" என்ற தலைப்பில் ஆய்வுகளை தனது மேல் படிப்பிற்காக மலரவன் செய்து கொண்டிருந்தான்.

தனது ஊரிலும் ஒருவர் மரண தண்டனை கைதியாக இருந்தாலும் அவரது குடும்பத்தவர் யாரும் இல்லாததால் அவர்கள் பற்றி ஆய்வுகள் செய்ய முடியாத நிலையில் மலரவன் இருந்தான்.

தற்போது, அந்த வாய்ப்பு அவனுக்கு கிடைத்திருக்கின்றது. சுருதி பிள்ளைகளுக்கு அவர்களது தந்தை இறந்து விட்டார் என்றே கூறி வளர்த்திருக்கிறாள். மலரவனிடம் உண்மையைச் சொன்னாலும் தான் சாகும்வரை தன் பிள்ளைகளுக்கு உண்மை கூறப்போதில்லை என்ற உறுதியான அவளது நிலைப்பாட்டையும் மலரவனிடம் கூறத் தவறவில்லை.

தனது துணைவர் நல்லவர் என நம்பியிருந்ததாகச் சொன்னாள். ஆனால், மிருகத்தை விட கேவலமானவர் என்பதைக் கூறி நிறைவு செய்தாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடிசாராயமும் தென்னையும்

சீலனின் மூன்று ஏக்கர் வளவு மரங்கள், பற்றைகள் வளர்ந்து காடாக மாறிவிட்டது. அதனால், ஊரில் உள்ளவர்களால் தொடர்ந்து சிக்கல். ஊராரின் கோபத்தி லுள்ள நியாயத்தை மறுக்கவில்லை. டெங்கு பரவுகின்றது என்ற குற்றச்சாட்டு. யானைகள் வந்தாலும் தெரிவதில்லை என்ற முறைப்பாடு. வடிசாரயத்தை அதுக்குள்ள மறைச்சு வச்சு விக்கிறார்கள் என்ற சமூக அக்கறை.இப்படி பல சிக்கல்கள் இந்தக் காடால். காடு வெட்டினாலும் பிறகு வளரும். சீலன் கவலையில் இருந்தான்.

தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தரை சந்தித்து கலந்துரையாடினான். நம்பிக்கை பிறந்தது. தென்னங்கன்று இலவசம், பராமரிப்பிற்கும் வேலியடைப் பதற்கும் குறைந்த வட்டியில் வங்கிக் கடன். ஏக்கருக்கு அறுபத்திநாலு தென்னைகள் நடவேண்டும் என்ற ஆலோசனைகள் சீலனுக்கு தெம்பூட்டின.

ஒரு கிழமையில், ஊர் மக்கள் நன்றி கூறினார்கள். எனது வளவை துப்பரவாக்கியமைக்காக ஊரார் தெரிவித்த நன்றி சீலனை வெட்கப்பட வைத்தது. தனது நண்பன் சதாசிவத்தின் உதவியுடன் கிணறு ஒன்று வெட்டினான். கிடைத்த தென்னங்கன்றுகளை நட்டான். தன்னிடமிருந்த பணத்தில் நீர் இறைக்கும் இயந்திரம் ஒன்றினைக் கொள்வனவு செய்தான்.இரண்டு மாதத்தில், அவனால் கூட நம்ப முடியவில்லை இப்படி தனது வளவு பண்ணையாக மாறும் என்று.

விவசாயப் போதனாசிரியர் பண்ணைக்கு வந்து தென்னை வளரும்வரை இடைவெளியில் பயிர் செய்வதற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கான ஆலோசனைகளையும் தங்கள் திணைக்களத்தால் கால் ஏக்கருக்கு தூவல் பாசனத்திற்கான உபகரணங்கள் அரைவிலையில் தரலாம். சோளம் விதைகள் மானியமாக தரலாம் என்றார்.

தூவல்பாசனத்தில், கோவா நட்டான். இரண்டு ஏக்கரில் சோளம் பயிரிட்டான். இரசாயனங்கள் பாவிக் காமல் பயிர் செய்வதற்கான பயிற்சியும் பெற்றான்.

சிறந்த வருமானம். தனது வளவும் மகிழ்ச்சியான வாழ்வும் என சீலனின் குடும்பம் பண்ணையினுள்ளேயே வீடு ஒன்றை அமைத்து அங்கேயே வாழ்ந்தார்கள். ஐந்து வருடத்தில் தென்னைகள் நீருற்றி தங்களை வளர்த்தவர் களுக்கு, தங்கள் நன்றியைச் செலுத்தத் தொடங்கின.

## நன்னடத்தை

வழக்கமாக ஒன்றுகூடும் இடத்தில் பள்ளித் தோழர்கள் மூவரும் சரியாக ஐந்து மணிக்கு வந்து சேர்ந்தார்கள். அவர்களுக்கு, இன்று வரப்போகும் ஆபத்து தெரிந்திருக்கவில்லை. தெரிந்திருந்தால் வந்திருக்க மாட்டார்கள்.

"சே, என்னடாப்பா இந்த அரசாங்கம் இப்படி விலையக் கூட்டிப் போட்டானுகள்.முந்நூற்றி இருபது உரூபா" என்று சமராய்வன் முடிப்பதற்குள்

" உனக்கு என்ன விசரா? எப்படா போய் வாங்கினனீ? இப்ப முந்நூற்றி எண்பது. தெரியுமா?" என்றான் அன்பானந்தன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எங்கட ஊரில நாநூற்றி இருபதுடா" என்றான் மரவள்ளிக் கிழங்குப் பொரியல் ஒன்றை வாயில் போட்டவாறு செல்லப்பா.

" மச்சான், இந்த மாத இரசாயனவியல் பாட மேலதிக வகுப்பு காசுடா என்ரது" அன்பானந்தனின் மகிழ்ச்சியான நேரத்துக் கவலை.

"தலமயிர் வெட்டச் சொல்லி அம்மா தந்தவ மச்சான்." என்றான் சமராய்வான்.

"நீங்க ரெண்டு பேரும் பரவாயில்லடா. வேறு வழியில்லாம அப்பா தோட்டத்தில பயிர்களுக்கு எண்ண அடிக்க வச்சிருந்த காச சுட்டிற்று போன கிழமை வந்தனான் மச்சி. வீட்ட என்ன செய்தாங்களோ தெரியாது" செல்லப்பாவின் மனந்திறந்த உண்மை.

"தண்ணி அடிச்சா ஆங்கிலம் வருமென்றானுவள் ,நமக்குத் தான் ஒண்டும் வருகுதில்லையே" என்ற செல்லப்பாவின் தலையில் பலமான அடி ஒன்று விழுந்த போது நிலைகுலைந்து போனார்கள் மூவரும்.

தங்களது பங்குப் போத்தல்கள் மூன்றையும் ஏறத்தாழ குடித்து முடித்த நேரத்தில் தான் அவர்களது பள்ளி முதல்வரும் இரசாயனவியல் பாட ஆசிரியரும் வந்து சேர்ந்தார்கள் இருள் நேரமென்பதாலும் சுயநினைவு ஓரளவு இழந்திருந்ததாலும் யாரும் வருவதனை கண்டுகொள்ள முடியாத நிலையில் நண்பர்கள் மூவரும் மாட்டிக்கொண்டார்கள்.

மூன்று பேரும் இருவராலும் நன்றாக பதம் பார்க்கப்பட்டார்கள் இரசாயனவியல் ஆசிரியருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் சொல்லுகின்ற பொய்களால் ஏமாந்து விட்டோமே என்கிற ஒருவித மனநெருடல் ஏற்பட்டிருந்தது. அதனால் தான் அவரது தாக்குதல்கள் அதிகமாக இருந்தது.

சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தருக்கும் மூவரின் பெற்றோர்களுக்கும் தகவல் கைப்பேசி மூலமாக பறந்தது.

"வெளியே தெரிந்தால் எங்கட பள்ளியின் பெயர் பாழாகிவிடும்." பள்ளி முதல்வர் தனது ஆதங்கத்தை வார்த்தைகளால் வெளிக்காட்டினார்.

நன்னடத்தை உத்தியோகத்தர் சிரித்துக் கொண்டே சொன்னார் "அப்படியா நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? இவர்கள் மாத்திரமில்ல பல மாணவர்களின் நிலை இது தான். உங்கட பாடசாலை மாணவர்கள் பல தடவைகள் இப்படி பிடிபட்டு பள்ளி மானம் இப்ப காத்தில பறந்து கொண்டு தான் இருக்கு.

இதற்காகத் தான் பிள்ளைகளுக்கு விழப்புணர்வு கள் செய்ய வேண்டும். அவர்களது உரிமைகள் சம்பந்தமாக கலந்துரையாட வேண்டும் என்று பல தடவைகள் கேட்டிருந்தம். ஆனால் பாட நேரம் வீணாகி விடும் என்று மறுத்து விட்டீர்கள்."

பள்ளி முதல்வர் தலை குனிந்தபடி இருந்தார். மூன்று மாணவர்களையும் இன்று இரவு மாத்திரம் தன்னுடன் அனுமதிக்கும்படி கேட்டதற்கிணங்க அவருடன் செல்ல அனுமதிக்கப்பட்டார்கள்.

தனது வீட்டில் மூவருக்கும் வசதியான படுக்கை ஒழுங்கு செய்து கொடுத்தார் நீலவண்ணன். காலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்பசை, தூரிகை என்பன மூவருக்கும் தயாராக இருந்தன. காலைக் கடன்களை முடித்தார்கள். காலை உணவும் கிடைத்தது. மூன்று பேரும், அன்று தங்களது வழமையான பணிகளுக்கு விடுப்பு வழங்கினார்கள்.

நீலவண்ணன் மூவருடனும் காலை எட்டு மணிவரை ஒரு வார்த்தையும் பேசாமல் இருந்தது மூவருக்கும் மிகுந்த அச்சத்தை ஏற்படுத்தியிருந்தது. தங்களைப் போன்ற மாணவர்களை வீட்டிலிருந்து பிரித்து சீர்திருத்தப் பள்ளிகளில் சேர்த்துவிடுவார்கள் என்று ஏற்பட்ட பயம் அது.

நீலவண்ணன் தனது வேலைகளை முடித்து விட்டு மூவரிடமும் வந்து பேசினார். அவர்களது பேச்சைக் கேட்டார். க.பொ.த. சாதாரண தரம் தேர்வு எழுதியதிலிருந்து ஒவ்வொரு கிழமையும் தொடர்வதாக தெரிய வந்தது. பல தடவைகள் சக மாணவர்களின் பணத்தைத் திருடியும் இருக்கிறார்கள். ஆசிரியர்களின் பணத்தைக்கூட திருடி யிருக்கிறார்கள் என்பதையும் அறிந்து கொண்டார்.

அவர்களது எதிர்காலம் பற்றிய தெளிவூட்டல்கள், நமது இனம் கடந்து வந்த பாதை, தற்போது இளைஞர்களது திறனுள்ள செயற்பாடுகள் நமது சமூகத்திற்கு எந்த வகையில் தேவை, எவ்வாறானவர்களை இந்த சமூகம் மதிக்கும், தொடர்ந்து மது பாவிப்பதால் ஏற்படும் பாதிப்புகள் போன்ற பல்வேறு தகவல்கள் நீலவண்ணனால் தெவிக்கப்பட்டது.

விழிப்புணர்வுத் திரைப்படங்களும் காண்பித்தார். அவர்கள் வீடுகளுக்குச் செல்வதற்கு அனுமதிக்கப்பட்ட போது, பள்ளியில் யார் யார் எப்போது எங்கே மது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவனையில் ஈடுபடுகின்றார்கள் என்ற தகவல்கள் நீலவண்ணனுக்கு கிடைத்தது.

பள்ளி முதல்வரை சென்று சந்தித்தார் நீலவண்ணன். இந்த சம்பவம் நமக்கு மட்டுமே தெரிந்ததாக இருக்கட்டும் என்ற எழுதாக உடன்படிக்கை காக்கப்பட்டது.

பள்ளிகளில் சிறுவர்களுக்கான நன்னடத்தை அலுவலகத்தின் தொடர்ச்சியான வழிகாட்டல் கிடைப் பதற்கு இந்தச் சம்பவம் துணைபுரிந்தது.

நீலவண்ணன் தனது பேரப்பிள்ளையை பள்ளியில் சேர்க்கச் சென்றபோது, அப்பள்ளியின் ஒழுக்கத்திற்குப் பொறுப்பான ஆசிரியராக அன்பானந்தன் இருக்கிறான் என்பதனை அவனது வாயால் கூறிக் கேட்ட போது, தன்னை நினைத்து நிறைவடைந்தவராக மகிழ்ச்சியான சிரிப்புடன் வீடு நோக்கி நடந்தார்.

## பள்ளிக்கூடம் போவாணாம்

சாலிகீன் ஏழாம் வகுப்பில் படித்துக் கொண்டிருக்கும் கெட்டிக்கார ஏழைச் சிறுவன். பள்ளியில் வசதிக்கட்டணம் செலுத்துவதற்கே வழியில்லாமல் திண்டாடுபவன்.

"வாப்பாவும் இல்லாம எப்பிடி மவ சாப்பாடு தாற. நான் உழக்கிறது ஒரு நேர சாப்பாட்டுக்குத்தான் போதும் புள்ள நீ இனி பள்ளிக்கூடம் போவாணாம்" அம்மா அடிக்கடி சொல்லும் வார்த்தை இது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உம்மா பள்ளிக்குப் போவ எனக்கு காசு தேவல. சேரிட்ட நான் சொல்லிக்குவன்" என்று அம்மாவை சமாதானப் படுத்தி இன்று ஏழாம் வகுப்பு வரை வந்துவிட்டான்.

ஒரு நாள் வீட்டின் முன்னால் இருந்த ஆற்றில் தூண்டல் போட்டுக்கொண்டிருந்தவனிடம் மீன் இருப்பதைக் கண்ட மின்னொளியான் சாலிக்கீன் அருகே வந்து "இந்த மீன எனக்குத் தரமுடியுமா? காசு தாறன்" என்று கேட்க மறுப்பேதுமில்லாமல் தூண்டிலில் பிடித்த யப்பான் மீன் எட்டையும் அவருக்குக் கொடுத்தான்

மின்னொளியான் தனது கொழும்பு நண்பர்களுடன் தண்ணியடிப்பதற்காக தொட்டுக்கொள்வதற்கு ஏதுமில்லை என்ற நேரத்தில் கிடைத்த மீன் அது. மகிழ்ச்சியில் ஐம்பது ரூபாய் மீனுக்கு நானூறு உருபா கொடுத்துவிட்டுப் போனான். மகிழ்வடைந்தான் சாலிக்கீன். சாலீக்கீனின் வாழ்வியல் நிலையினையும் கேட்டு அறிந்ததனால்தான் மின்னொளியான் சற்று அதிகமான தொகை கொடுத்தான்.

அம்மாவிடம் செய்தியை தெரிவித்தாலும் கிடைத்த பணத்தை தாயிடம் அவன் கொடுக்கவில்லை. அதனை வைத்து வியாபாரம் தொடங்கப் போவதாக அம்மாவிற்கு பதிலளித்தான்.

வதூர் நானாவின் கடைக்குப் போய், நான்கு நூறு கிராம் தேயிலைப் பொதிகள் வாங்கினான் தனது வியாபாரத் திட்டத்தையும் சொன்னான் சாலீகீன். அதிசயமாக ஆனால் மகிழ்வுடன் பார்த்த பதூர் நானா "இது விக்கிற விலை நூறு உருபா. எண்பது உருபாய்க்கு வாங்கினனான். நான் வாங்கின விலைக்கே உனக்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாறன். அதோட ஒண்ணு கூடத் தாறன். வித்துப் போட்டு வந்து ஒண்ணுட காசை தா" என ஐந்து தேயிலைப் பொதிகளைக் கொடுத்தார்

அயல் வீடுகளிற்குச் சென்று நூறு ரூபாய்க்கு விற்றான் ஐந்திலும் ஒரு தேயிலைப் பொதி வாங்கக் கூடிய நூறு உருபா இலாபம் கிடைத்தது. ஐந்து தேயிலைப் பொதியை விற்பதற்கு எட்டு வீடுகளுக்கு அவன் போக வேண்டியதாக இருந்தது. ஆனால் ஒரு மணியில் நூறு உருபா இலாபம் மகிழ்ச்சியை சாலிகீனிற்கு தந்தது.

உடனடியாகவே கடைக்குப்போய் அவனது கடனைக் கொடுத்து விட்டு. மேலும் ஐந்து கேட்டான். சிறுவனின் ஆர்வம் அவ்ரை மகிழ்ச்சியடைய வைத்தது. உண்மையில் வதூர் நாணாவுக்கு ஒரு தேயிலைப் பொதியில் ஐந்து உருபா இலாபம் இருந்தது. தற்போது பத்து பொதிகளைக் கொடுத்தார். உற்சாகத்துடன் தேயிலை விற்பனையில் ஈடுபடத் தொடங்கினான். இலாபம் அதிகரிக்கத் தொடங்கியது.

மாத முடிவில் சாலிகீன் சரியாக தொண்ணூறு குடும்பங் களை தனது வாடிக்கையாளராக்கி இருந்தான். கிழமைக்கு சிலர் ஒரு பொதியும் சிலர் இரண்டு பொதியும் வாங்கினர்.மொத்தமாக முந்நூற்றிபதினைந்து பொதிகளை அவன் விற்றிருந்தான். ஆறாயிரத்து நானூறு உருபா நிகர இலாபமாக கிடைத்தது. சில வீடுகளில் வேறு பொருட்களும் கேட்டார்கள்

அதனால், இருநூற்றி முப்பது உருபாவும் சேர்த்து முதல் மாதத்தில் சாலீகீனின் தேறிய இலாபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறாயிரத்தி அறுநூற்றி முப்பதாகியது. மகிழ்ச்சியின் எல்லைக்குச் சென்றான்.

தானாகவே பள்ளியில் வசதிக் கட்டணம் செலுத்தினான். வீட்டில் இரவு நேரத்தில் முன்னரை விட படிப்பில் ஆர்வம் காட்டினான். அம்மாவிற்கும் விடயத்தைச் சொன்ன போது, நம்பவில்லை. பதூர் நானாவிடம் கூட்டிச் சென்று அம்மாவை நம்ப வைக்க வேண்டியதாயிற்று. அம்மாவும் மகிழ்ந்தாள். ஆனால் அவள் அவனது பணத்தில் எதுவும் கேட்கவில்லை.

அடுத்த மாதம் அதற்கடுத்த மாதம் என வியாபாரம் பெருகியது. பொருட்களின் எண்ணிக்கையும் கூடியது. முன்னர் வாங்கிய தேயிலைப் பொதியை நான்காவது மாதத்திலிருந்து நிறுத்தி விட்டான். தரமான தூள்த் தேயிலை ஒரு கிலோ எழுநூறு உருபாக்கு பெறலாம் என அவனது வகுப்பாசிரியர் வழிகாட்டினார்.

ஒரு கிலோ தேயிலையின் இலாபம் நூறு ரூபாவால் கூடியது.தற்போது, ஒரு குடும்பத்திற்கான ஒரு கிழமைக்கான பொருட்களில் நூறு கிராம் தேயிலை, மூன்று கிலோ அரிசி மா, பப்படம் ஒரு பொதி, சீனி அரை கிலோ ஆகியன இருந்தது.

தேயிலையில் முப்பது ரூபாய், அரிசிமாவில் கிலோவிற்கு இருபது உருபா மூன்று கிலோவிற்கும் அறுபது உருபா பப்படத்தில் ஐந்து உருபா சீனியில் மூன்று உருபா என மொத்தமாக தொண்ணூற்றி எட்டு உருபா இலாபமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதமொன்றிற்கு முன்னூற்றி தொண்ணூற்றி இரண்டு உருபா கிடைத்தது. நூறு குடும்பங்களுக்கு பொருட்களை வழங்கிக் கொண்டிருந்ததனால், சாலீகீனிற்கு மாதாந்த தேறிய இலாபமாக முப்பத்தொன்பதினாயிரத்து இருநூறு உருபாகள் கிடைத்தன.

அம்மாவிடம் நாற்பதாயிரம் பணத்தைக் கொடுத்த போது, அம்மா சொரிந்த கண்ணீருக்கு அளவேயில்லை. அம்மாவை தொழிலுக்கு போக வேண்டாம் என சொல்லி விட்டான். தேர்வுக் காலங்களில் சாலீகினின் வேலைகளில் பாதியை அம்மா செய்தாள்.

தனது வியாபாரம் மின்னொளியானின் பணத்தால் உருவானது என்பதனை மனதில் வைத்து அவனைத் தேடிப்பிடித்து, தனது தற்போதய குடும்ப நிலையைச் சொன்ன போது,

"இப்படியான பிள்ளைகள் இருந்தால் விரைவாக நாடு முன்னேறும்" என எண்ணிக்கொண்டான் மின்னொளியான். உறவுகள் தொடர்ந்தன.

சாதாரணதரம் தேர்வு எழுதி முடித்த மறுநாளே ஒரு மகிழுர்ந்தினை மின்னொளியானின் வழிகாட்டலில் கொள்வனவு செய்தான். தனது உழைப்பில் ஒரு மகிழுர்ந்தினை வாங்கிய முதலாவது இலங்கை மாணவன் என்ற பெருமையுடன் சாலீகீன் உயர்தரம் வரையான காலத்தில் நண்பர்களுடன் மகிழுர்ந்தில் மகிழ்ச்சியுடன் களித்துக்கொண்டிருக்கிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதுவும் கடந்து போகும்

அழைப்புக் கொடுத்தவர்களில் பத்து விதமானவர் கள் கூட மகளின் திருமண வீட்டிற்கு வரவில்லை என்ற ஏக்கத்தில் கடந்த இரண்டு மாதங்களாக ஒழுங்காகச் சாப்பிடவுமில்லை, தூங்கவுமில்லை. உடம்பு மெலிந்து விட்டது. முகச்சவரம் செய்யாத முகம். பார்ப்பதற்கு அசிங்கமாக இருந்தது. கவலையின் முழுவடிவமாகக் காணப்பட்டார் பரிமேலழகர்.

"எல்லோரும் நெருக்கமாகத்தானே இருந்தார்கள். நன்றாகத் தானே பேசினார்கள். ஒருசிலர் தான் முகத்திற்கு முன்னால் இப்படியிருக்காதீங்க, பதவிக்காலம் முடிஞ்சா யாரும் உங்கள மதிக்க மாட்டாங்க என்றாங்க. ஆனால், அந்த ஒருசிலர் திருமணத்திற்கு வந்திருந்தார்களே" என தனக்குள் எண்ணி , நினைத்து மனம் வெம்பிக் கொண்டிருந்தார்.

"சிறந்த அறிவாளி. கல்விமான். எல்லோராலும் மதிக்கப் படுபவர். எல்லோரும் ஏற்றுக் கொள்வார்கள். கட்சிக்கும் நல்ல வழிகாட்டல், எதிர்காலம் கிடைக்கும்" இவை தான் பரிமேலழகர் அரசியலுக்கு வருவதற்கு அடிப்படையான காரணங்களாக இருந்தன.

சிறு வயதிலிருந்தே, அரசியல் ஆர்வமிருந்தாலும் நாளேடுகள் வாசிப்பது, நண்பர்களுடன் நாட்டு நடப்புகளை பகிர்ந்து கொள்வது என்பதே பரிமேலழகரின் உச்ச அரசியல் வெளிப்பாடாக இருந்தது.

தேர்தலில் எதுவித செலவுகளும் இல்லாமல் வெற்றியீட்டக் கூடியதாக இருந்தது. விவசாயத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திணைக்கள உயரதிகாரியாக இருந்து, பணியாற்றி பட்டறிவினை சிறப்பாக பயன்படுத்துவார் என அனைவரும் எதிர்பார்த்தனர்.

மக்களுடன் கதைக்கும் பண்பு மெதுவாக மாறத் தொடங்கியது சிறிது விவாதம் ஏற்படுகின்ற போது, எதிரில் இருப்பவர்களுடன் கோபத்துடன் கடிந்து கொள்ளத் தொடங்கினார் கட்சியில் சிலருக்கு பரிமேலழகரில் வெறுப்பு வரத்தொடங்கியது. மற்றவர்களின் நியாயபூர்வ மான கருத்துக்களுக்கு மதிப்பளிக்கும் பண்பு இவரிடம் இல்லை என ஆதங்கப்பட்டனர்

கூட்டங்களின் அவர் மாத்திரமே பேசுபவராக மாறினார் ஏனையோரின் கருத்துக்கள் ஏற்றுக்கொள்ள முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுக் கொண்டிருந்தன

பரிமேலகர் அமைச்சரானதும் அவரது நெருக்க மானவர்கள் அவரிலுள்ள அக்கறையில், ஒரு நல்ல மனிதரின் மேல் உள்ள ஈடுபாட்டில் பல அறிவுரைகள் சொன்னார்கள். கட்சிப் பணிக்காக அரைவாசி நேரமில்லா விட்டாலும் செயற்படு நேரத்தில் சிறிய நேரத்தையாவது ஒதுக்குங்கள் என கெஞ்சினார்கள். அவ்வாறு கூறியவர்கள் எல்லோரும் ஏறத்தாழ அவருக்கு வேப்பங்காயானார்கள்

கட்சி செயற்பாடுகள் முடங்கின மக்களும் முணு முணுக்கத் தொடங்கினர். கட்சியில் அவருக்காக கதைப்பதற்கு அவருடன் இருந்தவர்கள் கூட இல்லாது போனார்கள். ஆனால் அதைப்பற்றி அவர் அறிய வில்லையா அல்லது அறிந்து கொண்டு தன்பாட்டில் நடக்கிறாரா என்ற ஐயம் அக்கறையுள்ளவர்களுக்கு இருந்தது என்னவோ உண்மைதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைச்சருடன் நெருக்கமான ஒன்று இரண்டு ஊதுகுழல்களின் கதைகளை வேதவாக்காக அவர் நம்பிக்கொண்டிருந்தார். யாருடைய பேச்சை நம்ப வேண்டும் என்பதை அவர் புரிந்துகொண்டிருக்கவில்லை. எவ்வளவோ செய்யக் கூடி வசதிகள் இருந்தும் எதுவும் செய்கின்றார் இல்லையே என பலர் ஆதங்கப்பட்டுக் கொண்டிருந்தனர்.

கட்சியின் சிறந்த செயற்பாட்டார்கள் கூட இவரது செயற்பாடுகள் பற்றிய மக்களது கேள்விகளுக்கு பதிலளிக்க முடியாமல் தமது செயற்பாடுகளை மெதுமெதுவாக நிறுத்திக் கொண்டார்கள்.

பதவிக்காலம் முடிவடைந்து அடுத்த தேர்தல் அறிவிக்கப்பட்டபோது, மீண்டும் போட்டி இடுவதற்கு விண்ணப்பித்தார். விண்ணப் தெரிவுக் கூட்டத்தில் பலரது நியாயபூர்வமான கேள்விகளுக்கு பதிலளிக்க முடியாமல் போக, அவர்களது கண்டனங்களைத் தாங்கிக்கொள்ள வேண்டியதாயிற்று.

தேர்தலில் போட்டியிடுவதில்லை என்ற முடிவுடன் கூட்டத்திலிருந்து வெளியேறி இன்று எட்டாண்டுகள் ஆகிவிட்டன.முன்னர், அவரை அக்கறை யுடன் கடிந்து கொண்டவர்கள் மாத்திரமே. அவரது மகளது திருமண வீட்டிற்கு வந்திருந்தார்கள். ஏனையோர் மாப்பிள்ளை வீட்டார் உறவினர்கள்

பலரது அரசியல் வாழ்க்கைக்கு பரிமேலழகரின் அரசியல் வாழ்வு எடுத்துக்காட்டாகியதொன்றே அவரது அரசியல் பிரவேசத்தினால் ஏற்பட்ட இவ்வுலக நன்மை யாகப் பார்க்கப்படுகின்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கும்பிட்ட வந்தால் காசு

அன்பழகன் கோவிலுக்குச் சென்று திரும்பிக் கொண்டிருக்கும்போது, கோயில் தலைவர் சொன்னதை தனது சிந்தனைக்கு எடுத்தான்.

"கோயில இவ்வளவு செலவு செய்து புனரமைப்புச் செய்திருக்கிறம். சனங்கள் கோயிலுக்கு வருகுதில்லையே. சனம் வந்தாத்தானே கோயிலயும் நிர்வகிக்க ஏலும். ஐயருக்கு சம்பளம் கொடுக்க காசுக்கு எங்க போற. ஐயரும்அடுத்த மாதம் வெளிநாட்டுக்கு தன்ர பிள்ளைகளோட போய் இருக்கப் போறாராம். ஐயரும் இல்ல. என்ன செய்யிறதென்டே தெரியல்ல.பக்கத்து வீதியிலயும் ஒரு முருகன் கோயில் கட்டுறாங்க. கந்தசட்டி நடத்த முருகன் கோயில் இல்லையாம். இப்படியே போனா நம்மட.கோயில்ற நிலை என்ன? நம்மட சனத்திர நிலை என்ன?"

தலைவரின் வார்த்தைகளில் நிறைந்திருந்த எதிர்காலத்தைப் பற்றிய அக்கறை அன்பழகனை மேலும் சிந்திக்க வைத்தது.

"ஒவ்வொரு ஊரிலயும் தேவைக்கு அதிகமா கோயில்கள கட்டி என்ன செய்யிறது. எதற்காக இப்படி கட்டுறாங்க எண்டே விளங்குதில்லயே. இது போதாதெண்டு, இப்ப பள்ளிக்கூடங்களிலும் கோயில் கட்ட தொடங்கிற்றாங்க ஒரு சிலர் தங்கட பெயருக்காக கட்டிப் போட்டுப் போக பிறகு, அத நடத்த ஆக்கள் இல்லாமல் அங்கயும் இஞ்சையும் அலஞ்சு திரியிற கோயில் நிர்வாகத்தை பாக்கவே கவலையாக இருக்கிறது." அன்பழகனின் சிந்தனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கு. ஏதாவது முடிவு கட்ட வேணும் என்று தோணியது. என்ன செய்யலாம் என்று எண்ணியவன்

"இது தேவையில்லாத வேல நமக்கு. கடவுளுக்கு எதிரா கதைக்கிறான் எண்டு கதய கட்டி விட்டுப்போடுவானுவள். கோயிலுக்குப் போனமா சாமிய கும்பிட்டமா வந்தமா எண்டு இருக்கிறத விட்டுப் போட்டு. தேவையில்லாத வேலையெல்லாம் நமக்கு எதற்கு" என்று தன் முடிவை நிறைவேற்றும் போது

"இவ்வளவு நேரமும் அங்க கிடந்து. ஒவ்வொரு நாளும் என்ன தான் செய்யிறியோ" என்ற அம்மாவின் வார்த்தைகள் தான் தனது வீட்டுக்கு வந்து விட்டோம் என்பதை உறுதிப்படுத்தியது அன்பழகனுக்கு

## குப்பைகளுடன் மனிதர்

கலையரசனை தூக்கத்திலிருந்து எழுப்பி விட்டாள் அம்மா.

"உண்டபின் நூறடி நட"எண்டு சொல்லியிருக்காங்க மகன்"

"உண்டபின் உண்டாம் தொண்டனுக்கும் உறக்கம்" பதிலளித்தவன் திரும்பிப் பார்த்தான் நண்பன் சேகர் இருந்தான் சிறிது நேர நட்புடனான உரையாடல்கள்.

சுகாதாரத் தொழிலாளர்கள் குப்பையோட குப்பையாக உழவு இயந்திரங்களில் கழிவுகளின் துர் நாற்றத்துடன் ஏற்றிச் செல்லப்படுவதை கவலையுடன் பரிமாறிக் கொண்டிருந்தான் கலையரசன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அவர்கள் ஒரு கிழமையில்ல ஒரு நாள் வேலை செய்யாது விட்டார்கள் எண்டா நம்மட நகரமே நரகமாக நாறும் மச்சான். அவங்க வசதியோட வாழனும். கழிவுகளோட போற நிலய மாத்தோணும்." வார்த்தைகளில் நிதானமான வெறி தெரிந்தது.

"வெள்ளக்காரன் மலையகத்தில தொழிலாளி களுக்கு வசதியான வீடும் கட்டிக்குடுக்கல்ல, பள்ளிக்கூடமும் கட்டல்ல. ஏனெண்டா அவங்க படிச்சா தொழிலுக்கு ஆக்கள் இல்லாம போயிருவாங்க எண்ட தூரநோக்கு.

இப்ப நம்மட ஊரப் பார் உயர்தரம் படிச்சவனுவள் வேலைக்கே வாறானுவள் இல்ல. வயல்ல இறங்கவே மாட்டன் என்றானுவள்.

இவனுவளும் படிச்சானுகள் எண்டா ஊரே நாறும். வேற கிரக்கத்தில போய்த்தான்நாம வாழனும்" சேகரின் கருத்துக்களை கோபத்துடன் நிராகரித்த கலையரசன்

"அவர்களின் துன்பத்தில் நாம இன்பம் அநுபவிப்பது சரியா? அறிவியல் உலகத்தில் நவீன மயப்படுத்தி வேலைகள் செயற்படுத்த வேணும்.

அதற்கான வேலைகள் செய்யப்போறன் மச்சான்" என்ற கலையரசனின் தீர்க்கமான பேச்சை மகிழ்ச்சியுடன் இரசித்துக்கொண்டிருந்தார் மகனைப் பெற்றெடுத்த தாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிள்ள பெத்தவள்

தன்னால் கலைச்செல்வன் தனது தாய் தந்தையரைப் பிரிந்து தனிக்குடித்தனம் போக வேண்டியேற்பட்டு விட்டதே என்று வருந்தினாள் கலையரசி.

அவளது துணைவர் போராட்ட காலத்தில் தனது உயிரை தன் மக்களுக்காக ஆகுதியாக்கியவர். அனைவரிடமும் நற்பெயரை சம்பாதித்தவர். ஏன் கலைச்செல்வனிடமும் தான். அதனால் தான் நான்கு வயதுக் குழந்தையுடன் கலையரசியை கலைச்செல்வன் தனது துணைவியாக்கியிருந்தான்.

கலைச்செல்வன் வீட்டில் யாருக்குமே அவனது இந்த முடிவு பிடித்திருக்கவில்லை. "பிள்ளப்பெத்தவள ஏன் கட்டுவான். இவனுக்கென்ன பொம்பிளயா இல்ல. அவள் ஏதோ செய்து மயக்கிப்போட்டாள்" அம்மாவின் தினசரிப் புலம்பல்.

அவன் வீட்டிலுள்ள அனைவரினதும் எதிர்ப்புக்கு மத்தியிலேயே அவனது திருமணம் நடந்தது. கலையரசியும் எவ்வளவோ சொல்லிப் பார்த்தாள். கலைச்செல்வன் கேட்கவேயில்லை. கலையரசியின் அழகில் மயங்கினான் என்று சொல்வதற்குமில்லை. அவள் அவ்வளவு அழகானவளுமில்லை.

ஆனால், தனது பள்ளித் தோழன் எம்மக்களுக்காக செய்த தியாகம் அளவிடமுடியாதது. அவனால் இந்தப் பெண், தன் இளமைக்காலத்தை வாழ வேண்டிய நாட்களை தனது உணர்வுகளை மறுத்து உணர்ச்சிகளை அடக்கி வாழ வேண்டிய தேவை என்ன இருக்கிறது என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது நியாயங்களை தன்னுள்ளே அலசிப் பார்த்து ஆழமாக சிந்தித்தே, தன் முடிவில் உறுதியாக இருந்து வெற்றியடைந்திருக்கிறான்.

ஊரார் கலைச்செல்வனை உயர்வாகப் பேசினர். உறவினர்கள் தங்கள் நெருக்கத்தைக் குறைத்தனர். எதையும் அவன் பொருட்படுத்தவில்லை. தனது துணைவியுடன் மகிழ்ச்சியாக வாழ்க்கையைத் தொடர்ந் தான். பிள்ளை தன்னை அப்பா என அழைக்கத் தொடங்கியதிலிருந்து மகிழ்ச்சி இரட்டிப்பாகியது. கலையரசி தன் தற்போதைய துணைவரை எண்ணி பெருமிதமடைந்தாள்.

## மனம்நிறை ஞானி

ஞானி சிறுவயதிலிருந்தே ஏழை மக்களுக்கு உதவ வேண்டும் என்பதில் ஈடுபாடுள்ளவன். அவனுக்கு முப்பத்தைந்து வயதிருக்கும் நாட்டில் ஏற்பட்ட வன்செயல்கள் காரணமாக அல்லற்படும் மக்களிற்கு உதவி செய்ய வேண்டும் என்பதற்காக அரசசார்பற்ற நிறுவனம் ஒன்றை தொடங்க வேண்டும் என எண்ணினான்.

தன் நண்பர்களிடம் பேசினான். ஞானி ஒரு மருத்துவர் என்பதனால் அச்சமின்றி அவனது கோரிக்கைக்கு நண்பர்கள் உடன்பட்டனர். தொடங்கப்பட்ட நிறுவனம் மூலமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஓடியோடி பணியாற்றினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயசார்பான ஒரு நிறுவனம் பள்ளியில் கற்கும் ஏழை மாணவர்களுக்கு அப்பியாசக்கொப்பிகள் வழங்கும் நிகழ்விற்கு ஞானியை அழைத்திருந்தார்கள். அங்கு சென்ற ஞானி நிகழ்வில் அதிகளவான ஈடுபாட்டுடன் இயங்கிய றிசியை தனது நிறுவனத்துடன் சேர்த்துக்கொள்ள வேண்டும் என எண்ணினான்.

றிசி ஓர் ஆசிரியர் என்பது உவப்பான தகவலாக ஞானிக்கு இருந்தது. றிசியை தனது அலுவலகத்திற்கு அழைத்து, தனது கோரிக்கையை முன்வைத்தான் ஞானி. அதற்காகக் காத்திருந்தவன் போல் தனது முழுச் சம்மதத்தையும் தெரிவித்தான் றிசி. மக்கள் பணியில் அதிகளவான ஈடுபாட்டைக் காட்டினான்.

ஒரு நாள் தமிழ் மக்களுக்காக போராடுபவர்கள் என்று கூறிக்கொள்ளும் அமைப்பொன்றின் பொறுப்பாளர் ஞானியை தன் அலுவலகத்திற்கு அழைத்து, குறிப்பிட்ட ஊரில் கழிப்பறைகள் அமைப்பதற்காக உள்ள பணத்தில் அரைவாசிப் பணத்தை தனக்குத் தருமாறு கேட்டான். " இது மக்களின் பணம். அது அவர்களுக்கே சென்றடைய வேண்டும். அதனைத் தர முடியாது" என மறுத்துவிட்டான் ஞானி.

ஆத்திரமடைந்த பொறுப்பாளர் பல தடவைகள் அச்சுறுத்தியும் கேட்டான். மசியவில்லை ஞானி. அடுத்த கணமே ஞானியின் உயிர் பறிக்கப்பட்டது.

நிறுவனத்தினை நடத்த முடியாத நிலையில் நிருவாகிகள் ஒதுங்கிக் கொண்டார்கள். ஆனால் றிசி மாத்திரம் அதிகளவான அக்கறையெடுத்தான். எப்படி யாவது இயங்க வைக்க வேண்டும் என்பதில் குறியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து வெற்றியும் கண்டான். மக்கள் பணிக்காக மாத்திரம் நிறுவனத்தை இயங்க வைக்கவில்லை றிசி.

முன்னர், நிறுவனத்தின் சகல கொள்வனவுகளும் றிசியையே பொறுப்பாக ஞானி நியமித்திருந்தான். தனது ஆசிரியத் தொழில் மூலமாக கிடைக்கும் சம்பளத்தைப் போல் மூன்று மடங்குக்கு அதிகமாக கொள்வனவின் மூலமாக கிடைக்கும் தரகுப்பணத்தில் பெற்றுவந்தது ஞானிக்குத் தெரிந்திருக்கவில்லை. தற்போதும் அதுவே பிரதான காரணமாக இருந்தது றிசிக்கு.

சில மாதங்களில் நாட்டு நிலைமை மோசமாகியது. அவனும் பொருளாளரும் சேர்ந்து திட்டம் வகுத்தனர். இனி இங்கிருக்க முடியாது. கொழும்புக்குச் சென்றார்கள். நிறுவனத்தின் கணக்கிலிருந்து பதின்னான்கு இலட்சம் உருபா வங்கியிலிருந்து எடுத்தார்கள்.

வெளிநாட்டு முகவரிடம் பணத்தைக் கொடுத்தார் கள். இருவரும் வெவ்வேறான நாடுகளுக்குச் சென்றார்கள். சில மாதங்களில் தங்களது குடும்பத்தினரை தங்களுடன் அழைத்து மகிழ்ச்சியான வாழ்வு வாழ்கின்றார்கள்.

றிசி நல்லவன் போல் தனது நாட்டிலுள்ள மக்களுக்கு உபதேசம் செய்து கொண்டிருக்கிறான். மக்களும் றிசியை உத்தமன் என நம்பி அவனது கதையைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். உண்மைகள் தெரிய வராது என்ற நம்பிக்கையில் உத்தமனாக றிசி வாழ்ந்துகொண்டிருக்கிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏற்றம் + துரோகம் = இறக்கம்

ரூபனுக்கு பதினேழு வயது. குடும்ப ஏழ்மையினால் படிப்பை இடைநிறுத்தியவன். முரளியிடம் சென்று ஏதாவது வேலை தருமாறு கோரினான். ரூபனின் குடும்ப நிலையினை அறிந்திருந்ததனால், தனது மரக்கறி வியாபாரத்திற்கு துணையாக்கினார்.

ரூபன் ஆர்வமுடன் சலிப்பில்லாமல் ஓடியோடி வேலை செய்தான். முரளி வீட்டிலும் குடும்ப உறுப்பினர் போல் பார்க்கப்பட்டான். சகல பொறுப்புக்களையும் ரூபனிடமே ஒப்படைத்தார்.

தோட்டங்களுக்குச் சென்று மரக்கறிகளை முரளி வாங்கி வீட்டில் வைப்பார். அவற்றையெல்லாம் ரூபன் ஒவ்வொரு இடங்களில் நடைபெறுகின்ற சந்தைகளில் பணமாக்குவான்.

மூன்று ஆண்டுகள் உருண்டோடின. ரூபனின் அப்பாவிற்கு சுகயீனம் என்பதால், அவரைப் பார்ப்பதற்காக அவர்கள் வீட்டிற்கு முரளி சென்றார். சென்ற ஆண்டு தனது மகளின் காணாமல் போன சங்கிலியை ரூபனின் தங்கை அணிந்து தன் தோழி வீட்டிற்கு புறப்படும்போது கண்டார்.

முரளியின் மனதில் எங்கோ இடித்தது. கவலையடைந்தார். தனது வீட்டில் பல பொருட்கள் காணாமல் போயிருக்கின்றன. ரூபனில் யாருக்கும் சந்தேகம் ஒரு துளி கூட ஒரு நாளும் வரவேயில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடு திரும்பிய முரளி எதுவுமே வீட்டில் கூறவில்லை. மாலையில் ரூபன் வந்து வியாபார கணக்கு பார்த்து பணத்தையும் ஒப்படைத்து விட்டு வீடு சென்றான்.

மறு நாள் சந்தைக்கு காய்கறியுடன் புறப்பட்டான் ரூபன். இன்று சந்தை எங்கு நடைபெறுகின்றது என்பதனை உறுதிப்படுத்திக் கொண்டு வெளி ஊரில் இருக்கும் ஒரு நண்பனை அழைத்து ரூபனிடம் மரக்கறிகளை வாங்கிவிட்டு அலுவலகத் தேவைக்காக என பற்றுச் சீட்டினையும் வாங்குமாறு முரளி அறிவுறுத்தியிருந்தார் தன் நண்பனிடம்.

மாலையில் கணக்குகள் பார்க்கும் போது, தன் வீட்டார் அனைவரையும் அருகே அழைத்தார் முரளி. கணக்குப் பார்த்து பணத்தை ஒப்படைக்கும் போது, தன் நண்பனுக்கு ரூபன் வழங்கிய பற்றுச்சீட்டை அவனுக்கு காண்பித்தார். ரூபன் பதறிப் போய்விட்டான்.

ஒவ்வொரு மரக்கறியிலும் கிலோ ஒன்றிற்கு ஐந்து உருபா எடுத்திருக்கிறான். ஒரு நாளைக்கு ஐநூறு கிலோவில் இரண்டாயிரத்துஐநூறு உருபா திருடியிருக் கிறான் என்பதனை முரளி தன் வீட்டாருக்கு தெளிவு படுத்தினார்.

நேற்று ரூபனின் தங்கையின் கழுத்தில் கண்ட சங்கிலியைப் பற்றியும் சொன்னார்.

ரூபன் செய்வதறியாது தவித்தான். முரளி அதிகம் பேசவில்லை. இன்றுடன் உனக்கும் என் வீட்டிற்கும் உள்ள உறவு முறிந்தது என்று கூறிவிட்டு வங்கிக் கணக்குப் புத்தகமொன்றை அவனிடம் கொடுத்தார். ஒவ்வொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளும் நீ தருகின்ற இலாபத்தில் இருபதில் ஒரு பங்கு உனக்கு என இந்தக் கணக்கில் போட்டு வைத்திருக்கிறேன். இதையும் நீ கொண்டு போகலாம்.

ஆனால் நீ என் வீட்டில் திருடிய அனைத்துப் பொருட்களையும் இன்று மாலைக்குள் ஒப்படைக்க வேண்டும் என்ற முரளியின் வார்த்தைகளில் கண்டிப்பும் அசுரத்தனமான கோபமும் இருந்தது. மன்னிப்பும் கேட்பதற்கு தகுதியில்லாதவனாக அழுத கண்ணீருடன். அவ்வீட்டிலிருந்து இறுதிநாளில் வெளியேறினான் ரூபன்.

## வீராவின் சிலாப்பியாக்கள்

வீரா புதிதாக அந்த ஊருக்கு வந்தான். இரவு நேரத்தில், அந்தப் பாலத்தருகே நின்று, இறால் வீசுவதை பலமணி நேரங்கள் இரசிப்பான். நான்கு ஐந்து மணித்தியாலங்கள் நீரின் குளிரில் நின்று தமது வயிற்றுப் பிழைப்பிற்காக துன்பப்படுகின்றார்களே என எண்ணிக் கவலை கொள்வான். சில நாட்களில் இறால் இன்றியே வீடு செல்வார்கள். சில நாட்களில் கொட்டும் மழையினுள்ளும் நனைந்து நனைந்து இறால் பிடிப்பார்கள்.

வீரா நீரியல் அபிவிருத்தித் திணைக்களத்தின் ஓர் உயரதிகாரி. இந்த மக்களது வாழ்வாதாரத்திற்கான எளிய வழிகளை அறிமுகப்படுத்த எண்ணினான். ஆற்றில் இறால் வீசுகின்றவர்கள் அனைவரையும் ஒரு சந்திப்பினூடாக கலந்துரையாடினான்.

"இறால் தங்களது இனத்தினைப் பெருக்குவதற்காக முட்டைகளை இடுவதற்காகவே, ஒரு குறிப்பிட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடத்திற்கு வருகின்றன. குஞ்சுகள் அவ்விடங்களுக்கு வருவதில்லை. அதனால் தான், நீங்கள் ஒரு இடத்திலேயே நின்று கொண்டு, இறால் பிடிக்கின்ற போது, அவ்விடத்தில் தொடர்ந்து உங்களால் இறால் பிடிக்கக் கூடியதாய் இருக்கின்றது. இது உங்களுடைய பிரதேசத்தில் மாத்திரமே இந்த நாட்டில் நடை பெறுகின்றது." என்ற அறிவுபூர்வமான விளக்கத்தை வழங்கிய போது அனைவரும் வியப்பிற்குள்ளாகினர்.

"உங்கள் அனைவரையும் ஒரு சங்கமாக்கி, அதனூடாக நண்டு வளர்ப்பினை செய்வதற்கு உத்தேசித்துள்ளேன். உங்களுக்கு விருப்பமெனில் செய்யலாம்" என்றான்.

அனைவரும் ஒரே குரலில் சம்மதம் தெரிவித்தனர். சங்க நிருவாகிகள் தெரிவு செய்யப்பட்டனர். பதிவுகளை தான் செய்து தருவதாக வீரா கூறினான்.

யாரும் எதிர்பாராத வகையில், இரண்டு நாட்களில் பதிவுச்சான்றிதழ் கைக்குக் கிடைத்தது. ஒரு வாரத்தில் இரண்டு நெகிழி (பிளாஸ்ரிக்) வள்ளங்கள் சங்கத்திற்கு வழங்கப்பட்டன.

நண்டு வளர்ப்பு சம்பந்தமான பயிற்சிகள் அனைத்து சங்க உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டன. ஆற்றினுள்ளும் ஆற்றிற்கு வெளியேயும் வளர்ப்பதற்கான நடவடிக்கைகள் சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டன.

ஆறு மாதத்தில் மாவட்டத்தில் உள்ள சந்தைகள், உல்லாச விடுதிகள் அனைத்திற்கும் நண்டுகளும் இறாலும் அனுப்பப்பட்டன. மேலதிகமானவை கொழும்பிற்கு அனுப்பப்பட்டன. அனைத்து சந்தைத் தொடர்புகளையும் வீரா ஏற்படுத்திக் கொடுத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவசாயச்சங்கங்களுடன் தொடர்புகொண்டு சிறிய குளங்களில் நன்னீர் மீன்வளர்ப்பையும் தொடங்கினான் வீரா.ஓர் ஆண்டில் நண்டு, இறால், சிலாப்பியா இன நன்னீர் மீன் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான முயற்சிகள் சங்கத்தினால் தொடங்கப்பட்டது.

தற்போது, அவ்வூரில் வீராவின் வழிகாட்டலினால் ஒவ்வொரு குடும்பத்தினரும் வருமான அதிகரிப்புடன் மகிழ்ச்சியான வாழ்க்கையை வீரா மீதான நன்றி யுணர்வுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

## மாற்றுங்கள்

முன்னால் வந்த வாகனத்தின் முன்விளக்கு கடும் பிரகாசத்துடனேயே வந்தது. மாலை ஏழு மணியிருக்கும். மதி உந்துருளியில், தனது வேகத்தை மணிக்கு நாற்பது கிலோமீற்றர் அளவிற்கு குறைத்தான்.

எத்தனையோ தடவை முன்னால் வரும் வாகனத்தின் வெளிச்சத்தை குறைக்குமாறு, சமிக்ஞை காட்டியும் பலன் அளிக்கவில்லை. மதிக்கு முன்னால் எதுவுமே தெரியவில்லை. வாகனம் அவனைக் கடக்கும்போது மளார் என சத்தம் கேட்டது. அந்த இடத்திலிருந்து சுமார் பத்து மீற்றர் தூரத்தில் சோளங்கதிர் சாப்பிட்டுக்கொண்டிருந்தவர்களில் ஒருவர்

"ஐயோ மாட்டில யாரோ மோதிற்றாங்க" என்று கூறிக் கொண்டே அவ்விடத்திற்கு ஓடினார். மதிமயங்கி யிருந்தான். உந்துருளி நொருங்கியிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீதியில் வந்த முச்சக்கர வண்டியொன்றை நிறுத்தி, அதில் மதியை ஏற்றி அனுப்பினான். மதிக்கு ஆரம்ப சிகிச்சைகள் மின்னல் வேகத்தில், அந்த தளமருத்துவமனையில் நடைபெற்று மேலதிக சிகிச்சைக்காக பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டான்.

விபத்துச்சேவை பிரிவில் சேர்க்கப்பட்ட மதிக்கு சுமார் அரை மணிநேரம் எந்தவிதமான சிகிச்சைகளும் வழங்கப்படாமை உறவினர்களுக்கு விசனத்தை ஏற்படுத்தியது.

மருத்துவமனை பொறுப்பதிகாரியிடம் சென்று நண்பர்கள் பேசினார்கள். அதன்பின்னரே சிகிச்சை தொடங்கப்பட்டது. அதிதீவிர சிகிச்சைப் பிரிவிற்கு மாற்றப்பட்டு, சத்திரசிகிச்சை செய்யப்பட்டு பின்னர் சாதாரண களத்திற்கு மாற்றப்பட்டு, பதின்மூன்று நாட்களின் பின்னர் வீடு செல்லலாம் என மருத்துவர்கள் தெரிவித்தார்கள்.

மருத்துவமனையிலிருந்து வெளியேறிய மதி வீடு செல்லவில்லை. தனக்கு விபத்து நடந்ததிலிருந்து நடைபெற்றவைகளை நண்பர்கள் மூலமாக நன்கே அறிந்து வைத்திருந்தான்.

மருத்துவமனைக்குழுவின் தலைவரின் வீட்டுக்குச் சென்றான். தனக்கு நடைபெற்ற அசௌகரியங்களையும் மருத்துவமனையில் தான் இருந்த நாட்களில் கண்டு கொண்ட முறைகேடுகளையும் குறைபாடுகளையும் எழுத்தில் கொடுத்தான்.

மருத்துவமனைக்குழுத் தலைவர் கவலையடைந்தார். தனது வருத்தத்தையும் நன்றியையும் தெரிவித்தார். எழுத்துமூலமாக ஒரு முறைப்பாட்டினை முதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையாக பெற்றுள்ளதாகவும் அதற்காகவே நன்றி தெரிவித்ததாகவும் தலைவர் கூறினார்

உடடினயாக மருத்துவமனைக்குழுக் கூட்டத்திற்கான அழைப்பு விடுக்கப்பட்டு, கடித விடயம் பல நேர விவாதங்களுடன் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

உடனடியாக அமுலுக்கு வருகின்ற வகையில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவை சுகாதார அமைச்சருக்கும் அனுப்பிவைக்கப்பட்டன.தலைவரிடம் கடிதத்தினை ஒப்படைத்து விட்டு மதி கூறிய கருத்துக்களை கூட்டத்தில் பகிர்ந்துகொண்டார் தலைவர்.

"நான் உயிர்பிழைத்தது, இந்த மருத்துவமனையில் நடைபெறுகின்ற குறைபாடுகளை நிவர்த்திப்பதற்காக என்றே நான் நினைக்கின்றேன். அதனை நீங்கள் நிறைவேற்றுவீர்கள் என்று நம்புகின்றேன். அவ்வாறு நடைபெறவில்லை என்றால் நடைமுறைப் படுத்துவதற்கான நடவடிக்கைகளை நான் மக்களை ஒன்றுதிரட்டி எடுப்பேன். மருத்துவமனையில் உள்ளவர்களுக்கு மட்டுமே போராட்டம் நடத்தத் தெரியும் என்று நினைக்க வேண்டாம். அனைத்திற்கும் ஆதாரங்கள் வைத்திருக்கிறேன். விரைவாக மக்கள் நலனை உறுதிப்படுத்துங்கள்" என்பதே மதியின் வார்த்தைகள்.

## திருத்தப்படும் நடைமுறைகள்

சந்திரனை காவல்துறை இடைமறித்து உந்துருளியில் செல்லும் போது, கைப்பேசியில் கதைத்துக் கொண்டு சென்றது என்பதே குற்றச்சாட்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நேரம் பார்க்கவே கைப்பேசியை கையில் எடுத்தேன்" என்ற உண்மையைச் சொல்லிப் பார்த்தான். பலனில்லை.

நீதிமன்றிற்கு வந்து சாரதி அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளுமாறு கூறி வாங்கி வைத்துக்கொண்டனர். வழக்காட வேண்டும் என்ற ஆத்திரத்துடன், தன் நண்பன் சட்டத்தரணி ராகுலிடம் சென்று விபரத்தைக் கூறினான்

"இது தேவையில்லாத வேலை உனக்கு. தவணை போட்டுக் கொண்டிருப்பார்கள். வீதியில் போகும்போது, மீண்டும் உன்னைப் பிடிப்பார்கள். தேவையா உனக்கு? அதில வச்சே ஒரு ஐநூறு உருபா குடத்திருந்தியெண்டா சிக்கல் முடிஞ்சிருக்கும்" என்ற சட்டத்தரணியின் கருத்துக்களை எரிச்சலுடன் உதாசீனம் செய்துவிட்டு நகரில் பிரபலமான சட்டத்தரணி ஜோசப் வீட்டிற்கு சென்றான். விபரமாக சொன்னான்தன் தேவையினை.

"இப்பிடி உங்களப் போல ஆக்கள் துணிஞ்சாத்தான் இவனுவள்ற கொட்டத்த அடக்கலாம். நான் வெண்டு தாறன்" மகிழ்வடைந்தான் சந்திரன்.

நீதி மன்றத்திற்கு முதன்முதலாகச் செல்கின்றான். இரண்டாவது வரிசையில் இருந்த இருக்கையில் அமர்ந்திருந்தான். ஒன்பது அரை மணிக்கு நீதவான் வருவதாக சொன்னார்கள். பத்து மணிக்கு வந்தார்.

ஐம்பது பேர் மாத்திரம் இருக்கக்கூடிய இடத்தில் இருநூறு பேர் வரையில் நின்றுகொண்டிருந்தார்கள். சந்திரனை பன்னிரண்டு மணியளவில் கூப்பிட்டார்கள். குற்றவாளிக் கூண்டில் ஏறினான். சட்டத்தரணி எழும்பி வந்து புதிதாக திருமணமான தம்பதிகள் பேசுவது போன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதிபதியிடம் ஏதோ கதைத்தார். சந்திரனுக்கு எதுவும் கேட்கவில்லை.

'குற்றவாளியா? சுற்றவாளியா?' என்றார்கள்.

சுற்றவாளியென பதில்.

இரண்டு மாதங்களின் பின் அடுத்த தவணைக்கான நாள் சந்திரனிடம் கொடுக்கப்பட்டது. வழக்கு முடிந்த பின்னரே சாரதி அனுமதிப்பத்திரம் தரப்படும் என்ற தகவலும் கிடைத்தது.

நீதிமன்ற நடைமுறை வெறுப்பேற்றியது. மனித உரிமைகள் மதிக்க வேண்டிய இடம் முதலில் நீதிமன்று தான். எல்லோர் முன்னிலையிலும் எப்படி மற்றவர்களின் விடயங்கள் அலசலப்படலாம். முறையற்ற நிருவாகம்.

காலையில் சென்று எவ்வளவு நேரம் காத்திருக்க வேண்டியிருக்கிறது. தண்டப்பணம் செலுத்த எவ்வளவு நேரம் காத்திருக்க வேண்டியிருக்கிறது. மாற்றப்பட வேண்டும். என்ன செய்யலாம் என்று சிந்தித்தவன் நீதி அமைச்சருக்கு கடிதம் எழுதலானான்.

மூன்று மாதங்களின் பின்னர், காவல்துறை சந்திரனை கைது செய்தது. கடந்த மாதம் வழக்கிற்குச் செல்ல மறந்து விட்டான். பிடியாணை நீதிமன்று பிறப்பித்திருந்தது.

வெள்ளிக்கிழமை மாலை கைது செய்தார்கள். திங்கள் நீதிமன்று. காவல்நிலையத்தில் மூன்று இரவுகள் துன்பமாக கழிந்தது. திங்கட்கிழமை நீதிமன்றில் மேலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரு மாதங்கள் தவணை கிடைத்தது. வக்கீலுக்கு இம்முறையும் ரூபா ஆயிரத்து ஐநூறை வழங்கி விட்டு தன் நண்பன் பட்டறிவாளன் என்பதை தற்போது உணர்ந்தான் சந்திரன்.

அடுத்த தவணையில் ஒருவாறு, தனக்குச் சார்பான தீர்ப்புடன் மனஉளைச்சல் நிறைந்த சிறிய மகிழ்வுடன் வீடு சேர்ந்தான்.

அடுத்த ஆண்டில் ஒருநாள் சாரதி அநுமதிப் பத்திரம் இன்றி பிடிபட்டுவிட்டான். காவல்துறைக்கு பணம் கொடுக்க விரும்பவில்லை. அரசிற்கே செலுத்துவோம். காவல்துறையிடமிருந்து தண்டச்சிட்டையைப் பெற்றுக் கொண்டான்.

இரண்டு நாட்களில் தபால்காரன் கடிதம் கொண்டு வந்து கொடுத்தான். நீதிமன்றிற்கு காலை பத்து இருபதுக்கு வரும்படி தெரிவிக்கப்பட்டிருந்தது. பத்து மணிக்குச் சென்றான்.

நீதி மன்றின் முன்னால் பெரிய மண்டபத்தில் இருக்கச் சொன்னார்கள்.வக்கீலிடம் கதைத்த போது, இப்ப இப்படியான வழக்குகளிற்கு வக்கில் தேவையில்லை என அரசு அறிவித்துள்ளதாக கூறினார். பத்து இருபத்தைந் திற்கு சந்திரனை அழைத்தார்கள். அங்கு தனிமையில் வழக்கு விசாரிக்கப்படுவதற்கான ஒழுங்குகள் செய்யப் பட்டிருப்பதை கண்டு மகிழ்வடைந்தான் சந்திரன். தனது கடிதம் மூலமான ஆலோசனைகளுக்கு அதிகமாகவும் நடைமுறைகள் மாறியிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கு தானும் ஒரு காரணம் என்பதை தன்னிலையில் நினைத்து மகிழ்ந்தான். தண்டமாக ஆயிரம் உருபா செலுத்தும்படி நீதவானின் தீர்ப்பு. கூண்டில் அடைக்கவில்லை. கணணிமயப்படுத்தப்பட்ட பற்றுச்சீட்டு ஒரு மணித்துளி கூட ஆகவில்லை. மகிழ்ச்சியின் எல்லைக்கே சென்றிருந்தான் சந்திரன்.

"நீதிமன்றங்கள் சிறப்பாகச் செயற்பட்டால் குற்றத்திற்கெதிராக நீதி கேட்பதற்கு மக்கள் நீதிமன்றை நாடுவார்கள். மக்கள் நீதிமன்றை நாடினால் தவறுகள் குற்றங்கள் நாட்டில் இல்லாது ஒழியும்" என்ற உன்னதமான சிந்தனையுடன் வீட்டிற்குச் சென்றான் சந்திரன்.

## அர்ப்பணிப்பு+விடாமுயற்சி= முதல்நிலை

அது ஓர் அழகிய கடற்கரை ஊர். மூத்தவன் குமாரின் குடும்பத்தில் எட்டு உருப்படிகள். குமார் படிப்பில் கெட்டிக்காரன் மட்டுமல்ல அதிகளவான ஆர்வமும் உள்ளவன். குடும்பநிலை படிப்பை இடை நடுவே முடிப்பதற்கு. தடை போட முயற்சித்தும் முடியாமல் போய் விட்டது.

ஒரு நேர உணவு உண்பதே சிரமமான நிலையில் அவனது இளம் பராயம் கழிந்தது. பல நாட்கள் அம்மா சிலரது பெயரைச் சொல்லி பணமோ அரிசியோ வாங்கி வரச்சொல்லி குமாரை அனுப்புவார். பணம் உள்ளவர்களான அம்மா சொல்லாதவர்களிடமும் சென்று வெறுங்கையுடன் வந்து குடும்பமே நீரையே தங்கள் உணவாக அன்றைய நாளில் மாற்றிக்கொள்ளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படியோ அம்மா, அப்பாவின் முயற்சி, குமாரின் வெறித்தனமான கல்வி ஆர்வம், விடாமுயற்சி, தன்னம்பிக்கை போன்றவற்றால் குடும்பத்தில் அனைவருமே படித்து நல்ல நிலைக்கு சிறப்பான வாழ்க்கை வாழ்கின்ற வேளை சுமார் இருபத்தைந்து ஆண்டுகள் கடந்திருக்கும்

ஆழிப் பேரலை வந்து, ஊரே அழிந்தது. பலர் உயிரிழந்திருந்தனர். சேதி கேள்விப்பட்டு குமார் உடனடியாக ஊர் சென்றான். அனைவருக்கும் தேவையான கொட்டில்கள் தனது செலவிலேயே அமைத்தான்.

அனைவருக்கும் தேவையான உணவுகளையும் அவனே ஒழுங்கு செய்தான்.

தர்மசிங்கம் ஐயா ஊரில் முன்னர் பெரிய செல்வந்தர். குமார் பல தடவைகள் அவரிடமும் சென்று உதவி கேட்டிருக்கிறான். இல்லை என்று சொன்னாலும் பரவாயில்லை உனக்கெல்லாம் எதுக்கு படிப்பு போய் மீனைப் பிடிச்சு குடும்பத்தைப் பார். என்று பல தடவைகள் கூறியிருக்கிறார். அவரின் வார்த்தைகளும் குமாரை உசுப்பேற்றியிருக்க வேண்டும்.

"அழுதவாறே என்னை மன்னித்துவிடு, தம்பி" என்ற அவரின் வார்த்தைகள் குமாருக்கு காதில் தேனாக இனிக்கவில்லை.

"இல்லை ஐயா, நீங்களும் உதவியதனால்தான் நான் இப்ப பல்கலைக் கழகத்தில் பீடாதிபதியாக வர முடிந்தது" என கண்களில் நீர் கசிய குமார் கூறியதை, அம்மா மகிழ்ச்சியுடன் பார்த்துக் கொண்டிருந்தார் ஒரு மனக் கர்வத்துடன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்மாவின் கண்ணா மட்டி

இர்சாத் வீதி ஓரத்தால் நடந்துகொண்டிருக்கும் போது, கரன் உந்துருளியில் அவ்வழியால் வந்தான். "ஏன் தம்பி பள்ளிக்கூடம் ஒன்பது மணிக்கே விட்டிற்றாங்களா"

"இல்ல. சுற்றுலா போறாங்க. என்னட்ட நூறு ரூபா சல்லி இல்ல.அம்மா காசு இல்ல எண்டு செல்லிப்போட்டா. அதால நான் போகல. என்னய ரீச்சர் வீட்ட போகச் செல்லிப் போட்டா"

"நூறு உருபா தந்தா நீயும் போவியா"

"இல்ல. உம்மா சும்மா ஆரிட்டயும் காசி வாங்கப் பொடா எண்டு செல்லியிருக்காங்க" கரனுக்கு கவலையாகவும் இருந்தது.

இர்சாத்தின் பிஞ்சு நெஞ்சில் எவ்வளவு வேதனை நிறைந்திருக்கும் என்று எண்ணியவாறு "தம்பி ஏறு கொண்டு போய் வீட்டருகில் இறக்கி விடுறன்" இர்சாத் உந்துருளியின் பின்னிருக்கையில் ஏறி அமர, கரனின் வலது கை முறுக்கல் வேகத்தை அதிகரித்தது. வீடு வரும் வரை இர்சாத்துடன் பேசியதிலிருந்து அவன் நேர்மையாக வளர்க்கப்படுகிறான்.

அப்பா விறகு வெட்டி விற்பது தொழில், அம்மா கண்ணாவில் மட்டி எடுத்து வீதியருகில் வைத்து விற்பது கரனுக்கு தகவலாக வழங்கப்பட்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இர்சாத்தை அவனது வீட்டருகில் இறக்கி விடும் போது, இர்சாத்தின் வீட்டு வளவினுள் வேப்ப மரங்கள் பல பூத்து இருப்பதை கரன் அவதானித்தான்.

இர்சாத்திற்கு ஏதாவது சிறப்பான வழிகாட்டல் வழங்க வேண்டும் என்ற எண்ணத்தை கரன் உருவாக்கிக் கொண்டான்.

"தம்பி, உங்கட வளவினுள் இருக்கிற வேப்ப மரத்தில இருக்கிற பூவ நீ ஆய்ஞ்சு தந்தியெண்டா உனக்கு நான் காசு தருவன்" என்றவுடன்

"எவ்வளவு வேணும்" முகத்தில் பிரகாசத்தைக் கண்டான் கரன்.

"எவ்வளவெண்டாலும் பரவாயில்லை" பின்னேரம் திரும்பி வரும் போது, இர்சாத் வைத்திருந்த வேப்பம்பூ வைப் பெற்றுக்கொண்டு ஐம்பது ரூபா கொடுத்தான் கரன்.

"நாளைக்கும் ஆய்ஞ்சு வக்கட்டா"

மறுநாள், அதற்கடுத்த நாள் என பதின்மூன்று நாட்களில் தொள்ளாயிரத்தி ஐம்பது உருபாக்கு விற்பனை செய்திருந்தான் இர்சாத்.

"பூவக் கொண்டு போய் என்ன செய்யிறீங்க"

ஒன்பது வயது இர்சாத்தின் கேள்வியில் ஆர்வம் இருந்தது.

"வடகம் செய்து ரவுணில இருக்கிற ஆனந்தபவன் கடைக்கு குடுக்கிறனான்"

"நாங்க வடகம் செய்யிறதுக்கு சொல்லித் தருவீங்களா?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளை கொண்டு வந்து கொடுக்கும் பூவை வடகமாக மாற்றினாள் அன்னை.சில நாட்களில் தந்தை நகரில், உள்ள சைவக் கடைகளிற்கு வடகம்,மோர்மிளகாய், ஊறுகாய் என்பவற்றைக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளை செய்தவன் கரன். விறகினாலும் மட்டியினாலும் வந்த வருமானத்தை விட பல மடங்கு வருமானம் தற்போது குடும்பத்திற்கு கிடைத்தது.

"நல்லா படிக்கவேணும் "என்ற கரனின் வார்த்தைகள் எப்போதும் இர்சாத்தின் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கும்.

அடுத்த ஆண்டு நடைபெற்ற ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் புள்ளி பெற்றது பள்ளிக்கூடத்தில் அனைவரதும் கவனத்தையும் இர்சாத்தினால் ஈர்க்கக்கூடியதாய் இருந்தது.

சாதாரணதரத்தில் பாடசாலையில் அதிசிறந்த பெறுபேறு. உயர்தரத்தில் வலயத்தில் சிறந்த பெறுபேறு என கல்வியில் முன்னணியில் திகழ்ந்தான். நான்காம் வகுப்பிலிருந்து இன்று வரை இர்சாத் தனது பணத்தில் தான் படித்துக் கொண்டிருக்கிறான்.

வேப்பம்பூ, வேம்பங்கொட்டை, நாவல்கொட்டை வீட்டிற்கு விற்பனை செய்வதே இர்சாத்தின் வருமான மூலங்கள். வடகம், வேப்பெண்ணை, நாவல்கொட்டைத்தூள் தயாரித்தல் அம்மாவின் தொழிலாகியது. நாவல் கொட்டைத்தூள் நீரிழிவு நோய்க்கு நல்லது என அந்நாளில் கரன் உருவாக்கிய வருவாய் ஊடகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரனின் தொடர்புகள் எதுவுமே தன்னிடம் இல்லாமல் போய்விட்டதனை எண்ணி தினமும் கவலைப்படுவான் இர்சாத்.

"அந்த ஐயா இல்லாட்டி நாம எங்க இப்பிடி வாற உம்மா" என்று பல தடவைகள் அம்மாவிடமும் அப்பாவிடமும் கேட்டிருப்பான் இர்சாத்.

பல்கலைக்கழகத்தில் நாவல் மரத்திலிருந்து நாவல் பழங்களை பறிப்பதற்கும் அவற்றை சாறாக்கி பழரசமாக மாற்றுவற்கும் விதைகளை பொடியாக்கி பொதி செய்வதற்குமான இயந்திரங்களை வடிவமைப்பதே இர்சாத்தின் செயற் திட்டமாக இருந்தது. அதில் வெற்றியும் பெற்றான்.

பல்கலைக் கழகப் படிப்பு முடிந்த பின், தனது ஊரில் தனது கண்டுபிடிப்புகளை பயன்படுத்தி தொழிற்சாலை நிறுவியதன் மூலமாக கிடைத்த வருமானத்தில் வாழ்வதற்கு அழகிய வீடு கட்டியிருந்தான்.

"இந்த நாவல்பழ பானம் எவ்வளவு தம்பி" என்று ஒரு வயோதிபர் கேட்க" நான் கேட்ட குரலாக இருக்கே" என்று இர்சாத் ஓடிவந்து பார்ந்தான். நரைத்தலையும் தாடியுமாக கரன் நிற்பதைக் கண்டு அளவற்ற மகிழ்ச்சியில் கட்டித் தழுவினான்.

"எனக்கு தெரியும் இர்சாத் நீ பெரிய ஆளா வருவா எண்டு." என்று தனது பங்கிற்கு கரனும். அன்றைய மதிய உணவை இர்சாத்துடன் இரண்டு வயிறு நிரம்பிய மகிழ்ச்சியில் விடைபெற்றார் கரன் எனும் கருணாகரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணாடி மண்டயின் உனக்குள் நீ

பூவரசனின் நெஞ்சு படபடத்துக் கொண்டிருந்தது. நடுப்புள்ளித் தேற்றத்தை தன்னுடன் படிக்கும் பள்ளித் தோழர்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும் என்பது அவனது கணித ஆசிரியர் நித்தியானந்தனின் நேற்றைய கட்டளை.

"கணக்கு சுத்தமாவே தலயில ஏறவே ஏறாத பூவரசனை மாட்டி விட்டுற்ரார்றா நம்மட கண்ணாடி மண்ட" என்று கூறி வகுப்பில் ஒன்றாக படிக்கும் நாகையன் சிரித்தை காதில் வாங்கிகொண்டான் பூவரசன். படபடப்பு அதிகமாகியது.

கையில் நீளப் பிரம்புடன் வகுப்பறைக்குள் வந்தார் நித்தி என்று அனைவராலும் அழைக்கப்படும் நித்தியானந்தம். அழைக்காமலே கரும்பலகை அருகில் சென்றான் பூவரசன்.

கதிரையிலிருந்த கணித ஆசிரியர் எழுந்தததுதான் தாமதம் பூவரசனின் காற்சட்டைகள் ஈரமாகி முழங்காலின் உள்பக்கம், கெண்டைக்கால் என வகுப்பறையும் ஈரமாகியது. ஒன்பதாம் தர மாணவன் இப்படியான செயலில் ஈடுபட்டது. இதுவே கணித ஆசானுக்கு முதல் பட்டறிவாக இருந்தது.

பூவரசனை பள்ளி முதல்வரின் ஒப்புதலுடன் வீட்டுக்கு அனுப்பி வைத்தார் நித்தி.அந்தக் கிழமை முழுவதும் அவன் பள்ளிக்கு வரவில்லை. பள்ளித் தோழர்கள் அவனது வீட்டுக்குச் சென்று கதைத்ததில் இனிமேல் படிப்பைத் தொடரும் நோக்கம் இல்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதனை அறிந்து கொண்டார்கள். நித்திக்கும் தகவல் பரிமாறப்பட்டது.

சனிக்கிழமை நித்தி பூவரசன் வீட்டுக்குப் போனார். பூவரசன் வீட்டிற்குள் இருந்து வெளிவரவில்லை. அம்மா எவ்வளவோ சொல்லியும் அவன் வெளியே வரவில்லை. நித்தி உள்ளே சென்று அவனைக் கூட்டி வந்து முற்றத்தில் இருந்த மாமரத்தின் கீழ் இருந்து தனிமையில் கதைத்தார்.

கணித பாடத்தில் உள்ள சிக்கல்களை முதலில் சொன்னார். பின்னர் எவ்வளவு எளிதான பாடம் என்பதை தெளிவுபடுத்தினார். "முட்டை வாங்கக்கூடியதும் நூறு வாங்கக் கூடியதுமான ஒரேயொரு பாடம் கணக்குத்தான்" என்று கூறினார்.

"கேத்திர கணிதம் நன்றாகச் செய்யும் ஒரு மாணவன் கணக்குச் செய்வான். கணக்குப் பாடம் செய்யும் ஒரு மாணவன் விஞ்ஞானம் செய்வான். விஞ்ஞானம் நன்றாகச் செய்யும் ஒரு மாணவன் எல்லாப் பாடத்தையும் செய்வான்" என அறிவுரைத்தார்.

"கேத்திர கணிதம் மிகவும் எளிதானது. அதில் கொஞ்சம் கவனம் செலுத்தினால் போதும். கணிதத்தில் விருப்பு வந்துவிடும். அத நீ செய்வாய். உன்னட்ட அந்த ஆற்றல் இருக்கு. மற்றவர்களை விட உனக்கு கேட்கும் திறன் அதிகம் என்றத நான் பாத்திருக்கன்." என தட்டிக் கொடுத்தார்.

பூவரசன் தன் மனதில் ஒருவித மாறுதல்கள் ஏற்படுவதை அவனாகவே உணர்ந்தான். முயற்சித்துப் பார்ப்பம் என்ற எண்ணம் மெதுமெதுவாக ஊறிக் கொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எளிதாக நினைவு வச்சிருக்கக்கூடிய முறைய நான் உனக்குச் சொல்லித்தாறன். அப்படி முயற்சி செய். கணக்கு தானாக வரும்" என சொல்லிக்கொடுத்தார்.

"முதலில் படிக்கின்ற விடயத்தை நன்றாக விளங்கிக் கொள்ள முயற்சி செய். பின்னர், அத உன்ர ஒரு நண்பனுக்கு விளங்கப்படுத்திப் பார் இல்லாட்டி நீயாகவே எழுதிப் பார். பிறகு திரும்பவும் படிச்சத எடுத்துப் பார். திரும்ப புத்தகத்தில் இருக்கிற சிக்கலான சொற்களைத் தவிர்த்து உன்னுடைய இயல்பான மொழியில் மீண்டும் விளங்கப்படுத்த முயற்சி செய். உன்னுடைய வாழ்நாளில் ஒரு நாளும் மறக்காது" என படிக்கும் முறையைத் தெளிவு படுத்தினார்.

பள்ளிக்கு வருவதற்கு உடன்பட்டான். பூவரசன் பள்ளிக்கு வந்தபோது யாரும் சிரிக்காத வகையில் மாணவர்களை தயார்படுத்தி வைத்திருந்தார் நித்தி. நாகையன் கூட எதுவும் சொல்லவில்லையே. இதுவும் நித்தி ஐயாவின் வேலையாகத் தான் இருக்கும் என தனக்குள் எண்ணிக்கொண்டான்.

பூவரசனின் படிப்பில் விரைவான மாற்றங்களை பள்ளித் தோழர்கள் கண்டார்கள். அவனது தோழர்கள் தற்போது எண்ணிக்கையில் கூடியிருந்தார்கள். முன்னரை விட அக்கறையுடன் நடந்துகொண்டார்கள். புரியாத சில கணக்குகளைக் கூட பூவரசன் ஏனைய மாணவர்களுக்கு எட்டு மாதத்தில் தெளிவுபடுத்தும் நிலைக்கு வந்து விட்டான். நித்தி ஐயாவின் அதிகளவான ஈடுபாடும் மேலதிக காரணமாக இருந்தது பூவரசனின் வெளிப் பாடுகளுக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டுகள் பல கடந்தோடின. நித்தி ஐயா ஓய்வு பெற்றுச் சென்று ஏழு ஆண்டுகளாகி விட்டன.

நித்தி ஐயாவின் ஊரில் உள்ள கூட்டுறவுச் சங்கத்தினால் உலக சிறுவர்நாள் கொண்டாடப்பட்டது. அதற்கு முதன்மை விருந்தினராக வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் நிறைவேற்றுப் பொறியியலாளர் பூவரசன் அழைக்கப்பட்டிருந்தான். விழாவில் நித்தி ஐயாவைக் கண்டதில் மகிழ்ந்தவனாக எல்லோர் முன்னிலையிலும் அவரது காலில் விழுந்து அவரது ஆசிகளைப் பெற்ற போது, அங்கு கூடியிருந்த பலரது கண்கள் பனித்தன.

முதன்மை விருந்தினர் உரையாற்றிய பூவரசன் நிறைவில் ஒரு சிறு கவி என கூறி தனது உரையை முடித்தான். அனைவரும் சிரித்துக்கொண்டே மகிழ்ச்சியாயிருந்தனர்.

உரை நிறைவுக் கவி இப்படியிருந்தது.

வேப்பங்காய் கணிதம்
தித்தித்தது நித்தியால்
பின்வாங்கார் முன்வாங்கார்
முன்வாங்கார் பின்வாங்கார் என்றார்
கற்றாரைக் கற்றார் காமுறுவர் என்றார்
தட்டிக்கொடுத்து முட்டிப்பார்க்கச் செய்தார்
வெற்றிக் கனி பறிக்க
கடினமாய் உழை என்றார்
கணிதம் படிக்க
ஒரு வழி நான் சொல்வேன்
வகுப்பறையில் மூத்திரம் பெய்யுங்கள் என்பேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலாசிரியரைப் பற்றி



கதிரவேலிப்பிள்ளை திருச்செல்வம் அவர்கள் என் போன்றவர்களால் அண்ணாச்சி என்றே அழைக்கப்படுபவர். இழகிய மனங்கொண்டவர். ஆனால் கடினமான மக்கள் செயற்பாட்டாளன். மக்களது குறிப்பாக ஏழை மக்களது வாழ்நிலையினை உயர்த்த வேண்டும் என்பதும் ஊரக மக்களது கல்வி நிலையினை உயர்நிலைக்கு கொண்டு செல்ல வேண்டும் என்பதுவுமே அவரது எந்நேரச் சிந்தனைகளும்.

தமிழை கலப்பின்றி தமிழ்பேசும் அனைவரும் பேச வேண்டும் என்பதும் தமிழர்கள் தமது பண்பாட்டினை பேண வேண்டும் என்பதும் திருச்செல்வம் அண்ணாச்சியின் அவா.

திரு. இ.அருட்செல்வன்.
பொறுப்பதிகாரி – சிறுவர் நன்னடத்தைத் திணைக்களம். மூதூர்.

என் மதிப்பு மிகு ஆசான் திருவாளர் தா. ஜெயவீரசிங்கம் அவர்களின் விருப்பமிகு மாணவன். இன்று சமூக சிந்தனை மிக்க ஒரு எழுத்தாளனாய் இந்த நூலின் மூலம் அறிமுகமாகிறான் கவிதை கட்டுரை கதை என ஈழத் தமிழ் இலக்கியத்தில் புதிய சிநதனைகளை பாய்சசும் எழுத்தாய் ஆக்கங்கள் அணி சேர்க்கின்றன முகநூலில் திருச்செல்வத்தின் தீவிரமான அரசியல் பதிவுகள் ஒரு முற்போக்கு முகததை தெளிவுபடுத்தி நிற்கின்றன எழுத்தில் மாத்திரமல்ல செயலிலும் ஒரு சமூகப் போராளியாய் நான் இனம் காண்கிறேன்

பேராசிரியர் பால. சுகுமார். மேனாள் புல முதன்மையர்
கலை கலாசார புலம் கிழக்குப் பல்கலைக் கழகம்.

எமது மாணவரான இவர். இளம் பராயத்தில் கல்வி கற்கின்ற கலத்தில் உடன் கற்ற மாணவர்களை விட புதிய நோக்கத்தில் சிந்திப்பதும். நடப்பதும். ஏக நேரத்தில் பல விடயங்களை அவதானிப்பதும் கிரகிப்பதும் செயற்படுத்துவதுமாயிருந்தமை இவரிடம் காணப்பட்ட தனிச் சிறப்பு.

விஞ்ஞான கணித பிரிவில் உயர்கல்வி கற்று. பேராதனை பல்கலைக்கழகத்தில் பொறியியல் துறையில் பட்டம் பெற்ற இவர். கலைத்துறையிலும் மிகவும் ஈடுபாடுடையவராவார். அரசியல். சமூக சேவை மற்றும் சமூக சீர்திருத்தங்களிலும் மிகவும் அக்கறை உடையவர்.

க. துரைரெட்ணசிங்கம
நாடாளுமன்ற உறுப்பினர்
திருகோணமலை மாவட்டம்

ISBN 978 624 9565-40-1

9 786249 565401

உருபா. 280.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org